INTERNATIONAL
CENTRE FOR
ETHNIC STUDIES

# உள்ளூராட்சிமன்ற அரசியலும் பாலின யதார்த்தங்களும்

## இருப்பு மற்றும் செல்வாக்கு





உவினி பண்டித

# உள்ளூராட்சிமன்ற அரசியலும் பாலின யதார்த்தங்களும் இருப்பு மற்றும் செல்வாக்கு

உவினி பண்டித

இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்
2026

உள்ளூராட்சிமன்ற அரசியலும் பாலின யதார்த்தங்களும் இருப்பு மற்றும் செல்வாக்கு

© 2026 இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் (ICES)
2, கிங்சி ரெடஸ், கொழும்பு 8, இலங்கை
மின்னஞ்சல் : admin@ices.lk
URL : www.ices.lk

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

ISBN: : 978-624-5502-55-4

இந்த வெளியீடு ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்பட்டது. இதன் உள்ளடக்கங்களுக்கு இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் மட்டுமே முழுப் பொறுப்பாகும், மேலும் அவை ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துக்களைக் கட்டாயமாகப் பிரதிபலிக்க வேண்டியதில்லை.

இந்த நூலின் எந்தப் பகுதியையும், நூலாசிரியர் மற்றும் பதிப்பாளருக்கு உரிய அங்கீகாரம் அளித்து மறுபதிப்பு செய்யலாம்.

INTERNATIONAL CENTRE FOR ETHNIC STUDIES

Funded by the European Union

அட்டைப்படம்: ஆயிஷா ரவுப், விமலா விஜேவர்தன, சந்திரா ரணராஜா, கலாநிதி மேரி ரத்னம், டோரின் விக்கிரமசிங்க, விவின் குணவர்தன மற்றும் அட்லைன் மொலமுரே.

நன்றி: இலங்கை தேசிய நூலகம்

Printed by:
Horizon Printing (Pvt) Ltd.
1616/6, Hatharaman Handiya,
Malabe Road, Kottawa,
Pannipitiya.

# உள்ளூராட்சிமன்ற அரசியலும் பாலின யதார்த்தங்களும் இருப்பு மற்றும் செல்வாக்கு

உவினி பண்டித*

* உவினி பண்டித, இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தில் ஒரு ஆய்வாளர் ஆவார்.

## *நன்றியுரை*

இந்த ஆய்வை மேற்கொள்வதற்கான வாய்ப்பை எனக்கு வழங்கியதற்கும், இச்செயல்முறை முழுவதும் தனது தொடர்ச்சியான வழிகாட்டுதலையும் ஆதரவினையும் வழங்கிய கொழும்பில் உள்ள இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி மாரியோ கோமஸ் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த ஆய்வு, பலரின் கடின உழைப்பின் விளைவாகும். இந்த அறிக்கைக்கு அடித்தளமிட்டு, தரவுகளைச் சேகரிக்க உதவி, இறுதி வரைவை மதிப்பாய்வு செய்த ப்ரயணி ரணசிங்கவிற்கு மனமார்ந்த நன்றிகள். இவரின்றி இந்த ஆய்வு சாத்தியமாகியிருக்காது. மேலும் அவரது பங்களிப்பிற்கு நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். இந்த அறிக்கையின் தொடக்கத்திலிருந்தே அதன் ஒரு முக்கிய அங்கமாக இருந்து, ப்ரயணியுடன் இணைந்து தரவுகளைச் சேகரித்து, பின்னர் அறிக்கையைத் தமிழில் மொழிபெயர்த்த சரண்யா சிவசுப்பிரமணியத்திற்கும் நான் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்கள் பணிச்சுமைக்கு மத்தியிலும் தாராளமாக நேரம் ஒதுக்கி, அறிக்கையை மதிப்பாய்வு செய்து, அதை பெரிதும் வலுப்படுத்தி விரிவான மற்றும் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை வழங்கிய கலாநிதி சூலனி கொடிகார, கலாநிதி நிரேகா வீரதுங்க மற்றும் கலாநிதி சசங்க பெரேரா ஆகியோருக்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆங்கில அறிக்கையை சரிபார்ப்பு செய்த ஜஸ்டின் ஹொரோவிட்ஸுக்கும் நன்றிகள். இந்த அறிக்கையை உள்ளூர் மொழிகளில் மொழிபெயர்ப்பது உண்மையிலேயே ஒரு அன்புப் பணியாகும். இந்த மாபெரும் பணியை மேற்கொண்டதற்கும், மொழிபெயர்க்கப்பட்ட பிரதிகள் வெளிவருவதை உறுதிசெய்வதற்காக இரவு பகல் பாராமல் உடனிருந்ததற்கும் சரண்யா, சதுரங்க திலகரத்ன மற்றும் இனோகா பள்ளியகுரு ஆகியோருக்கு நான் மிகவும் நன்றி கூறுகிறேன். சிங்கள அறிக்கையைப் சரிபார்ப்பு செய்த தேமினி குணசேனவிற்கும், தமிழ் அறிக்கையை சரிபார்ப்பு செய்த ஜனந்தன் தவராஜாவிற்கும் எனது நன்றிகள்.

எப்போதும் உதவிக்கரம் நீட்ட முன்வந்த எனது சக ஊழியர்களான டிரானி விஜேவிக்ரம, மெத்மினி காரியகரவன்ன மற்றும் யேஹானி தொடங்கொட ஆகியோருக்கும், இந்த வெளியீட்டை நிறைவு செய்வதற்கு ஆதரவளித்த ஐஊநுளு குழுவின் மற்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அறிக்கைக்கு ஆதரவளித்தவர்களைத் தாண்டி, தங்களின் பணிகளுக்கு மத்தியிலும் நேரம் ஒதுக்கி எங்களுடன் கலந்துரையாடி, தங்களின் அறிவையும் அனுபவங்களையும் மிகவும் வெளிப்படையாகவும் முழுமையாகவும் பகிர்ந்துகொண்ட முக்கியத் தகவலாளர்களுக்கும் நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், தங்களின் நிறைவான மற்றும் கடினமான அனுபவங்களை மிகுந்த வெளிப்படைத்தன்மையுடனும் நம்பிக்கையுடனும் பகிர்ந்துகொள்ள நேரம் ஒதுக்கிய அனைத்துப் பெண் அரசியல்வாதிகளுக்கும் நான் குறிப்பாக நன்றி கூறுகிறேன். நீங்கள் பேச முன்வந்திருக்காவிட்டால், நீங்கள் சந்தித்த பல சவால்களுக்கு மத்தியிலும் அரசியல் களத்தில் நுழைந்து நிலைத்திருக்கத் தேவைப்பட்ட துணிச்சல் இல்லாமல் இந்த ஆய்வு சாத்தியமாகியிருக்காது.

மேலும், பல ஆண்டுகளாகப் பெண்களின் அரசியல் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்காகப் பல்வேறு வழிகளில் போராடிய அனைத்துப் பெண்களுக்கும், உங்கள் துணிச்சல் இல்லாமல் இவை எதுவும் சாத்தியமாகியிருக்காது.

# உள்ளடக்கம்


**நன்றியுரை ................................................ v**

**அத்தியாயம் 1 : அறிமுகம் ................................................ 1**

**அத்தியாயம் 2 : இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றல்: ஒரு வரலாற்றுப் பின்னணி ................................................ 6**

ஆணாதிக்கப் பார்வையும் தேசிய அடையாளமும் ................................................ 7

குறியீட்டுப் பிரதிநிதித்துவம் மற்றும் உண்மைப் பிரதிநிதித்துவம் .... 15

**அத்தியாயம் 3 : எண்ணக்கரு ரீதியான கட்டமைப்பு: பெண்ணிய நிறுவனமயமாக்கம் ... 22**

தெற்காசிய கண்ணோட்டத்தில் ஒதுக்கீட்டு முறைகள் .................... 27

**அத்தியாயம் 4 : முறைமை ................................................ 36**

**அத்தியாயம் 5 : 2018ஆம் ஆண்டு தேர்தலின் போது பெண்கள் எதிர்கொண்ட சவால்கள் ................................................ 39**

5.1 அரசியல் கட்சிகளுக்குள் நுழைவுக்கட்டுப்பாடு மற்றும் ஓரங்கட்டப்படுதல் ................................................ 41

5.2 உள்ளூராட்சி மன்றங்களுக்குள் பாலினமயப்படுத்தப்பட்ட அதிகார இயக்கவியல் ................................................ 60

5.3 குடும்பம் மற்றும் சமூகத்திற்குள் அரசியல் பேச்சுவார்த்தை .... 71

**அத்தியாயம் 6 : தடைகளைக் கடந்து செல்வதும் எதிர்ப்புக்களை எதிர்கொள்வதும் ................................................ 83**

6.1 புறக்கணிப்பை எதிர்க்க அறிவை வளர்த்தல் ........................ 83

6.2 முறைசாரா எதிர்ப்பு மற்றும் கட்சி கடந்த ஒற்றுமை ................ 85

**அத்தியாயம் 7 : முடிவுரை ................................................ 88**

**அத்தியாயம் 8 : பரிந்துரைகள் ................................................ 92**

8.1 அரசாங்கத்திற்கான பரிந்துரைகள் ................................................ 92

8.2 அரசியல் கட்சிகளுக்கான பரிந்துரைகள் ................................................ 95

8.3 உள்ளூராட்சி மன்றங்களுக்கான பரிந்துரைகள் ........................ 97

8.4 தேர்தல் ஆணைக் குழுவிற்கான பரிந்துரைகள் ...................... 98

8.5 சிவில் சமூக அமைப்புகளுக்கான பரிந்துரைகள் ...................... 99

8.6 பொதுவான (பல்துறை சார்ந்த) பரிந்துரைகள் ........................ 101

**உசாத்துணை நூல்கள் ................................................ 103**

## அட்டவணைகளின் பட்டியல்

**அட்டவணை 1 :** 1947 முதல் 2024 வரை பாராளுமன்ற மட்டத்தில் பெண் பிரதிநிதித்துவம் ........ 17

**அட்டவணை 2** : 1966 முதல் 2018 வரை உள்ளூராட்சி மட்டத்தில் பெண் பிரதிநிதித்துவம் ........ 18

**அட்டவணை 3** : மாவட்டம் மற்றும் இன ரீதியாக நேர்காணல் செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் பரவல்........ 37

*“என் அன்புக்குரியரே, நீ ஏன் வாக்களிக்கவோ அல்லது இல்லறப் பணியைத் தவிர வேறு எந்த வகிபாகத்தையும் ஏற்கவோ விரும்புகிறாய்? “தொட்டிலை ஆட்டும் கைதான் உலகை ஆளும்” என்பது உனக்கு நன்றாகவே தெரியும், பிறகு உனக்கு வேறு என்ன வேண்டும்?” ........... அத்தகைய ஆண்கள் உணராத விடயம் என்னவென்றால், வீடு என்பது பெண்ணின் இடம் என்றால், அது ஆணின் இடமும் கூட. ஏனெனில், அரசு என்பது தனித்தனி வீடுகளால் ஆனதல்லவா? மேலும், அரசு சம்பந்தப்பட்ட விடயங்கள், வீடுகளையுடைய ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய அனைவருக்கும் மிக முக்கியமானவை அல்லவா?”*

(Kularatne, 1922)

# அத்தியாயம் 1

# அறிமுகம்

1960ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் உலகின் முதல் பெண் பிரதமரான போது இலங்கை உலக வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுக்கொண்டது (Kodikara 2009, 15). அவரது இந்த எழுச்சியானது பால்நிலை சமத்துவத்திற்கான உலகளாவிய போராட்டத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாகவும், முற்போக்கான மாற்றத்தின் அடையாளமாகவும் பரவலாகக் கொண்டாடப்பட்டது. ஆயினும், பெண்களை தனிப்பட்ட வட்டத்திற்குள் முடக்கி வைத்திருந்த ஆணாதிக்கக் கட்டமைப்புகளைத் தகர்ப்பதில் இந்த சந்தர்ப்பமானது சிறிதளவே பங்களித்தது என Kodikara (2009) மற்றும் de Alwis (1995–96) போன்ற அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தனது கணவர் அரசியல் படுகொலை செய்யப்பட்ட பின்னரே சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் அரசியலிற்குள் நுழைந்தார். இது, இலங்கையில் பெண்கள் சுதந்திரமான அணிதிரட்டல் மூலம் அல்லாமல், முதன்முதலாக ஆண் அரசியல்வாதிகளின் *மனைவிகள், விதவைகள் மற்றும் மகள்கள்* என்ற அடையாளத்தின் மூலம் முறைசார் அரசியலில் நுழையும் ஒரு போக்கைப் பிரதிபலிக்கிறது. இந்த வகையில், அவரது அரசியல் அதிகாரம் என்பது பெண்களின் ஒன்றிணைந்து அதிகாரமளித்தலின் பிரதிபலிப்பாக இருப்பதைக் காட்டிலும், விதவைத் தன்மை மற்றும் தாய்மையை தியாகம் செய்யும் நிலை ஆகிய அடையாள முறைவழிநிலைத் தன்மையுடன் வடிவமைக்கப்பட்ட ஆணாதிக்க அரசியலின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது (Kodikara 2009, 15). உண்மையில், பெண்ணியவாத அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பொது விம்பமானது, நற்பண்பு, பொதுநலம், தியாகம் மற்றும் நம்பிக்கை கொண்ட இலட்சிய சிங்கள-பௌத்தப் பெண் என்ற நீண்டகால கலாச்சார முன்மாதிரியில் ஆழமாக வேரூன்றியிருந்தது. இது, சிறிமாவோ பண்டாரநாயக்க வழக்கமாக ஒப்பிடப்பட்ட விஹாரமகா தேவியின் உருவத்தில் மிகவும் சக்திவாய்ந்த முறையில் உருவகப்படுத்தப்பட்டது (de Alwis 2004).

இலங்கையில் சிங்களப் பெண்களுக்கு ஒரு வரலாற்று முன்மாதிரியாக விளங்கும் விஹாரமகா தேவி “களங்கமற்ற பெண்”, “மதத்தில் உறுதியானவர்”, “நல்லொழுக்கம் உடையவர்” (Seneviratne 1969) என வர்ணிக்கப்படுகின்றார். மேலும் இவர் துட்டகைமுனு[1] என்ற மன்னனின் தாயாகவும், நாட்டிற்காக தன்னை அர்ப்பணித்த தியாகத்தின் சின்னமாகவும் பார்க்கப்படுகின்றார். மேலும் காலனித்துவ கால கட்டுரைகளிலிருந்து சுதந்திரத்திற்குப் பிந்தைய தேசிய போராட்டங்கள் வரை, பொது சொற்பொழிவுகளிலும் / பிரசங்கங்களிலும்

1 கி.மு. 161 முதல் 137 வரை அனுராதபுர இராச்சியத்தை ஆண்ட துட்டகைமுனு மன்னர், எல்லாள மன்னரைத் தோற்கடித்து தீவை ஒரே ஆட்சியாளரின் கீழ் கொண்டு வந்ததற்காக இலங்கை வரலாற்றுப் பதிவுகளில் நினைவுகூரப்படுகின்றார். சிங்கள-பௌத்த தேசியவாத விபரிப்புகளில், அவர் பெரும்பாலும் தேசத்தையும் பௌத்த மதத்தையும் காத்த ஒரு வீரமிக்க பாதுகாவலராகச் சித்தரிக்கப்படுகின்றார். இதன் விளைவாக, சமகால அரசியல்வாதிகள் வலிமையான தலைமை, தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய இறையாண்மையின் பாதுகாப்பு ஆகியவற்றின் சின்னமாக அவரது விம்பத்தை அடிக்கடி மேற்கோள் காட்டுகின்றனர்.

பெண்களின் சிறந்த வடிவமாக அவரை எடுத்துக்காட்டியுள்ளனர். அதாவது "அறநெறித் தாய்" என போற்றப்பட்டு வருகின்றார். தேசத்திற்காக வீரமிக்க புதல்வர்களை வளர்த்து, நாடு, இனம் மற்றும் மதத்தைப் பாதுகாப்பதற்காக தன்னை அர்ப்பணித்து, தாய்மையின் அறநெறி எல்லைகளுக்குள் மட்டுமே தனது செல்வாக்கைச் செலுத்தும் ஒரு பெண்ணாக வர்ணிக்கப்படுகின்றார் (deAlwis 2004). வரலாற்று ரீதியாக, இலங்கைச் சமூகத்தில் பெண்களின் வகிபங்கு மிகவும் சிக்கலானதாக இருந்தபோதிலும், இந்தப் பாலின அடிப்படையிலான தேசியவாதக் கதையாடல், பொது வாழ்வில் பெண்களின் பங்களிப்பு குறித்த மேலோங்கிய புரிதல்களை கணிசமாக வடிவமைத்துள்ளது. இங்கு அது பெரும்பாலும் உண்மையான முக்கியத்துவத்தைக் காட்டிலும் அடையாள பூர்வமான சின்னமாகவே மதிக்கப்படுகிறது.

ஆனால், இந்த அடையாள பூர்வமான மரியாதையின் பாரம்பரியம் இருந்தபோதிலும், முறைசார்ந்த அரசியலில் பெண்களின் உண்மையான பங்களிப்பு விகிதாசாரமற்ற முறையில் குறைவாகவே உள்ளது. 2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் 5.4% மாத்திரமே பெண்கள் ஆவர் (IPU 2025a). இந்த எண்ணிக்கை 2024இல் 9.8% ஆக உயர்ந்தபோதிலும், குறிப்பாக, மக்கள் தொகையில் 51.61% பெண்களாக உள்ள ஒரு நாட்டில் இது போதுமான பிரதிநிதித்துவத்தை விட மிகவும் குறைவாகவே உள்ளது. (IPU 2025b; World Bank 2025a). குறியீட்டுவாதம் என்பது, கட்டமைப்பு ரீதியான அனுகலாகவோ அல்லது அரசியல் சமத்துவமாகவோ மாறவில்லை என்றே தெரிகிறது. உண்மையில், இலங்கையில் அரசியலில் உள்ள பெண்களின் பிரதிநிதித்துவமானது உலகளாவிய தேசிய பாராளமன்றத்தில் பெண்களுக்கான பிரதிநிநித்துவ மாதாந்த தரவரிசையில் இலங்கை 163ஆவது இடத்தில் இருப்பதனைக் காட்டுகின்றது. இது இந்நாட்டில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உலகிலேயே மிகக் குறைந்த நிலையில் இருப்பதைக் காட்டுகின்றது. மேலும், இது அதன் தெற்காசிய அயல் நாடுகளான பாகிஸ்தான் மற்றும் இந்தியாவை விடவும் குறைவாகும். அந்த நாடுகள் முறையே 111 மற்றும் 149ஆவது இடங்களில் உள்ளன (IPU 2026).

இந்த இடைவெளிகளை அங்கீகரிக்கும் விதமாக, 2017ஆம் ஆண்டின் உள்ளூராட்சித் தேர்தல்கள் (திருத்த) சட்ட இலக்கம் 16இல் உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களுக்குக் கட்டாய 25% வீதமான இட ஒதுக்கீட்டை வழங்க வேண்டும் என அறிமுகப்படுத்தியது (Vijeyarasa 2020). 2018இல் இது நடைமுறைப்படுத்தப்பட்ட போது, பெண் பிரதிநிதித்துவத்தில் ஒரு வியக்கத்தகு அதிகரிப்பை ஏற்படுத்தியது. 2008ஆம் ஆண்டு மற்றும் 2011ஆம் ஆண்டு இற்கு இடையில் 2% ஆக இருந்த பிரதிநிதித்துவம் (Wickramasinghe and Kodikara 2012), கிட்டத்தட்ட 23% ஆக உயர்ந்தது. மேலும் சுமார் 2,000 பெண்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர் (Manuratne et al. 2024). இது, முன் அரசியல் அனுபவமும், குடும்ப அரசியல் பின்னணியும் இல்லாத பல பெண்களை உள்ளூராட்சி

அரசியலுக்குள் நுழைய வழிவகுத்தது (Peiris and Lekamwasam 2021). மேலதிகமாக, உள்ளூராட்சி மட்டத்தில் மிகவும் குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட முஸ்லிம் பெண்களை உள்ளடக்குவதற்கும் இந்த கோட்டா ஒதுக்கீட்டு முறை வழிவகுத்தது. 2018ஆம் ஆண்டிற்கு முன்னர் மூன்று முஸ்லிம் பெண் உறுப்பினர்கள் மட்டுமே இருந்தனர் (Kodikara 2023). ஆனால், இந்த இட ஒதுக்கீட்டு முறைகளின் அறிமுகமானது அரசியல் களத்தில் உள்ள கட்டமைப்பு ரீதியான அதிகார ஏற்றத்தாழ்வுகளைக் கலைக்கவில்லை. அதாவது வேட்பாளர் முன்மொழிவுகளை பெறுவதற்கு, பெண்கள் ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த கட்சிப் படிநிலைகளையே சார்ந்திருக்கின்றனர். கட்சி அதிகாரிகள் வேட்புமனுக்களுக்காக பாலியல் ரீதியான தவறான அழைப்புகளை கோருவதாக வரும் செய்திகளால், தகுதிநீக்கம் பரவலாகத் தொடர்கின்றது. இது, பெண்கள் எதிர்கொள்ள வேண்டிய சுரண்டல் நிலையை எடுத்துக்காட்டுகின்றது (Munasinghe and Ariyarathne 2019).

ஆகையால் ஒதுக்கீட்டு முறைகள் பெண்களின் அரசியல் பங்குபற்றலுக்கு ஒரு கட்டமைப்பு ரீதியான வாய்ப்பை வழங்குகின்றன. மேலும், உலகளவிலும் இலங்கையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் அவை வெற்றிபெற்றுள்ளன (Rai 2016; Manuratne et al. 2024). என்றாலும், அவை வலுப்படுத்தல், செல்வாக்கு அல்லது ஆட்சியின் அர்த்தமுள்ள ஈடுபாட்டிற்கு வழிவகுப்பதில்லை. பல பெண்கள், வேட்புமனுத் தாக்கலின் போதும் தேர்தலுக்குப் பின்னரும், நிறுவனமயமாக்கப்பட்ட பாலினப் பாகுபாடு, பெயரளவிலான பிரதிநிதித்துவம், மற்றும் தீர்மானமெடுக்கும் செயல்முறையிலிருந்து விலக்கப்படுதல் உள்ளிட்ட தடைகளைத் தொடர்ந்தும் எதிர்கொள்கின்றனர் (Vijeyarasa 2020). எனவே, உண்மையான பிரதிநிதித்துவத்தின் மீது ஒதுக்கீட்டு முறையின் தாக்கம் தெளிவற்றதாகவே உள்ளது.

பாலின ஒதுக்கீடுகளின் வடிவமைப்பு மற்றும் செயலாக்கம் குறித்து கல்விசார் கவனம் அதிகரித்து வரும் இவ் வேளையில், இலங்கையில் இத்தகைய ஒதுக்கீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள், ஆழமான ஆணாதிக்கம் நிறைந்த அரசியல் சூழல்களை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதை ஆராயும் ஆய்வுகளில் ஒரு குறிப்பிடத்தக்க இடைவெளி உள்ளது. குறிப்பாக, தகுதிகாண்மை, பாலியல் ரீதியான எதிர்பார்ப்புகள், மற்றும் ஆண் சகாக்களிடமிருந்து வரும் எதிர்ப்பு போன்ற முறைசாரா நிறுவன நடைமுறைகள், பெண்கள் அர்த்தமுள்ள வகையில் அரசியலில் பங்கேற்பதற்கும் அதிகாரத்தைச் செலுத்துவதற்குமான திறனை எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றி அதிகம் அறியப்படவில்லை.

எனவே, இந்த கொள்கை முன்னெடுப்பானது, அர்த்தமுள்ள மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளதா அல்லது உண்மையான அதிகாரம் இல்லாமல் நீண்ட காலமாகப் போற்றப்படும் ஒரு பாரம்பரியத்தில் புதிய அடையாள உருவங்களை மட்டுமே சேர்த்துள்ளதா என்பதை

மதிப்பிடுவதற்கு, வெறும் புள்ளிவிபரங்களை தாண்டி, இந்த ஒதுக்கீட்டை பின்பற்றும் பெண்களின் வாழ்வியல் அனுபவங்களை ஆராய்வதன் அவசியத்தை குறிக்கின்றது.

இந்த ஆய்வு பின்வரும் வினாக்களுக்கு பதிலளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது: பிரச்சாரத்தின் போதும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் பெண்கள் எவ்வகையான நிறுவன மற்றும் சமூக, கலாச்சாரத் தடைகளை எதிர்கொண்டனர்? இந்த ஒதுக்கீடு எந்தளவிற்கு ஆழமான பங்குபற்றலுக்கு இடமளித்துள்ளது, மேலும் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள் தங்கள் வகிபங்கையும் செயல்திறனையும் எவ்வாறு உணர்கின்றார்கள்? போன்றனவாகும்.

40 பண்புசார் நேர்காணல்களிலிருந்து பெறப்பட்ட முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் பெறப்பட்ட இலக்கிய மீளாய்வுகளின் படி, இந்த ஆய்வானது 2018இல் உள்ளூராட்சி மன்றத்தில் பெண் பிரதிநிதிகள் இணைந்து கொண்டதைத் தொடர்ந்து அவர்கள் எதிர்கொண்ட நிறுவன ரீதியான மற்றும் சமூக, அரசியல் சவால்களை, பெண்ணியக் கண்ணோட்டத்தின் வழியாக அவர்களின் அனுபவங்களைப் பகுப்பாய்வு செய்து ஆராய்கின்றது. அரசியல் நிறுவனங்களுக்குள் காணப்படும் முறையான விதிகளும் முறைசாரா நெறிமுறைகளும் பெண்களின் அரசியல் பயணங்களை எவ்வாறு வடிவமைக்கலாம், கட்டுப்படுத்தலாம் அல்லது சாத்தியமாக்கலாம் என்பதை இந்த கோட்பாட்டு கட்டமைப்பு தெளிவுபடுத்துகிறது. மேலும், பங்குபற்றல், உள்வாங்கப்படுதல் மற்றும் அதிகாரம் ஆகியவற்றை நிர்வகிக்கும், பெரும்பாலும் மறைக்கப்பட்டிருக்கும் பொறிமுறைகளையும் இக்கோட்பாடு வெளிப்படுத்துகின்றது.

இந்த அறிமுகத்தைத் தொடர்ந்து, இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றலின் வரலாற்றுப் பின்னணியை இந்த ஆய்வுக் கட்டுரை ஆராய்கின்றது. தேசியவாத கதையாடல்களில் ஆணாதிக்கப் பார்வையின் வகிபாகம் மற்றும் குறியீட்டு மற்றும் உள்ளடக்கப் பிரதிநிதித்துவத்திற்கு இடையிலான வேறுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தி, பாலின அடிப்படையிலான எதிர்பார்ப்புகள் பெண்களின் அரசியல் அதிகாரத்திற்கான அணுகலை எவ்வாறு வடிவமைத்துள்ளன என்பதை இந்த அத்தியாயம் ஆராய்கின்றது. அடுத்த அத்தியாயமானது, முறைசார்ந்த மற்றும் முறைசாரா நிறுவன நெறிமுறைகள் பெண்களின் அரசியல் பங்கேற்பை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதைப் பகுப்பாய்வு செய்ய, பெண்ணிய நிறுவனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த ஆய்வின் கருத்தியல் கட்டமைப்பை விவரிக்கின்றது. இதனைத் தொடர்ந்து, 2018இல் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களிடம் மேற்கொள்ளப்பட்ட பண்புசார், பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு முறையியல் குறித்த கலந்துரையாடல் இடம்பெறுகின்றது. அடுத்த அத்தியாத்தில், உள்ளூராட்சித் தேர்தலின் போதும் அதற்குப் பின்னரும் பெண்கள் எதிர்கொண்ட முக்கிய சவால்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் குடும்பம், சமூகம் ஆகிய விரிவான தளங்களில் எதிர்கொள்ளப்பட்ட தடைகளை இது பகுப்பாய்வு

செய்கின்றது. பின்னர், பெண்கள் தங்கள் அரசியல் பணிகளில் இந்தத் தடைகளை எவ்வாறு கையாண்டனர் என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது. இறுதி அத்தியாயப் பகுதிகள் ஆய்வுக்கற்கையின் முடிவுரையை முன்வைப்பதோடு, அரசாங்கம், அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி அமைப்புகள், தேர்தல் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூக அமைப்புகள் உள்ளிட்ட முக்கியப் பங்குதாரர்களுக்கான பரிந்துரைகளையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

# அத்தியாயம் 2

## இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றல்: ஒரு வரலாற்றுப் பின்னணி

இலங்கையில் பெண்கள் உரிமை செயற்பாட்டாளர்கள் 1931ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 21 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுத் தந்தமையானது அரசியல் பங்குபற்றலுக்கான பெண்களின் போராட்டச் செயன்முறைக்கு ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்தது. எனினும் 1931ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சர்வசன வாக்குரிமையின் கீழ் நடைபெற்ற முதல் தேர்தலின் இறுதியில் எந்தப் பெண்ணும் போட்டியிடவில்லை. ஆரம்பத்தில் சிலர் தங்கள் பெயர்களை முன்மொழிந்திருந்தாலும், தேர்தல் நாளுக்கு முன்பே அவர்கள் விலகிக்கொண்டனர் (de Alwis and Jayawardena 2023). "தற்போது அரச அதிகாரிகளின் மனைவியருக்கு எதிர்கால அமைச்சர்கள் உருவாக்கவிருக்கும் வரவுசெலவுத் திட்டத்தை விட தங்களுடைய வீட்டு வரவுசெலவுத் திட்டங்களே உடனடிப் பிரச்சினையாக இருக்க வேண்டும்" என்று சிலோன் ஒப்சவர் பத்திரிகை கேலியாகக் குறிப்பிட்டது (Ceylon Observer, 5 March 1931). ஆனால் தேர்தலில் போட்டியிட முயன்ற பெண்களில் இருவர் அரச மருத்துவர்களின் மனைவிகள் என்பதை இந்தப் பத்திரிகை கவனிக்கத் தவறியுள்ளது. 1931ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியிடப்பட்ட விதிமுறைகளைத் தொடர்ந்து அவை அரச ஊழியர்களின் மனைவிகள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்ததனால் அவர்கள் போட்டியிலிருந்து விலக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதே ஆண்டு பிற்பகுதியில் அதாவது 1931 நவம்பரில் எடலைன் மொலமுரே (Adeleine Molamure) முதல் பெண்மணியாக அரசாங்க சபைக்குள் பிரவேசித்தார். (de Alwis and Jayawardena 2023). இது ஒரு முக்கியமான அடையாளபூர்வமான திருப்புமுனையாக அமைந்தபோதிலும் இலங்கையில் முறைசார் அரசியலில் பெண்களின் நுழைவு குறைவாகவே இருந்தது. மேலும் அது உயர்குடி மற்றும் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழிகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமை தொடர்ந்து பல தசாப்தங்களாக வலுப்பெற்று வந்தது. உலகின் முதல் பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டதில் இந்நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது எனலாம். என்றாலும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க முக்கிய சாதனைகள் இருந்தாலும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மொத்தத்தில் தொடர்ந்தும் குறைவாகவே இருந்து வருகின்றது. அதாவது இவ்வகையான சாதனைகள் பெண்களுக்கு அரசியலில் பரவலான அதிகார அணுகலை உருவாக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் உயர்குடியினரின் நுழைவுக்கான இந்த ஆரம்பகால வடிவங்கள், பெண்களை இல்லறத் துறையுடன் தொடர்புபடுத்தி, அரசியலை ஆண்களின் களமாக நிலைநிறுத்திய பாலின நெறிகளுடன் தொடர்புபட்டிருந்தது. அதனால் பின்வரும் பகுதியானது இந்த நிலைகள் தேசியவாதக் கலந்துரையாடல் மற்றும் ஆணாதிக்கப் பார்வை ஆகியவற்றின் மூலம் எவ்வாறு வடிவமைக்கப்பட்டன என்பதையும், இலங்கையில் குறியீட்டு

மற்றும் உண்மை பிரதிநிதித்துவத்திற்கு இடையிலான வேறுபாட்டை எவ்வாறு தொடர்ந்தும் பாதிக்கின்றன என்பதையும் ஆய்வு செய்கின்றது.

## ஆணாதிக்கப் பார்வையும் தேசிய அடையாளமும்

இலங்கையில் பெண்களின் அரசியல் பங்குபற்றல் தொடர்பான அறிவார்ந்த விவாதங்கள் குறிப்பிடத்தக்க முரண்பாட்டை ஏற்படுத்துகின்றன. பிரதமர் மற்றும் ஜனாதிபதி போன்ற உயர் பதவிகளில் செல்வாக்கு மிக்க பெண்கள் அடையாள ரீதியாக இருந்தபோதிலும், பெண்களை அர்த்தமுள்ள பிரதிநிதித்துவத்திலிருந்து தொடர்ந்தும் புறந்தள்ளும் வகையில் கட்டமைப்பு ரீதியான தடைகள் காணப்படுகின்றன (Jayawardena 1986; Kodikara 2009). உயரடுக்கு மற்றும் வம்சாவழி அரசியல் பாதைகளே அதிகாரத்தைக் கைப்பற்றுவதில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளன. இது, தீர்மானம் எடுக்கும் தளங்களில் அரசியல் வம்சாவழிகளுக்கு வெளியே உள்ள பெண்களின் பங்களிப்பு இல்லாமையினை மறைப்பதாக அமைந்துள்ளது (Jayawardena 1986). இந்தப் பின்னணியில்தான் 2018ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 25% உள்ளூராட்சி ஒதுக்கீடு பெண்களின் பங்குபற்றலை விரிவுபடுத்துவதற்கான ஒரு கட்டமைப்பு முயற்சியாகக் கருதப்பட்டாலும் நடைமுறையில் அது குறிப்பிடத்தக்க எதிர்ப்பைச் சந்தித்துள்ளது.

இலங்கையில் பெண்கள் அரசியல் அதிகாரத்தை அடைவதென்பது உறவுமுறை மற்றும் சமூக சலுகைகளால் வடிவமைக்கப்பட்ட ஆழமான வரலாற்று அடிப்படைகளைக் கொண்டுள்ளது. பண்டைய காலத்தில் குவேனி, அனுலா தேவி, சோமா தேவி மற்றும் லீலாவதி போன்ற இராணிகள் நாட்டை ஆட்சி செய்தனர் என்றும் சில குறிப்புகளின்படி அவர்கள் படைகளை போருக்கு வழிநடத்தினர் என்றும் வரலாற்றுப் பதிவுகள் காட்டுகின்றன. (Jayawardena 1986). தொடர்ச்சியான அரசியல் தந்திரங்களுக்குப் பிறகு அரியணை ஏறியதாகக் கூறப்படும் ராணி அனுலா தேவியின் வரலாறானது ஆட்சியின் மிக உயர்ந்த மட்டங்களில் பெண்கள் எந்த அளவிற்கு அதிகாரத்தைச் செலுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. ஆனாலும் மகாவம்சம்[2] போன்ற வரலாற்றுப் பதிவுகளில் அவர் ஒழுக்கமற்றவர் அல்லது நெறிதவறியவர்[3] என சித்தரிக்கப்படும் நிலையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட பாலின கட்டுப்பாடுகளை மீறும் பெண் அதிகாரத்தின் மீதான ஒருவித அசௌகரியத்தையும் பிரதிபலிக்கின்றது.

2 இது பாளி மொழியில் எழுதப்பட்ட ஒரு பண்டைய பௌத்த நூலாகும். இது இலங்கையின் மிகப் பழமையான வரலாற்றுப் பதிவுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. எனினும் இது ஒரு பௌத்த துறவியால் எழுதப்பட்டதால் அரசியல் அல்லது சமூக வரலாற்றை விட பௌத்தம் மற்றும் வம்ச ஆட்சியின் வரலாற்றில் அதிக கவனம் செலுத்துகிறது.

3 இலங்கையின் முதல் பதிவுசெய்யப்பட்ட அனுராதபுரத்தின் ராணியான அனுலா தேவி கி.மு. 47 முதல் 42 வரை நாட்டை ஆண்டார். மகாவம்சம் மற்றும் தீபவம்சத்தின்படி அவர் சோர நாக மன்னனின் மனைவியாவார். அவரை இவர் விடம் வைத்துக் கொன்றதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. அதன்பிறகு குறைந்தது நான்கு கணவர்கள் மற்றும் துணைவர்களுக்கு விடம் வைத்துக் கொன்றதாகவும் இறுதியில் நாட்டைத் தனியாக ஆட்சி செய்ததாகவும் பதிவுகள் குறிப்பிடுகின்றன.

இதனால் இலங்கையின் பாலின அமைப்பு தெற்காசியாவின் பிற பகுதிகளில் "பாரம்பரிய ஆணாதிக்கம்" என்று விவரிக்கப்படும் அமைப்புடன் முழுமையாக பொருந்தவில்லை என்பது தெளிவாகின்றது (Kandiyoti 1991). காலனித்துவத்திற்கு முந்தைய காலக்கட்டத்தின் சான்றுகள்/ஆதாரங்கள் சிங்களப் பெண்கள் வீட்டிற்குள் மட்டுமே முடக்கி வைக்கப்படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன. ஏனெனில், அவர்களுக்குச் சொத்துரிமைக்கான அணுகல் காணப்பட்டதோடு குடும்ப மரபுரிமை மீதான உரிமைகளையும் அவர்கள் தக்க வைத்துக் கொண்டனர். மேலும் இல்லறத்திற்கு அப்பாற்பட்ட பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கையிலும் பங்குபற்றினர். இந்த அமைப்பானது இலங்கையில் பாலின உறவுகள் படிநிலை/அடுக்குமுறை தன்மையைக் கொண்டிருந்தாலும், இப்பிராந்தியத்தின் பிற பகுதிகளில் காணப்பட்ட அதே இறுக்கமான தனிமைப்படுத்தல் மற்றும் கட்டுப்பாட்டு அமைப்புகளின் மூலம் அவை செயல்படவில்லை என்பதைக் காட்டுகின்றன (Jayawardena 2002).

எனினும், இது பாலினப் படிநிலை/அடுக்கமைவு இல்லாததைக் குறிக்கவில்லை. மாறாக இலங்கையின் வரலாற்று அனுபவமானது பெண்களின் பொது மற்றும் அரசியல் வாழ்வில் பங்குபற்றல் சாத்தியமாக இருந்தபோதிலும் அது ஆண்களின் அதிகாரம் மற்றும் சமூக மரியாதை தொடர்பான எதிர்பார்ப்புகளால் வழிநடாத்தப்பட்டதாகும். இந்த பதற்றத்திற்கு இடையிலேயே பிற்கால தேசியவாதக் கலந்துரையாடல்கள் பாலின அடிப்படையிலான இலட்சியங்களை மேலும் வலுப்படுத்தியதோடு பெண்களை தனிப்பட்ட வாழ்வுடன் அதிகளவில் தொடர்புபடுத்திய அதே வேளையில் நாட்டிற்குள்/தேசிய மட்டத்தில் அவர்களின் பங்கையும் அடையாளப்பூர்வமாக உயர்த்திக் காட்டின (Jayawardena 2002).

இந்த இயங்கியல் தன்மையானது நைசம் சரவணமுத்து மற்றும் எடலின் மொலமுரே போன்ற ஆரம்பகால பெண் சட்டமன்ற உறுப்பினர்களின் அரசியலிலும் தெளிவாகத் தெரிகின்றது. அங்கு பெண்களின் அரசியல் பதவிகள் பெரும்பாலும் சுதந்திரமான அரசியல் அணிதிரட்டலை விட குடும்ப வம்சாவளி/பரம்பரை மற்றும் உயர் அந்தஸ்து மூலமாகவே அடைய முடிந்தது (Jayawardena 1986). இந்த "விதவை-மனைவி-மகள்" என்ற முறை நவீன காலத்திலும் தொடர்ந்தது. இதில் அரசியல் களத்தில் வெற்றிகரமாக நுழைந்த சில பெண்களும் குறிப்பாக ஆண் உறவினர்களின் மரணத்தைத் தொடர்ந்து பெரும்பாலும் அவர்களின் குடும்ப தொடர்புகள் மூலமாகவே அரசியல் இடத்தைப் பெற்றனர். உதாரணமாக சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் தனது கணவரின் அரசியல் படுகொலையைத் தொடர்ந்து பிரதமரானார். அதேநேரம் அவரது மகள் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதி வேட்பாளரான தனது கணவர் விஜயகுமாரதுங்கவின் மரணத்திற்குப் பிறகு அரசியலிற்குள் நுழைந்தார். இந்த நிகழ்வுகளில் அரசியல் அங்கீகாரமானது ஆண் வழி மரபு வழியாக அடையாளப்பூர்வமாக வழங்கப்பட்டது. இது பெண்களின் அரசியல் பங்குபற்றல்கள் அவர்களின் சொந்த அரசியல் ஆற்றலைச் சார்ந்திருக்காமல் அதிகாரமிக்க ஆண்களுடனான அவர்களின் உறவுகளைச் சார்ந்தே இருந்தன என்ற கருத்தை வலுப்படுத்தியது (Jayawardena 1986).

இந்த மரபு இன்று வரை பெண்களின் அரசியல் பிரவேசத்தை வடிவமைத்து வருகிறது. பல பெண் உள்ளூராட்சி உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும், நிதி ஆதரவையும் நிலைபெற்ற வாக்கு வலையமைப்புகளுக்கான அணுகலையும் வழங்கும் அரசியல் செல்வாக்குள்ள குடும்பங்களிலிருந்து வருகிறார்கள். அதேசமயம், சுயேட்சை பெண் வேட்பாளர்கள் வேட்புமனுக்களையோ அல்லது வளங்களையோ பெறுவதற்கு பெரும்பாலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். சமகால இலங்கையில் தேர்தல் வெற்றி என்பது இன்னும் “பணம் மற்றும் பலம்” ஆகிய இரட்டைத் தேவைகளின் மீது சார்ந்துள்ளன. இவை இரண்டுமே பெரும்பாலும் ஆண்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. இவ்வாறு பெண்கள் தங்கள் ஆண் உறவினர்களின் “இறந்த உடல்களின் மூலமாக (இறப்புக்கள்)” அரசியலில் நுழையாத சந்தர்ப்பங்களில், அவர்களின் அரசியல் முன்னேற்றம் என்பது பெரும்பாலும் ஆண்களின் ஆதரவையும் உறவுமுறைப் பிணைப்புகளையும் சார்ந்தே இருந்துள்ளது. இந்த வகையில் பெண்கள் ஆணாதிக்கக் கட்டமைப்புகள் வழியாக மட்டுமல்லாமல் அந்தக் கட்டமைப்புகள் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்குட்பட்டும் அரசியலில் நுழைகிறார்கள் (Pinto-Jayawardena and Kodikara 2003).

தெற்காசியா முழுவதும் அரசியலில் வம்சாவளி/பரம்பரை ரீதியான நுழைவு ஒரு பொதுவாகக் காணப்படும் ஒரு நிகழ்வாக இருந்தாலும் இலங்கையில் இந்தப் போக்கு உயர்குடி சார்ந்த குடும்பங்களுக்கு மட்டும் உரியதாக இல்லை என்று Pinto-Jayawardena மற்றும் Kodikara (2003) குறிப்பிடுகின்றனர். தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மட்டங்களில் தொடர்ச்சியான அரசியல் படுகொலைகளால் குறிக்கப்படும் நாட்டின் நிலையற்ற அரசியல் சூழல் காரணமாக விதவைகள், தாய்மார்கள் மற்றும் மகள்கள் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் அரசியலில் நுழைந்துள்ளதோடு பெரும்பாலும் கொல்லப்பட்ட ஆண் உறவினர்களின் வாரிசுகளாகவே அவர்கள் வந்துள்ளனர்.

என்றாலும், குடும்ப உறவுமுறை அடிப்படையிலான நுழைவு எப்போதும் ஆண் இறப்பைச் சார்ந்திருக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் கணவர்கள் அல்லது தந்தையர்கள் அரசியலில் செயற்பட்டுக் கொண்டிருந்த போதே மனைவிகளும் மகள்களும் அரசியலில் நுழைந்துள்ளனர். உதாரணமாக நைசம் சரவணமுத்து என்பவர் தனது கணவர் தனது குடியுரிமைகளை இழந்து அரசியல் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு 1931ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டார் (Wickramasinghe and Kodikara 2012). இது அறிஞர்கள் “குடும்ப அரசியல்” என்று விவரிக்கும் ஒரு போக்கின் தோற்றத்தைக் குறித்தது. பின்னர் மாகாண சபைகள் நிறுவப்பட்டவுடன் இந்தப் போக்கு மேலும் வலுப்பெற்றது. ஆண் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் பிராந்திய அதிகாரத் தளங்களை வலுப்படுத்திக் கொள்வதற்காக இந்த அமைப்புகளுக்கு தங்கள் மனைவிகளைத் தந்திரமாக திட்டமிட்டே பரிந்துரைத்தனர் (Pinto-Jayawardena and Kodikara 2003). இது பெண்களின் அரசியல் இருப்பு என்பது சயாதீனமான அரசியல் செயல்பாட்டின் வெளிப்பாடாக இல்லாமல் பெரும்பாலும் ஆண் கட்டுப்பாட்டின் நீட்சியாகவே செயல்பட்டது என்பதை விளக்குகிறது.

இருப்பினும், குறிப்பாக 1930ஆம் ஆண்டு மற்றும் 1950ஆம் ஆண்டிற்கிடையில் செயற்பட்ட முந்தைய தலைமுறை பெண் அரசியல்வாதிகள் ஒரு மாறுபட்ட அரசியல் பாதையை வெளிப்படுத்துகின்றனர். அவர்களில் சிலர் முக்கிய ஆண் அரசியல்வாதிகளைத் திருமணம் செய்திருந்தாலும் கூட அவர்களின் அரசியல் அடையாளங்கள் இந்த உறவுகளுக்குள் அடங்கிவிடவில்லை. அவர்கள் திருமணத்திற்கு நீண்ட காலத்திற்கு முன்பே சமூக போராட்ட செயற்பாடுகளிலும் பொதுச் சேவையிலும் ஈடுபட்டிருந்தனர். மேலும் தங்களுக்கே உரிய சுயாதீனமான அரசியல் நம்பிக்கைகளையும் நிலைப்பாடுகளையும் பேணி வந்தனர். உதாரணமாக விவியென் குணவர்தன[4] அவர்கள் ஆணாதிக்கத்தின் வெளிப்படையான விமர்சகராக இருந்தது மட்டுமல்லாமல் தனது கணவர் மற்றும் பதவியில் இருந்த ஆண் உறவினர்களின் அரசியல் கருத்துக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்ததாகவும் அறியப்பட்டார் (Jayawardena 1997). இவ்வாறு இந்தப் பெண்கள் அரசியலில் மேலோட்டமான பங்குபற்றலை விட ஆழமான மற்றும் உள்ளார்ந்த அரசியல் ஈடுபாட்டை பிரதிநிதித்துவப்படுத்தினர். மேலும் பெண் அரசியல்வாதிகள் தங்கள் கணவர்களின் வெறும் துணை உறுப்புகளாக மட்டுமே இருப்பர் என்ற ஆணாதிக்கக் கருத்தை சவாலுக்கு உட்படுத்தினர். இருப்பினும் Pinto-Jayawardena மற்றும் Kodikara (2003) குறிப்பிடுவது போல, முந்தைய தலைமுறை பெயரளவிற்குப் பதவிகளை வகித்தாலும் கூட முதன்மையாகத் தங்கள் கணவர்கள் அல்லது ஆண் உறவினர்களுக்குப் பதிலாகச் செயல்படும் இன்றைய பல "பிரதிநிதி" அரசியல்வாதிகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது எனலாம். அத்தகைய பெண்களுக்கு பெரும்பாலும் சொந்த அரசியல் சுயாட்சியோ அல்லது சிந்தனைக் கட்டுப்பாடோ இருப்பதில்லை. எனினும் அவர்கள் ஆண் அதிகாரத்துடன் கொண்டுள்ள தங்கள் தொடர்பை பெருமையாகக் கருதுகின்றனர். இது இலங்கை அரசியலில் ஆணாதிக்க ஆதரவு தொடர்ந்து நிலைத்திருப்பதை பிரதிபலிக்கிறது.

கல்வியின் பங்கானது பாரம்பரிய பாலினப் பங்குகளைச் சவாலுக்குட்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை மேலும் வலுப்படுத்துவதில் முன்னிலைப்படுத்துகின்றன என்பதை சுட்டிக்காட்டி இலங்கையில் பெண்கள் தொடர்ந்தும் அரசியல் ரீதியாக அடிமைப்படுத்தப்பட்டிருப்பதற்கு Jayawardena (1986) ஒரு வலுவான விளக்கத்தை முன்வைக்கின்றார். பெண்களுக்கு கல்விக்கான அணுகல் கிடைத்திருந்த போதிலும் அந்தக் கல்விச் செயன்முறையானது பாரம்பரிய சமூகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வகிபாகங்களிலிருந்து/நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பாதைக்கு இட்டுச் செல்லவில்லை. இவை மாறாக சற்று நவீன வடிவத்தில் அதே வகிபாகங்களுக்குள் சமூகமயப்படுத்தும் கருவியாகவே செயல்பட்டது என்று அவர் வாதிடுகிறார். வேறு வகையில் கூறினால் கல்வி முறையானது ஆணாதிக்கக் கட்டமைப்புகளை எதிர்க்க பெண்களைத் தயார்படுத்தவில்லை மாறாக அவற்றை மேலும்

4 அவர் இலங்கையின் முதல் அரசியல் கட்சியான லங்கா சம சமாஜ கட்சியில் அங்கம் வகித்த ஒரு முக்கிய சோசலிச அரசியல்வாதி ஆவார். அவர் 1950 இல் மாநகர சபை உறுப்பினராகவும், 1956-60, 1964-65 மற்றும் 1970-70 க்கு இடையில் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். அவர் சுகாதார இளைய அமைச்சராகவும் பணியாற்றினார்.

நவீனமயமாக்கப்பட்ட வடிவங்களில் மீண்டும் உருவாக்கியது. மேலும் Jayawardena (1986), அண்மையிலுள்ள தெற்காசியாவின் சில பகுதிகளில் காணப்பட்ட உடன்கட்டை ஏறுதல் (sati) அல்லது குழந்தை திருமணம் போன்ற வெளிப்படையான கடுமையான நடைமுறைகளுக்கு இலங்கைப் பெண்கள் ஆளாகாததால் அடிப்படை சமூக அமைப்பை மாற்றியமைக்க முற்படும் ஒரு விடுதலைக்கான ஒரு பரவலான இயக்கத்தை அவர்களால் உருவாக்க முடியவில்லை என்றும் வாதிடுகின்றார். கல்வி மற்றும் சுகாதாரத்தில் நாட்டில் ஒப்பீட்டளவில் முற்போக்கான பாலினக் குறிகாட்டிகளாக குறிப்பாக உயர் பெண் எழுத்தறிவு வீதங்கள், குறைந்த தாய்வழி இறப்பு வீதம் மற்றும் உயர் பெண் ஆயுட்காலம்[5] ஆகியவை வெளிப்படையான கட்டுப்பாட்டு நடைமுறைகள் ஒப்பீட்டளவில் இல்லாததோடு இணைந்து பாலின சமத்துவத்தின் ஒரு விம்பத்தை வெளிப்படுத்திய போதிலும் இது ஆணாதிக்கம் இல்லாததைக் குறிக்கவில்லை மாறாக அது மிகவும் நுட்பமான மற்றும் சமூகத்தில் ஆழமாகப் பதிந்த வடிவங்களில் செயற்பட்டது (Jayawardena 1986). இந்த வெளிப்படையான மோதல் இல்லாத நிலையானது ஆழமாக வேரூன்றிய பாலின அடிப்படையிலான அடிமைத்தனத்தின் வடிவங்களைக் சிதைக்காமல் ஒரு பெண் பிரதமர் மற்றும் ஜனாதிபதி போன்ற மிக உயர்ந்த அரசியல் பதவிகளில் பெண்கள் உருவாவது உட்பட சில பெண்கள் தொழில்முறை மற்றும் அரசியல் தளங்களில் நுழையக்கூடிய நிலைமைகளை உருவாக்கியது. கல்வி மற்றும் சமூக சீர்திருத்தங்களால் வலுப்படுத்தப்பட்ட உயர் மட்ட அணுகல் கொண்ட இந்த வரலாற்று பின்னணி இன்றும் அரசியல் தளத்தில் பெண்களின் இடத்தை வடிவமைத்து கட்டுப்படுத்தும் தேசியவாத கலந்துரையாடல்களின் உருவாக்கத்திற்கு பங்களித்தது. என்றாலும் இந்த சமூக முன்னேற்றங்கள் பரந்த அளவிலான பாலின சமத்துவமாக மாறவில்லை. ஏனெனில் இலங்கையில் பெண் தொழிலாளர் பங்குபற்றல் தொடர்ந்தும் குறைந்த நிலையில் உள்ளதோடு வரையறுக்கப்பட்ட பெண் அரசியல் பிரதிநிதித்துவத்தையே பதிவு செய்கின்றது (World Bank 2025b).

பெண்களின் அரசியல் பங்குபற்றலுக்கான இந்த எதிர்ப்பானது சமூகத்தில் பெண்களின் சமூகப் பங்குகளை வரையறுக்கும் கலாச்சார மற்றும் தேசியவாத கலந்துரையாடல்களில் ஆழமாக வேரூன்றியுள்ளது. de Alwis (2002) வாதிட்டது போல பெண் அரசியல் பங்குபற்றலைச் சுற்றியுள்ள விவாதங்களின் வடிவம் மற்றும் உள்ளடக்கமும் காலப்போக்கில் மாறியிருந்தாலும் இந்த கலந்துரையாடல்களுக்கு அடிப்படையாக உள்ள "முதன்மையான அடிப்படைக் கருத்து" மாறவில்லை. இலங்கைப் பெண்கள் சிங்கள, தமிழ் அல்லது முஸ்லிம் என எவராக இருந்தாலும் பாகுபாடின்றி "பாரம்பரியம்", "கலாச்சாரம", "சமூகம்" மற்றும் "தேசம்" ஆகியவற்றை மீண்டும் உருவாக்குபவர்களாகவும், பேணி வளர்ப்பவர்களாகவும், அவற்றின் பாதுகாவலர்களாகவும் தொடர்ந்து கட்டமைக்கப்படுகின்றார்கள்.

5 அண்மைய தரவுகள் இந்த போக்கைத் தொடர்ந்தும் பிரதிபலிக்கின்றன. 2023ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்கள், இலங்கையில் பெண் கல்வியறிவு வீதம் (15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய பெண்களுக்கு) 92% இற்கும் அதிகமாக உள்ளது என்பதைக் காட்டுகின்றன. அதே நேரத்தில் தாய் இறப்பு வீதம் 100,000 உயிருள்ள பிறப்புகளுக்கு 18 இறப்புகள் என்ற அளவில் குறைவாகவே உள்ளது (உலக வங்கி 2025b).

இந்த பரந்த கட்டமைப்பிற்குள் குறிப்பாக சிங்கள தேசியவாதமானது பெண்ணை அடக்கமானவளாகவும், கற்புள்ளவளாகவும், வீட்டிற்கு அப்பால் உள்ள உலகத்தைப் பற்றி அறியாதவளாகவும், கணவர்களுக்குக் கீழ்ப்படிபவளாகவும், தங்கள் குடும்பங்களுக்கு அர்ப்பணிப்புள்ளவளாகவும் இருப்பதாக நீண்ட காலமாக உயர் நிலையில் வைத்து சித்தரித்துள்ளது (Marecek 2000). இத்தகைய விபரிப்புகளுக்குள் பெண்கள் தேசத்தின் கௌரவத்தையும் தூய்மையையும் உள்ளடக்கிய தேச அடையாளங்களாகவோ அல்லது பாதுகாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட வேண்டிய தேசிய சமூகத்தின் சொத்தாகவோ பார்க்கப்படுகிறார்கள் (Enloe 2014; Jayawardena and de Alwis 1996). இந்தச் சித்தரிப்புகள் பெண்களின் அரசியல் சுய அடையாளத்தை நீக்கி அவர்களை அரசியல் செயல்பாட்டாளர்களாகக் கருதாமல் கலாச்சாரச் சின்னங்களாக மாற்றி அவர்களை வீட்டு சூழலுக்குள் கட்டுப்படுத்தும் படிநிலை சார்ந்த பாலினப் வகிபாகங்களை வலுப்படுத்துகின்றன.

காலனித்துவமானது விக்டோரியா காலத்து ஒழுக்கநெறிக் கருத்துக்களை இலங்கைச் சமூகத்திற்குள் கொண்டு வந்ததன் மூலம் இந்த வேறுபாடுகளை வலுப்படுத்தியது. இந்தக் கொள்கைகள் கிறிஸ்தவ ஆணாதிக்க நெறிகளின் செல்வாக்கு மற்றும் பத்தொன்பதாம் நூ ற்றாண்டின் சிங்கள பௌத்த தேசியவாத சிந்தனைகளின் எழுச்சியுடன் இணைந்து பாலின அடிப்படையிலான மரியாதைக்குரியவர்கள் என்ற கருத்தாக்கத்தின் உருவாக்கத்திற்குப் பங்களித்தன (Jayaweera 1990; de Alwis 1997). உதாரணமாக காலனித்துவ காலத்தில் கிறிஸ்தவ மதப் பரப்புரைப் பணியாளர்களால் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் மதம் மாறிய சிங்களப் பெண்களை அவர்கள் மற்றவர்களை விட அதிக புத்திசாலிகளாகவும், வெளித்தோற்றத்தில் கண்ணியமானவர்களாகவும் அதிக ஒழுக்கமுள்ளவர்களாகவும் கருதியதை/சித்தரித்ததை வெளிப்படுத்துகின்றன (Selkirk 1844, 324). de Alwis (1997) கூற்றுப்படி "வெளித்தோற்றம்" என்ற சொல் பெரும்பாலும் "கண்ணியமான", "வீட்டுக்குரிய", "அடக்கமான", "மென்மையான", "எளிமையான", "கீழ்ப்படியும்" மற்றும் "வெட்கப்படும்" போன்ற சொற்களால் அலங்கரிக்கப்பட்டது. விக்டோரியா கால சிந்தனைகள் பெண்களின் பங்கை வீட்டை கவனிக்கும், நல்ல ஒழுக்கம் உடைய, நெறிமுறையுடன் வாழும் பாதுகாவலர்களாக வலியுறுத்தின. இதன் மூலம் பெண்மையை வீட்டுப் பணிகளுடனும் நல்ல ஒழுக்கத்துடனும் இணைத்தனர். காலனித்துவ ஆட்சிக்கு எதிராக உருவான தேசியவாத சிந்தனைகள் "பாரம்பரியம்" என்பதை பெருமைப்படுத்தி, சமூகத்தில் பாலின அடிப்படையிலான இடப் பிரிவை மேலும் வலுப்படுத்தின. இதில் பெண்களுக்கு வீடு சார்ந்த தனிப்பட்ட இடமும், ஆண்களுக்கு பொது அரசியல் இடமும் என பிரிக்கப்பட்டது (de Alwis 1995–96). பெண்கள் வீட்டுக்குள் இருந்து கலாச்சார மதிப்புகளை காக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டனர். ஆனால் அரசியல் அதிகாரம் ஆண்களின் கட்டுப்பாட்டில் இருந்தது (Marecek 2000). இதனால் பெண்கள் சமூகத்தின் மரியாதையை காக்கும் பொறுப்புடையவர்களாகக் கருதப்பட்டனர். அவர்களின் சமூக மதிப்பு அவர்கள் எவ்வளவு ஒழுக்கமாகவும் மரியாதையாகவும் நடக்கிறார்கள் என்பதிலேயே சார்ந்ததாக அமைந்தது.

தேசியவாத சிந்தனையில் உருவான “மரியாதைக்குரிய பெண்” என்ற கருத்து, நல்ல மனைவியாகவும் நல்ல தாயாகவும் இருப்பதை முக்கியமாகக் கருதியது. இதன் காரணமாக பெண்களின் உடை, பேச்சு மற்றும் நடத்தை கடுமையான நெறிமுறை கண்காணிப்புக்கு உட்பட்டது. சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுக்க விதிகளை மீறிய பெண்கள் பொதுமக்கள் முன் அவமானப்படுத்தப்பட்டனர். அவர்களின் குணநலன் தொடர்பில் தவறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதோடு கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டனர் (Pinto-Jayawardena and Kodikara 2003).

பெண்ணியல் அறிஞர்கள், பெண்களின் தேவைகளும் நலன்களும் உண்மையாக அங்கீகரிக்கப்பட்டு மதிக்கப்பட வேண்டுமானால் அவர்கள் தேசத்தில் செயன்முறையற்ற சின்னங்களாக இல்லாமல் அரசியல் அதிகாரம் கொண்ட பேசும் நபர்களாக உள்ளடக்கப்பட வேண்டும் என்று வாதிடுகின்றனர் (Marecek 2000). ஆயினும், பெண்களைப் பற்றிய தேசியவாத சித்தரிப்புகளானது ஆணாதிக்க சமூகக் கட்டமைப்புகளிலிருந்து அதிகாரத்தைப் பெற்று பெண்களின் அடிமைத்தனத்தையும் ஓரங்கட்டலையும் நிலைநிறுத்தி படிநிலை ரீதியான பாலின உறவுகளை தொடர்ந்து வலுப்படுத்துகின்றன (Qamar 2023). இந்தக் கட்டமைப்பிற்குள் குடும்ப வரைமுறைகளை மீறும் அல்லது அரசியல் வாழ்வில் நுழையும் பெண்கள் ஒழுக்க மற்றும் பாலியல் ரீதியான களங்கப்படுத்தலை எதிர்கொள்கின்றனர் (Marecek 2000). யுவால்-டேவிஸ் (1997) குறிப்பிடுவது போல பெண்கள் தேசத்தின் உயிரியல் மற்றும் கலாச்சார மறுபிறப்பாளர்களாக சித்தரிக்கப்படுகின்றார்கள். இந்த பங்கானது சமூகத்தில் அவர்களின் “சரியான/உகந்த” இடம் குறித்த கட்டுப்பாடான கருத்துக்களை ஆழமாக வேரூன்றச் செய்கிறது.

சலுகை பெற்ற பின்னணியில் இருந்து அரசியல் பதவிகளுக்கு வரும் பெண்களும் கூட இந்த செயன்முறையிலிருந்து தப்புவதில்லை. அவர்கள் பெரும்பாலும் ஒழுக்க ரீதியான தாக்குதல்களுக்கும், குறிப்பாக அவர்களின் பாலியல் கற்பைக் கேள்விக்குட்படுத்தும் குணநலன் அவதூறுகளுக்கு இலக்காகின்றார்கள். இந்த உத்திகளானது பொது வாழ்வில் நுழைய நினைக்கும் மற்ற பெண்களுக்கு எச்சரிக்கையாகவும் அமைகின்றன (Marecek 2000). இது அரசியலில் உள்ள பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கலான அல்லது இக்கட்டான நிலையை வெளிப்படுத்துகிறது. பொதுத் தளத்தில் நுழைவதற்கான ஒரு நிபந்தனையாக சமூக மரியாதை கோரப்படுகிறது, ஆனால் ஒருமுறை அங்கு நுழைந்த பிறகு அதைத் தக்கவைத்துக் கொள்வது சாத்தியமற்றது (de Alwis 1995). மாலதி de Alwis (1995, 150) தேசியவாதம் மற்றும் ஆண் ஆதிக்கத்தின் பின்னணியில் இந்த முரண்பாட்டை “தேசத்தின் ஆணாதிக்கப் பார்வையானது சமூக மரியாதையின் அடித்தளத்தை நுணக்கமாக தொடர்ந்து ஆய்வு செய்து சந்தேகத்துக்குள்ளாக்க முயல்கின்றது” என்று விளக்குகின்றார். இந்த ஆணாதிக்கப் பார்வை, அரசியலை ஒரு ஆண் ஆதிக்கக் களமாகக் கருதும் ஒரு அரசியல் கலாச்சாரத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்துகின்றது. மேலும் அரசியல் உட்பட பொது வாழ்வில்

பெண்களின் நுழைவானது சமூகத்தால் விதிக்கப்பட்ட அவர்களின் பங்கை மீறுவதாகக் கருதப்படுகின்றது (Marecek 2000).

இலங்கையில் பெண்கள் அரசியல் பதவிகளை அடைவதற்கான வழிகளை வரலாற்று ரீதியாக இந்த முறைமைகள் வடிவமைத்திருந்தாலும் அவை முற்றிலும் நிலையானவை அல்ல என்பதை அண்மைய நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மேலே விளக்கப்பட்டுள்ளபடி சுதந்திரத்திற்குப் பிந்தைய தசாப்தங்களில் ஆண் அரசியல்வாதிகளின் மனைவிகள், மகள்கள் அல்லது விதவைகள் என்ற முறையில் பெண்களின் பாராளுமன்ற நுழைவானது பெரும்பாலும் உறவுமுறைப் பிணைப்புகளின் மூலமே நிகழ்ந்ததோடு அவர்கள் உயர்மட்ட அரசியல் வலையமைப்புகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தனர். தேர்தல் அரசியலும் அதே அரசியல்வாதிகளின் மீள் நுழைவையே மீள உருவாக்கும் போக்கைக் கொண்டிருந்தது. அவர்கள் தேர்தல் சுழற்சிகளுக்கு இடையே பாராளுமன்றத்தில் அடிக்கடி கட்சிகளை மாற்றிக்கொண்டாலும், மீண்டும் மீண்டும் நுழைந்து தங்கள் அரசியல் இருப்பைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டனர். என்றாலும் 2024 பொதுத் தேர்தலின் போது இது ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறித்தது. அதாவது பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையில் மட்டுமல்லாமல் அவர்கள் அரசியலில் நுழைந்த வழிகளிலும் இது பிரதிபலித்தது. மிக முக்கியமாக, இந்தப் பெண்களில் பலர் ஸ்தாபிக்கப்பட்ட அரசியல் குடும்பங்களிலிருந்து, குறிப்பாக ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களிடமிருந்து உருவாகவில்லை. இது அரசியல் வம்சாவளியானது ஒரு முதன்மை நுழைவுப் புள்ளியாகச் செயற்பட்ட முந்தைய போக்குகளிலிருந்து ஒரு மாற்றத்தைக் குறிக்கின்றது. கணிசமான விகிதத்தினர் படித்த தொழில் முறை பின்னணியுடையவர்களாக இருந்தனர். மேலும் பெரும்பான்மையானோர் முதல் முறையாக பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தனர். இது அரசியல் பதவிகளுக்கான அணுகலானது இனி உயர்மட்ட குடும்ப அடிப்படையிலான வலையமைப்புகளுக்குள் மட்டும் கட்டுப்படுத்தப்படவில்லை என்பதைக் காட்டுகிறது.

எந்தவொரு அரசியல் பாரம்பரியமும் இல்லாத ஒரு மலையகத் தமிழ் பெண் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் இந்த மாற்றம் மேலும் எடுத்துக்காட்டப்பட்டது. இது பாராளுமன்றத்தில் பெண்களின் சமூக மற்றும் இன அடையாளப் பின்னணியின் விரிவாக்கத்தைக் குறிக்கிறது. வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள், தொழில்முனைவோர், கல்வியாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில் பின்னணிகளைக் கொண்ட பெண்களின் இருப்பானது முறைசார் அரசியலில் நுழையும் நிபுணத்துவம் மற்றும் அனுபவங்களின் நிலைகள் விரிவடைவதைப் பிரதிபலிக்கின்றது. அவர்களில் இலங்கையில் முனைவர் பட்டம் பெற்ற முதல் பெண் பிரதமரான கலாநிதி ஹரிணி அமரசூரியவும் ஒருவர். இது தொழில்முறைப்படுத்தப்பட்ட அரசியல் பிரவேசத்தை நோக்கிய மாற்றத்தை அடையாளப்படுத்துகிறது (Parliament of Sri Lanka 2026a). இந்த மாற்றங்கள் நீடித்த

மாற்றமாக இருக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இருப்பினும், அவை இலங்கையில் பெண்கள் அரசியல் பதவிகளுக்கு செல்லும் கட்டமைப்புப் பாதைகளில் ஒரு சாத்தியமான மறுசீரமைப்பை சுட்டிக்காட்டுகின்றன.

இதேபோன்று மிகவும் எச்சரிக்கையான ஒரு மாற்றத்தை உள்ளூராட்சி மட்டத்திலும் காண முடிகிறது. 2018 தேர்தல்களைத் தொடர்ந்து 23 சதவீதமாக இருந்த பெண்களின் பிரதிநிதித்துவம் 2025 உள்ளூராட்சித் தேர்தல்களின் ஆரம்பத் தரவுகளின்படி ஏறக்குறைய 24 சதவீதமாக[6] அதிகரித்துள்ளது. இந்தப் புள்ளிவிபரங்கள் ஒரு மிதமான ஏற்றப் போக்கைக் காட்டினாலும் பல உள்ளூராட்சி அமைப்புகளில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் தீர்க்கப்படாத நியமனங்கள் காரணமாக இறுதி முடிவுகள் இன்னும் உறுதிப்படுத்தப்படாததால், இவை தற்காலிகமானவையாகவே இருக்கின்றன. ஆகையால், பெண்களின் எண்ணிக்கைப் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதில் இட ஒதுக்கீட்டு முறையின் தொடர்ச்சியான தாக்கத்தை இந்த அதிகரிப்பு சுட்டிக்காட்டினாலும் இது உள்ளூராட்சி மட்டத்தில் மேலும் கணிசமான அரசியல் பங்குபற்றலாக மாறுமா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

## குறியீட்டுப் பிரதிநிதித்துவம் மற்றும் உண்மைப் பிரதிநிதித்துவம்

இலங்கையின் தேசியவாத மற்றும் ஆணாதிக்கக் கட்டமைப்புகளுக்குள் பெண்களை கலாச்சாரச் சின்னங்களாக வரையறுக்கும் சூழலில் அரசியலில் பெண்களின் அதிகரித்த பங்குபற்றலானது உண்மையிலேயே அதிகார உறவுகளை மாற்றுகிறதா அல்லது ஏற்கனவே உள்ள படிநிலைகளை மீண்டும் உருவாக்குகிறதா என்ற கேள்விகள் எழுகின்றன. பெண்கள் பொது வாழ்வில் அடியெடுத்து வைக்கும்போது அவர்கள் தொடர்ந்து ஒழுக்கக் கண்காணிப்பு, நிறுவனத் தடைகள் மற்றும் ஆழமாக வேரூன்றிய பாலின நெறிகளை எதிர்கொள்கின்றனர். இந்த நிலையில் பெண்களின் வெறும் இருப்பு மற்றும் செல்வாக்கிற்கும் இடையிலான வேறுபாடு இலங்கையின் 25% உள்ளூராட்சி ஒதுக்கீடு போன்ற நடவடிக்கைகளின் விளைவுகளை மதிப்பிடுவதற்கு முக்கியமானதாகிறது.

இதனை ஆய்வு செய்வதற்கு அரசியல் பிரதிநிதித்துவம் என்பது எதைக் குறிக்கிறது என்பதைத் தெளிவுபடுத்துவது அவசியமாகிறது.. அரசியல் பிரதிநிதித்துவம் என்பது மக்கள் தொகையின் பல்வகைமையைப் பிரதிபலிக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் இறைமை செயற்படுத்தப்படுகிறது என்ற கொள்கையில் வேரூன்றியுள்ளது. ஒரு சிறந்த ஜனநாயக அமைப்பில் பெண்கள் சமமான அல்லது அதற்கு நெருங்கிய எண்ணிக்கையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதையும் அவர்களின் பொதுவான மற்றும் பாலினம் சார்ந்த நலன்கள் திறம்பட கவனிக்கப்படுவதையும் உறுதி செய்யும் (Wickramasinghe and

6 உள்ளூராட்சி அமைப்புகளின் உதவி ஆணையாளர் ஆசிரியருடனான மேற்கொண்ட தனிப்பட்ட தொடர்பு, 30 மார்ச் 2026. நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் தீர்க்கப்படாத நியமனங்கள் காரணமாக புள்ளிவிபரங்கள் தற்காலிகமானவை.

Kodikara 2012). Pitkin (1967) முறையான, விவரண, குறியீட்டு மற்றும் உள்ளடக்க ரீதியான பிரதிநிதித்துவத்தின் நான்கு வடிவங்களை அடையாளம் கண்டார். முறைசார்ந்த பிரதிநிதித்துவம் என்பது பிரதிநிதிகள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதைத் தீர்மானிக்கும் செயல்முறைகளைக் குறிக்கிறது. விவரண பிரதிநிதித்துவம் என்பது அரசியல் அமைப்புகளில் பெண்களின் எண்ணிக்கை சார்ந்த இருப்பை அளவிடுகிறது. குறியீட்டுப் பிரதிநிதித்துவம் என்பது பெண்களின் இருப்புடன் இணைக்கப்பட்டுள்ள விடயங்களில்/ அர்த்தங்களில் கவனம் செலுத்துகிறது மற்றும் உண்மைப் பிரதிநிதித்துவம் என்பது பிரதிநிதிகள் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் நலன்களை எந்த அளவிற்கு முனைப்புடன் முன்னெடுத்துச் செல்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது (Pitkin 1967; Childs and Krook 2009). Pitkin (1967) உண்மைப் பிரதிநிதித்துவத்தை "ஒரு உண்மையான வகை" என்று கருதினார். ஏனெனில் அது பிரதிநிதிகளின் நடவடிக்கைகளானது தொகுதி மக்களின் தேவைகளுடன் ஒத்திசைவாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

ஆயினும், உண்மைப் பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இலக்கியங்கள்/ ஆய்வுகள் அதிகமாக வந்தபோதிலும் இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னரும் பெண்களின் அரசியல் இருப்பானது வியக்கத்தக்க வகையில் குறைவாகவே இருந்து வருகிறது. அட்டவணை 1 இல் காட்டப்பட்டுள்ளபடி, உலகின் முதல் பெண் பிரதமரையும் பின்னர் ஒரு பெண் ஜனாதிபதியையும் தேர்ந்தெடுத்ததாக இலங்கை அடிக்கடி குறிப்பிட்ட போதிலும் சுதந்திரத்திற்குப் பிந்தைய தசாப்தங்களில் தேசிய அளவில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6.5% ஐத் தாண்டவில்லை. அண்மையில் இது 9.8% ஆக அதிகரித்த போதிலும் மக்கள்தொகையில் பெண்களின் விகிதத்துடன் ஒப்பிடுகையில் பிரதிநிதித்துவம் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகவே உள்ளது. மேலும் உள்ளூராட்சி மட்டத்திலும் இதேபோன்ற ஒரு போக்கே காணப்படுகிறது. அட்டவணை 2இல் விளக்கப்பட்டுள்ளபடி 2018 இல் பாலின ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு பெண் பிரதிநிதித்துவம் 2.5% ஐத் தாண்டவில்லை. இது முறைசார்ந்த அரசியல் நிறுவனங்களுக்குள் பெண்களின் மிகக் குறைந்த அளவிலான இருப்பை எடுத்துக்காட்டுகிறது. பெண்களின் இருப்பு குறைவாக இருக்கும் இத்தகைய சூழல்களில் அவர்களின் உள்ளீர்ப்பானது அரசியல் அதிகாரத்தின் ஒரு உள்ளடக்க மாற்றமாக இல்லாமல் பெரும்பாலும் ஒரு குறியீட்டு/அடையாளப்பூர்வமான நடவடிக்கையாக சுருங்கிவிடும் அபாயம் உள்ளது.

*அட்டவணை 1: 1947 முதல் 2024 வரை பாராளுமன்ற மட்டத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம்*

| சட்டத்துறை | ஆண்டு | மொத்த ஆசனங்கள் | பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் | பெண் பிரதிநிதித்துவ சதவீதம் |
|---|---|---|---|---|
| பிரதிநிதிகள் சபை (1ஆவது பாராளுமன்றம்) | 1947 | 101 | 3 | 3.0 |
| பிரதிநிதிகள் சபை (2ஆவது பாராளுமன்றம்) | 1952 | 101 | 2 | 2.0 |
| பிரதிநிதிகள் சபை (3ஆவது பாராளுமன்றம்) | 1956 | 101 | 4 | 4.0 |
| பிரதிநிதிகள் சபை (4ஆவது பாராளுமன்றம்) | 1960 (மார்ச்) | 157 | 3 | 1.9 |
| பிரதிநிதிகள் சபை (5ஆவது பாராளுமன்றம்) | 1960 (ஓகஸ்ட்) | 157 | 3 | 1.9 |
| பிரதிநிதிகள் சபை (6ஆவது பாராளுமன்றம்) | 1965 | 157 | 6 | 3.8 |
| பிரதிநிதிகள் சபை (7ஆவது பாராளுமன்றம்) | 1970 | 157 | 6 | 3.8 |
| தேசிய அரசுப் பேரவை[7] | 1972 | 168 | 6 | 3.6 |
| தேசிய அரசுப் பேரவை | 1977 | 168 | 5 | 3.0 |
| 8 ஆவது பாராளுமன்றம் | 1978 | 168 | 11 | 6.5 |
| 9 ஆவது பாராளுமன்றம் | 1989 | 225 | 13 | 5.8 |
| 10 ஆவது பாராளுமன்றம் | 1994 | 225 | 12 | 5.3 |
| 11 ஆவது பாராளுமன்றம் | 2000 | 225 | 9 | 4.0 |
| 12 ஆவது பாராளுமன்றம் | 2001 | 225 | 10 | 4.4 |
| 13 ஆவது பாராளுமன்றம் | 2004 | 225 | 14 | 6.2 |
| 14 ஆவது பாராளுமன்றம் | 2010 | 225 | 13 | 5.8 |
| 15 ஆவது பாராளுமன்றம் | 2015 | 225 | 13 | 5.8 |
| 16 ஆவது பாராளுமன்றம் | 2020 | 225 | 12 | 5.3 |
| 17 ஆவது பாராளுமன்றம் | 2024 | 225 | 22 | 9.8 |

ஆதாரம்: இலங்கை பாராளுமன்றம் 2026ய் இலங்கை பாராளுமன்றம் 2026டி மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2026 ஆகியவற்றின் அடிப்படையில் ஆசிரியரால் தொகுக்கப்பட்டது.

7 1972 அரசியலமைப்பின் கீழ், இலங்கையின் சட்டமன்றமாக இருந்த பிரதிநிதிகள் சபைக்கு பதிலாக தேசிய அரசுப் பேரவை மாற்றப்பட்டது.

*அட்டவணை 2: 1966 முதல் 2018 வரை உள்ளூராட்சி மட்டத்தில் பெண் பிரதிநிதித்துவம்*

| ஆண்டு | பெண் பிரதிநிதித்துவ சதவீதம் |
|---|---|
| 1966 | 1.5 |
| 1970 | 2.1 |
| 1979 | 2.5 |
| 1982 | 1.5 |
| 1991 | 1.7 |
| 1997 | 1.9 |
| 2006 | 1.8 |
| 2008 - 2011[8] | 2.0 |
| 2018 | 23 |

ஆதாரம்: விக்கிரமசிங்க மற்றும் கொடிகார 2020, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் 2023 இற்கான மக்கள் நடவடிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் ஆசிரியரால் தொகுக்கப்பட்டது.

என்றாலும் குறியீட்டுப்/அடையாளப் பிரதிநிதித்துவம் என்பது பாரம்பரிய பாலின நெறிகளைத் தகர்ப்பதற்குப் பதிலாக வலுப்படுத்துகிறது என்று அடிக்கடி விமர்சிக்கப்படுகிறது. Gamson (1997), Lombardo மற்றும் Meier (2014) ஆகியோர், இது ஆண்களைப் பொது வாழ்க்கையில் பொது வகிபங்காளர்களாகவும் பெண்களை வீட்டுவேலைப் பராமரிப்பாளர்களாகவும் சித்தரிப்பதன் மூலம் பாலின அடிப்படையிலான பிரிவினைகளை நிலைநிறுத்தக்கூடும் என்று குறிப்பிடுகின்றனர். Meier மற்றும் Severs (2018, 35) மேலும் கூறுகையில் குறியீட்டுப் பிரதிநிதித்துவம் பாலின ரீதியில் குறிப்பிட்ட பங்குகளையும் அதிகாரப் படிநிலைகளையும் நிலைநிறுத்தி சமத்துவத்தின் மாயையை மட்டுமே வழங்கக்கூடும் என்று வாதிடுகின்றனர். இது தொடர்பான மற்றொரு கவலையாக அடையாளப் பிரதிநிதித்துவம் காணப்படுகிறது: Kanter (1977) குறிப்பிடுகையில், அரசியல் தளங்களின் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக உள்ள பெண்கள் முழுமையான அரசியல் செயற்பாட்டாளர்களாகக் கருதப்படாமல் பெரும்பாலும் தங்கள் பாலினத்தின் பிரதிநிதிகளாகவே நடத்தப்படுகிறார்கள். இது நிறுவனக் கலாச்சாரத்தை ஆண்களின் கைகளின் கட்டுப்பாடுகளில் கொடுத்துவிட்டு பெண்களின் கணிசமான செல்வாக்கைக் கட்டுப்படுத்துகிறது (Childs and Krook 2008).

8 2008 (மட்டக்களப்பில் 9 உள்ளூராட்சி மன்றங்கள்), 2009 (யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் தலா ஒரு உள்ளூராட்சி மன்றம்) மற்றும் 2011 (322 உள்ளூராட்சி மன்றங்கள்) ஆகிய ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடன் உள்ளூராட்சி மன்றங்கள் செயற்பட்டு வந்ததால் இந்தக் காலவரம்பு பயன்படுத்தப்பட்டது (கொடிகார 2012).

ஆனால் குறியீட்டுப் பிரதிநிதித்துவம் குறித்த இந்த விமர்சனங்கள் பெண்களின் அரசியல் பங்களிப்பில் இருந்து உண்மையில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பது பற்றிய பரந்த கேள்விகளையும் எழுப்புகின்றன. குறிப்பாக சட்டமன்ற அமைப்புகளில் பெண்கள் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை அடைந்தவுடன் பாலின ஒதுக்கீடுகள் ஜனநாயக நடைமுறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என்ற ஒரு அனுமானம் பெரும்பாலும் உள்ளது. இந்த எதிர்பார்ப்புகளில் பெண்களுக்கு அதிக அதிகாரமளிப்பு, ஜனநாயகக் குடியுரிமை மற்றும் தலைமைத்துவம் தொடர்பான திறன்களையும் அறிவையும் பெறுதல், மற்றும் பெண்களின் பிரச்சினைகளுக்கு அதிக கவனம் செலுத்துதல் ஆகியவை அடங்கும் (Lupien 2020, citing Altschuler and Corrales 2012). இருப்பினும், இத்தகைய எதிர்பார்ப்புகள் பெண்களின் அரசியல் பங்குபற்றல் மீது அளவுக்கு மீறிய பொறுப்பைச் சுமத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளன. Kodikara (2023) வாதிடுவது போல ஆண்களின் பிரதிநிதித்துவத்தின் தரத்தைப் பொருட்படுத்தாமல் அவர்கள் வழக்கமாக அரசியல் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதைப் போலவே பெண்களும் ஜனநாயக விளைவுகளைக் குறிப்பிடத்தக்க வகையில் மாற்றுகிறார்களா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் பிரதிநிதித்துவத்திற்கான உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். இதற்கு மாறாகக் கூறுவது, ஆண்களுக்கு விதிக்கப்படாத உயர்ந்த தர நிலைக்கு பெண்களை உட்படுத்துவதாகும்.

மேலும் தற்போதுள்ள அரசியல் கட்டமைப்புகளுக்குள் குறிப்பாக அரசியல் கட்சிகள் மூலமாகவும் இட ஒதுக்கீடுகள் செயல்படுகின்றன என்பதையும் அறிவது முக்கியமாகும். இந்தக் கட்சிகள் பெண்களின் பங்குபற்றலை வடிவமைத்து பெரும்பாலும் கட்டுப்படுத்துகின்றன. பெண் அரசியல்வாதிகள் கட்சித் தேர்தல் அறிக்கைகள் மற்றும் திட்டங்களுக்கு மட்டுமல்லாமல் (Cornwall and Goetz 2005) அவர்களின் செயற்பாட்டுத் திறனைக் கட்டுப்படுத்தக்கூடிய முறைசாரா நிறுவன விதிமுறைகளுக்கும் உட்பட்டவர்கள். எண்ணிக்கையளவில் பிரதிநிதித்துவம் அதிகரித்தாலும் ஏன் தானாகவே கணிசமான செல்வாக்காக மாறுவதில்லை என்பதை இந்தக் கட்டுப்பாடுகள் விளக்க உதவுகின்றன. தெற்காசியாவிலிருந்து கிடைக்கும் ஒப்பீட்டு ஆதாரங்கள் இந்த நிலையை மேலும் விளக்குகின்றன. உதாரணமாக இந்தியாவின் தமிழ்நாட்டில் பாலின அடிப்படையிலான இட ஒதுக்கீட்டுக் கொள்கையானது உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் இருப்பை குறிப்பிடத்தக்க அளவில் சில சமயங்களில் 50% வரை அதிகரித்திருந்தாலும் ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் முடிவெடுக்கும் வலையமைப்புகளிலிருந்து பல பெண்கள் விலக்கப்பட்டவர்களாகவே இருந்தனர் (Patel et al. 2021). பாகிஸ்தானிலும் இதேபோன்ற போக்குகள் காணப்படுகின்றன. அங்கு கட்சித் தேர்தல் அறிக்கைகளை உருவாக்கும் குழுக்கள் போன்ற முக்கிய கட்சிக் குழுக்களில் பெண்கள் அரிதாகவே சேர்க்கப்படுகிறார்கள். இது முக்கிய கொள்கைத் திட்டங்களில் அவர்களின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துகிறது. மாறாக அவர்கள் கணிசமான கொள்கைப் பணிகளுக்குப் பதிலாக வாக்காளர்களைத் திரட்டுவதற்கும் பொது ஆர்ப்பாட்டங்களுக்கும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறார்கள் (Naseer et al. 2023). பங்களாதேஷில் பெண் பாராளுமன்ற

உறுப்பினர்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீடு இல்லை அவர்களில் பலர் இரண்டாம் நிலை பாராளுமன்ற உறுப்பினர்களாகவோ அல்லது ஆளும் கட்சிக்கு ஒரு “வாக்கு வங்கியாகவோ” நடத்தப்படுகிறார்கள் (UN Women 2021). இந் நாடுகள் அனைத்திலும் ஒதுக்கீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் களங்களிலிருந்து அடிக்கடி ஓரங்கட்டப்படுகிறார்கள். இது அடையாளக் கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது. இக்கோட்பாடானது சிறுபான்மை அந்தஸ்து மற்றும் குறைந்த சமூக அந்தஸ்து ஆகியவை தலைமைப் பதவிகளில் கூட அதிகாரத்தை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்பதைக் காட்டுகிறது (Kanter 1977). ஆழமான ஆணாதிக்க அரசியல் அமைப்புகளில் பெண்களின் அடையாளபூர்வமான இருப்பானது வேரூன்றிய அதிகாரப் படிநிலைகளை அரிதாகவே சீர்குலைக்கிறது என்பதோடு அது நிறுவனக் கட்டுப்பாட்டை ஆண்களின் கைகளில் உறுதியாக விட்டுவிடக்கூடும்.

எனினும் இது ஒதுக்கீடுகளை நிராகரிப்பதற்கான காரணமாக அமையாது. மாறாக ஒதுக்கீடுகளையும் விவரணப் பிரதிநிதித்துவத்தையும் அரசியல் பங்குபற்றலின் உள்ளார்ந்த வடிவங்களை அடைவதற்கான ஒரு ஆரம்பப் படியாகக் கருதுவது அவசியமாகும். உதாரணமாக சில பெண்களுக்கு இந்த நிறுவனக் கட்டுப்பாடுகளை தந்திரமாகச் சமாளிக்க முடிந்துள்ளதாக ஒப்பீட்டுச் ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. பெண்கள் சில சந்தர்ப்பங்களில், சட்டப்பூர்வ அங்கீகாரத்தைப் பெறுவதற்காக குடும்ப உறவுகள், சமூக அந்தஸ்து அல்லது பாரம்பரிய பாலினப் வகிபாகங்களை பயன்படுத்தியுள்ளனர் என்று Patel et al. (2021) சுட்டிக்காட்டுகின்றனர். இது குறிப்பிட்ட ஆனால் கட்டுப்படுத்தப்பட்ட செல்வாக்கு இடங்களை உருவாக்குவதற்குச் சில நேரங்களில் குறியீட்டு நிலைப்பாட்டைப் பயன்படுத்த முடியும் என்பதைக் காட்டுகிறது. இலங்கையில் இந்த உத்தியானது மிகவும் தெளிவாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசியல் எழுச்சியில் காணப்படுகிறது. அதாவது பெண்களின் அரசியல் அணுகலை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் மூலம் அல்லாமல் சிறிமாவோ பண்டாரநாயக்க எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவின் விதவையாக அதிகாரத்திற்கு வந்தார். (Jayawardena 1986; Kodikara 2009). அரசியல் தடைகளையும் “சமையலறை நெருப்பை தவிர எதற்கும் அவர் தலைமை தாங்கியதில்லை” என்ற கூற்றுகளையும் மீறி அவர் ஒரு உயர்குடி இல்லத்தரசி என்ற நிலையிலிருந்து இலங்கையில் மூன்று முறை பிரதமராக இருந்தார் (Gooneratne 1986, 160). அவரது இந்த வளர்ச்சிக்கு அவரது உயர்குடிப் பின்னணியும் Partha Chatterjee என்பவர் (1993) விபரிக்கும் “புதிய பெண்” என்ற தேசியவாத பாலின சித்தாந்தமும் வழிவகுத்தன. அந்தப் புதிய பெண்ணாணவள் கல்வி கற்றவளாகவும், பொது வாழ்வில் திறன்பட செயற்படக் கூடியவளாகவும் அதே சமயம் அடையாளபூர்வமாக பாரம்பரியத்தில் வேரூன்றியவராகவும் இருந்தார். இந்த வரையறை ஆண் அரசியல்வாதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் நம்பிக்கையளித்தது. இதன்மூலம் ஆணாதிக்க நெறிமுறைகளுக்கு அடிப்படையாக சவால் விடுக்காமலேயே அவரால் பொது வாழ்வில் நுழைய முடிந்தது. சிறிமாவோ ஆண்களுக்குப் பெண்கள் செய்யும்

“அடிமைத்தனம்” தன்னார்வமானது என்றும், அது பௌத்தப் பாரம்பரியத்தில் வேரூன்றியது என்றும், ஆண்களோ பெண்களோ ஒருவரை ஒருவர் விட உயர்ந்தவர்களாகக் கருதப்படவில்லை என்றும் வலியுறுத்தினார். இத்தகைய கூற்றுக்கள் சமத்துவமாகத் தோன்றினாலும் கலாச்சார ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பாலினப் பங்குகளை வலுப்படுத்தி ஆணாதிக்கக் குடும்பத்தை “புனிதமான அலகாக” சட்டப்பூர்வமாக்கின (Rambukwella and Ruwanpura 2016). Kodikara (2009) குறிப்பிடுவது போல உறவுமுறை அடிப்படையிலான அரசியல் நுழைவானது ஒரு குழுவாகப் பெண்களுக்கு கட்டமைப்பு மாற்றமாக அரிதாகவே மாறுகிறது. இது அவர்களின் அரசியல் பங்குகளைப் பாலின உணர்வுள்ள செயல்திட்டங்களுக்குப் பதிலாகக் குடும்ப விசுவாசத்துடன் பிணைத்து வைக்கிறது.

Phillip's (1995) வாதமானது பதவிகளில் பெண்கள் வெறுமனே இருப்பது உண்மையான பிரதிநிதித்துவமாகாது என்று எடுத்துக்காட்டுகிறது. பெண்கள் அடையாளபூர்வமாகவோ அல்லது குடும்ப வழிகளிலோ அரசியலில் நுழையும்போது விவரண இருப்புக்கும் உள்ளடக்கச் செல்வாக்கிற்கும் இடையிலான இடைவெளி குறிப்பாகத் தெளிவாக வெளிப்படுகிறது. ஏனெனில் இந்த வழிகள் பாலின சமத்துவமின்மையைத் தக்கவைக்கும் நிறுவனத் தடைகளை பெரும்பாலும் உடைக்கத் தவறுகின்றன. (Patel et al., 2021). குறியீட்டுப் பிரதிநிதித்துவம் உயர்நிலை வெற்றிக் கதைகளை உருவாக்கக்கூடும் என்றாலும் ஆழமான நிறுவன சீர்திருத்தமில்லாமல் அது சவால் விடுவதாகத் தோன்றும் விதிமுறைகளையே மேலும் வலுப்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

பெண்கள் குறியீட்டு நபர்களாக இருப்பதிலிருந்து உள்ளடக்க அரசியல் செயற்பாட்டாளர்களாக மாறுவதற்கு கட்டமைப்பு மாற்றம் அவசியமாகும். ஆணாதிக்கத்திற்கும் முறைசாரா அதிகார வலைப்பின்னல்களுக்கும் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கும் அரசியல் நிறுவனங்களைச் சீர்திருத்த திட்டமிட்ட முயற்சிகள் தேவைப்படுகின்றன. இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு பெண்களின் அரசியல் பங்குகளை வடிவமைக்கும் நிறுவனக் கலாச்சாரங்களை ஆய்வு செய்வது அவசியமாகும். ஒதுக்கீடுகள் பதவிகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்தாலும் கூட ஆணாதிக்க நெறிமுறைகளும் முறைசாரா அதிகார வலைப்பின்னல்களும் நீடித்து பெண்களின் அதிகாரத்தையும் முடிவெடுக்கும் திறனையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தக்கூடும் நிலை வரலாம். முறைசார் விதிகளும் முறைசாரா நெறிகளும் எவ்வாறு பாலின அடிப்படையிலான அதிகாரத்தை அரசியல் கட்டமைப்புகளில் உட்பொதிக்கின்றன என்பதைக் காட்டுவதன் மூலம் இந்தச் செயல்முறைகளை பகுப்பாய்வு செய்ய பெண்ணியல் நிறுவனவாதம் ஒரு கட்டமைப்பை வழங்குகின்றது (Mackay, Kenny and Chappell 2010; Krook and Mackay 2011).

# அத்தியாயம் 3

## எண்ணக்கரு ரீதியான கட்டமைப்பு: பெண்ணிய நிறுவனமயமாக்கம்

குறியீட்டு மற்றும் உண்மையான பிரதிநிதித்துவம் என்பது அரசியல் களத்தில்/வெளிகளில் யார் இருக்கின்றார்கள், அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதில் கவனம் செலுத்தும் அதேவேளை பெண்ணிய நிறுவனமயமாக்கமானது அந்த விளைவுகளை வடிவமைக்கும் நிறுவன விதிகள், நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகள் மீது கவனத்தைச் செலுத்துகின்றன. இலங்கை போன்ற சூழல்களில் முறைசார் வழிமுறைகளும் முறைசாரா மரபுகளும் பின்னிப்பிணைந்துள்ள நிலையில் அரசியல் வாழ்வில் பாலின அடிப்படையிலான அதிகார உறவு எவ்வாறு நிறுவனங்களுக்குள் வேரூன்றியுள்ளது என்பதை வெளிப்படுத்துவதில் இந்தக் கண்ணோட்டத்திற்கு/அணுகுமுறையிற்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உள்ளது.

அரசியல் நிறுவனங்கள் பெரும்பாலும் பாலின சார்பற்றவையாகக் கருதப்பட்டாலும் வரலாற்று ரீதியாக அவை பெண்களை விலக்கி கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் அவை ஆழமாக வேரூன்றிய பாலினப் பாரபட்சங்களைத் தொடர்ந்தும் பிரதிபலிக்கின்றன (Witz and Savage 1992; Goetz 2007, 47). இதன் விளைவாக ஆண்கள் அரசியலில் அதிகளவில் பிரதிநிதித்துவம் பெறுவது மட்டுமல்லாமல் இயல்பாகவே அதிக சட்டபூர்வமான அரசியல் செயற்பாட்டாளர்களாகவும் கருதப்படுகின்றார்கள் (Duerst-Lahti 2008, 182). ஆணாதிக்கத்தின் இந்த இயல்பாக்கமானது வெறும் கட்டாயப்படுத்தலின் மூலம் மட்டுமல்லாமல், தலைமைத்துவம் மற்றும் ஆண்மை ஆகியவற்றுக்கிடையிலான கலாச்சாரத் தொடர்புகள் மூலமாகவும் தொடர்ச்சியாக நிலைநிறுத்தப்படுகின்றது (Hooper 2001, 41). இது பெண்களின் கண்ணோட்டங்களை மறைத்துவிடும் வகையில் நிறுவன விதிகள், நடைமுறைகள் மற்றும் கலந்துரையாடல்களால் வலுப்படுத்தப்படுகின்றது. (Acker 1992, 567; Hawkesworth 2005, 147). இதன்படி செப்பல் (2006) என்பவர் குறிப்பிடும் பொருத்தத்தன்மையின் பாலினம் சார்ந்த தர்க்கம் உள்ளது. இது அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு “ஏற்றுக்கொள்ளக்கூடிய” ஆண் மற்றும் பெண் நடத்தை முறைகளை வரையறுக்கும் முறைசார் மற்றும் முறைசாரா விதிகள், நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகளின் தொகுப்பாகும். அரசியல் மற்றும் அதிகாரத்துவ தளங்களில் ஆணாதிக்கத்தால் வரலாற்று ரீதியாக வடிவமைக்கப்பட்ட இத்தகைய தர்க்கமானது பரந்த சமூக மற்றும் அரசியல் பாலின எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிப்பதோடு அவற்றை மேலும் வலுப்படுத்தும் பாலின விளைவுகளையும் உருவாக்குகின்றது. இந்த விதிகளில் சில விடயங்கள் அதிகார பூர்வமாகக் குறியிடப்பட்டிருந்தாலும் பல முறைசாரா நடைமுறைகளில் உட்பொதிந்தவையாக இருந்து பெரும்பாலும் அவை கேள்விக்குட்படுத்தப்படாமல் “இயல்பானவை” எனக் கருதப்படுகின்றன (Chappell 2006). நிலவும் பாலின ஒழுங்கிற்கு சவால் விடுபவர்களுக்கு பெரும்பாலும் பெண்களுக்கு எதிரான நுட்பமான புறக்கணிப்பு, எதிர்ப்பு அல்லது குறியீட்டு வன்முறை வடிவங்கள் மூலம் அவை நிலைநிறுத்தப்படுகின்றன. இதனால் நிறுவன நிலைமையைத் தக்கவைத்துக் கொள்ளும் வல்லமை வாய்ந்த ஆண்

மேலாதிக்கக் குழுக்களின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. (Holmes 2020; Chappell 2006).

ஆண்கள் ஆதிக்கம் செலுத்தி வந்த இத்தகைய துறைகளில் பெண்கள் படிப்படியாக நுழைந்திருந்தாலும் (Witz and Savage 1992) அவர்களின் இருப்பானது பெரும்பாலும தற்போதுள்ள நெறிமுறைகளைச் சீர்குலைத்து ஆணாதிக்கத்தின் அளவையே வெளிப்படுத்துகின்றது. (Lovenduski 2005, 147). எனவே எண்ணிக்கையில் பாலின சமத்துவத்தை அடைவது மட்டுமே நிறுவன மாற்றத்தை உறுதி செய்யாது (Chappell and Waylen 2013). அரசியல் துறையில் “பொருத்தத்தன்மையின் பாலினம் சார்ந்த தர்க்கம்” தலைமை தாங்குவதற்கான பகுத்தறிவு, அதிகாரம் மற்றும் மனோபாவத்தை ஆண்கள் இயல்பாகவே கொண்டுள்ளனர் என்ற கருதுகோள் பாரம்பரியமாகவே வெளிப்பட்டுள்ளது. இதற்கு மாறாக பெண்கள் துணை அல்லது ஆதரவு வழங்கும் பங்கினராகவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளனர் (Lovenduski 2005, 147). Connell's (2002) பாலின ஆட்சிமுறை பற்றிய கருத்து விளக்குவது போல இத்தகைய ஏற்பாடுகளானது “பல ஆண்கள் சௌகரியமாகவும், பெரும்பாலான பெண்கள் அசௌகரியமாகவும் இருக்கும்” (Lovenduski 2005) நிறுவனச் சூழல்களை உருவாக்குகின்றன. ஹூப்பர் (2001, 52) குறிப்பிடுவது போல பாரம்பரியமாக ஆண்பாலுக்குரிய பங்குகளில் ஆண்களுக்குப் பதிலாகப் பெண்களை நியமிப்பது இந்த நிறுவனங்களின் பாலின அடிப்படையிலான குறியீடுகளையோ அல்லது வேறூன்றிய நடைமுறைகளையோ அரிதாகவே சவாலுக்கு உட்படுத்துகின்றது.

பெண்ணிய நிறுவனமயமாக்கத்தின் ஒரு முக்கிய அடிப்படைக் கருத்து என்னவெனில் முறைசார் மற்றும் முறைசாரா நிறுவனங்கள் இணைந்து செயல்படுகின்றன என்பதாகும். முறைசார் நிறுவனங்கள் என்பது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட, தெளிவாக வரையறுக்கப்பட்ட சட்டங்கள் அல்லது விதிமுறைகள் போன்ற எழுத்துபூர்வமாக நெறிப்படுத்தப்பட்ட விதிகளாகும் (Lauth 2000, 24; Lowndes 2005, 292). இதற்கு மாறாக முறைசாரா நிறுவனங்கள் என்பது காலப்போக்கில் நிலைபெற்ற மரபுகள், பழக்கவழக்கங்கள் மற்றும் சமூக நெறிமுறைகளைக் கொண்டதாகும் (Pejovich 1999, 166; Helmke and Levitsky 2004, 727). மேலும் அவை எழுதப்படாதவையாகவும் கலாச்சார ரீதியாக ஆழமாகப் பதிந்தவையாகவும் இருப்பதால் மாற்றத்தை எதிர்க்கும் தன்மை கொண்டவையாக இருக்கின்றன (Helmke and Levitsky 2006). முறைசார் கட்டமைப்புகள் அனைவரையும் உள்ளடக்கியதாகத் தோன்றினாலும் இந்த முறைசாரா நெறிமுறைகள் பெரும்பாலும் பெண்களுக்கு எதிரான விளைவுகளை தோற்றுவிக்கின்றன. இவ்விரண்டிற்கும் இடையிலான தொடர்பைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் முறைசார் விதிகள் சமத்துவத்தை உறுதியளிக்கக்கூடும் அதே நிலையில் முறைசாரா நடைமுறைகள் அவற்றின் தாக்கத்தைச் சிதைக்கவோ அல்லது தளர்த்தவோ வழிவகுக்கும்.

இலங்கையில் இந்த முறைசாரா நெறிமுறைகள் அரசியல் நிறுவனங்களுக்குள் மட்டுமல்லாது குடும்பம் மற்றும் சமூக அமைப்புக்களின் வழியாகவும் செயற்படுகின்றன. ஏனெனில் அவை கண்ணியம் மற்றும் இல்லறம் தொடர்பான நெறிமுறைகள் மூலம் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை ஒழுங்குபடுத்துகின்றன. de Alwis (1988) குறிப்பிடுவது போல் வீட்டுச் சூழலானது வரலாற்று ரீதியாக பெண்களின் முதன்மை களமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இது Herath (2015) விவரிப்பது போல் பெண்களின் சமூக நிலையை வடிவமைக்கும் “பாரம்பரிய நம்பிக்கைகள், மனப்பான்மைகள் மற்றும் சமூக நடைமுறைகளின்” ஒன்றிணைந்த தொகுப்பை பிரதிபலிக்கின்றது. இத்தகைய நெறிமுறைகள் ஆணாதிக்கக் குடும்பக் கட்டமைப்புகளுக்குள் மீண்டும் மீண்டும் உருவாக்கப்படுகின்றன. இங்கு ஆண்களை விட பெண்கள் வேறுபட்ட வகையில் சமூகமயமாக்கப்படுகின்றார்கள். மேலும் அரசியல் நடத்தையானது பெரும்பாலும் ஆணதிகாரத்தின் மூலம் வழிநடாத்தப்படுகிறது (Herath 2015). உதாரணமாக, மனைவிகள் “கணவர் வாக்களிக்கும் அதே கட்சிக்கு வாக்களிக்க வேண்டும்” என்று எதிர்பார்க்கப்படுவது வழக்கத்திற்கு மாறான விடயமல்ல (Peiris 2022). இது பெண்களின் அரசியல் விருப்பங்கள் சுயாதீனமானவை அல்ல என்பதுடன் மாறாக அவை மற்றவர்களிடமிருந்து பெறப்பட்டவை என்ற கருத்தை வலுப்படுத்துகிறது. இதேபோல் இலங்கையில் தாய்மை என்பது கலாச்சார ரீதியாகப் போற்றப்பட்டாலும் பெண்களின் அறிவுசார் மற்றும் அரசியல் திறன்கள் அடிக்கடி குறைத்து மதிப்பிடப்படுகின்றன. அவர்களின் அறிவாற்றலானது பெரும்பாலும் “ஒரு சமையலறை கரண்டியின் நீளம் வரை மட்டுமே” உள்ளது என்ற கருத்துக்குள் சுருக்கப்படுகின்றன. இது பெண்களின் அறிவுசார் திறனை வீட்டு மட்டத்துக்குள் கட்டுப்படுத்தும் ஒரு ஆழமான பாலினப் பாகுபாடு கொண்ட கருத்தைப் பிரதிபலிக்கிறது (Attanayake 2008). இத்தகைய எதிர்பார்ப்புகள் பெண்களின் திறமை குறித்து உருவாகும் கருத்துக்களை மட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் பொது வாழ்வில் நுழைய விரும்பும் பெண்களுக்கு கிடைக்கும் குடும்ப ஆதரவின் அளவையும் வடிவமைக்கின்றது. UNFPA (2025) குறிப்பிடுவது போல் பெண்கள் பெரும்பாலும் தங்கள் சொந்த வீடுகளுக்குள்ளேயே பல்வேறு எதிர்ப்புக்களை எதிர்கொள்கின்ற சூழல் உருவாகின்றது.

ஆகவே அரசியல் களத்தைப் பொறுத்தவரை பெண்களின் பற்றிய பற்றிய குடும்பம் மற்றும் சமூகத்தின் பாரம்பரியக் கருத்தானது பெண்கள் வேட்பாளர்களாக முன்னேறுவதற்கு ஒரு குறிப்பிடத்தக்க தடையாக அமைகிறது. பெண்களின் நகர்வு, பொதுவெளியில் அவர்களின் இருப்பு, மற்றும் இரவு நேர அரசியல் நடவடிக்கைகளில் அவர்களின் பங்குபற்றல் ஆகியவை கட்சி அமைப்புகளுக்குள் மட்டுமல்லாமல் பெண்களின் சொந்தக் குடும்பங்களிலும் உள்ளூர் சமூகங்களிலும் கூட கடுமையான கண்காணிப்பு மற்றும் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன (Conway, Ahern and Steuernagel 2004; Dolan, Deckman and Swers 2010). இவ்வாறு பொருத்தத் தன்மையின் பாலினம் சார்ந்த தர்க்கமானது பல்வேறு நிறுவனத் தளங்களில் மீண்டும் மீண்டும் உருவாக்கப்படுகிறது. இது அரசியல் நிறுவனங்கள் தனித்துவமான அமைப்புக்கள் அல்ல மாறாக அதிகாரப் பதவிகளை யார் சட்டப்பூர்வமாக வகிக்க முடியும்

என்பதை கட்டமைக்கும் பரந்த சமூக உறவுகளுக்குள் அவை ஆழமாக பொதிந்துள்ளன என்பதை நிரூபிக்கின்றது/வெளிப்படுத்துகின்றது.

முறைசார் உள்ளடக்கத்திற்கும் முறைசாராக் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான இந்த பரஸ்பரத் தொடர்பானது கட்சி அரசியலிலும் இதேபோல் காணப்படுகிறது. இங்கு முறைசாரா அணுகல் கட்டுப்பாடானது முறைசார் சீர்திருத்தங்களை அடிக்கடி சீர்குலைக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளின் அணுகல் கட்டுப்பாட்டாளராக அரசியல் கட்சிகள், வேட்பாளர் தேர்வு, வள ஒதுக்கீடு மற்றும் முடிவெடுக்கும் வலையமைப்புகளுக்கான அணுகல் ஆகியவற்றைத் தீர்மானிக்கின்றன (Norris and Lovenduski 1995). இலங்கையில் இந்த அணுகல் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் பெண்களை வீட்டுப் பணிகளுக்குள் முடக்கி, அவர்களின் அரசியல் திறன்களைக் கேள்விக்குட்படுத்தும் பரந்த சமூக நெறிகளைப் பிரதிபலிக்கும் ஒரு ஆழமான ஆணாதிக்கக் கட்டமைப்பிற்குள் பொதிந்துள்ளன (Kodikara 2009; Kanold 2020; Herath 2015). கட்சி அமைப்புகள் மிகவும் மையப்படுத்தப்பட்டவையாகவும் ஆண்களின் ஆதிக்க வலையமைப்புகளால் வடிவமைக்கப்பட்டவையாகவும் இருப்பதால் தலைமைத்துவம் மற்றும் முடிவெடுக்கும் பதவிகளுக்கான பெண்களின் அணுகலானது கட்டுப்படுத்துகின்றன (Pinto-Jayawardena and Kodikara 2003). அரசியல் கட்சிகளில் பெண்களின் ஈடுபாடும் உறுப்பினர் தகுதியும் பெரும்பாலும் பெண்கள் பிரிவுகள் மூலமாகவே நிகழ்கின்றன என்றாலும் இந்த அமைப்புகள் பெண்களின் அரசியல் முன்னேற்றத்திற்கான உண்மையான வழித்தடங்களாகச் செயற்படுவதை காட்டிலும் முதன்மையாக ஆண் கட்சித் தலைமையின் நலன்களுக்கே சேவை செய்கின்றன என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அரசியல் கட்சிகள் தங்களின் பெண் பிரிவுகளை பொது வெளியில் பகிரங்கமாக ஊக்குவித்து பரந்த கட்சி கட்டமைப்புடன் கருத்தியல் ரீதியாக இணைந்துள்ளன எனக் காட்டினாலும் வரலாற்று ரீதியாக இந்த அமைப்புகள் தேர்தல்களின் போது பெண் வாக்காளர்களைத் திரட்டுவதற்கும் ஆண் அரசியல்வாதிகளுக்குத் துணை ஆதரவை வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன (Pinto-Jayawardena and Kodikara 2003). De Silva (1995) குறிப்பிடுவது போல அவர்களின் முக்கிய செயற்பாடுகள் நலத்திட்டப் பணிகளில் ஈடுபடுதல், வருமானம் ஈட்டும் முயற்சிகள், கூட்டங்களில் பின்னால் இருந்து ஆதரவளித்தல் மற்றும் பேரணிகளில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. காந்தா சமிதி (பெண்கள் குழு) மூலம் செயற்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு முயற்சிகள் போன்ற திட்டங்கள் அதிக எண்ணிக்கையிலான கிராமப்புறப் பெண்களை ஈர்த்தாலும் இந்தக் குழுக்களில் உறுப்பினராக பங்கேற்பது பிரதான அரசியல் பங்குபற்றலுக்கான இடம் அல்லது தலைமைத்துவத்திற்கான வாய்ப்புகளாக மாறுவதில்லை. இதன் விளைவாக கட்சி வியூகம் அல்லது தேர்தல் அறிக்கைகளில் செல்வாக்கு செலுத்தும் நிலையில் வைக்கப்படுவதற்குப் பதிலாக பெண்கள் பெரும்பாலும் ஆண் தலைவர்களுக்கு ஆதரவளிக்கும் அல்லது அடிமட்ட மக்களைத் திரட்டும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் (Kodikara 2008; Manuratne et al. 2024; Pinto-Jayawardena and Kodikara 2003).

முறைசார்ந்த நடைமுறைகளை விட ஆதரவு மற்றும் தனிப்பட்ட தொடர்புகளால் அதிகம் வடிவமைக்கப்படும் வேட்பாளர் தேர்வை 'secret garden of politics', (அரசியல் கட்சிகளுக்குள் நடைபெறும் வெளிப்படையற்ற பெரும்பாலும் மறைக்கப்பட்ட வேட்பாளர் தெரிவு மற்றும் ஆட்சேர்ப்பு செயன்முறையை குறிக்கின்றது) என Gallagher (1988) வர்ணித்ததானது இச்சொல் முதன்முதலில் உருவாக்கப்பட்ட காலத்தில் இருந்ததைப் போலவே இலங்கையின் இன்றைய சூழலுக்கும் பொருத்தமானதாக உள்ளது. கட்சித் தலைவர்கள் பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்கள் நீண்டகாலமாக நம்பிக்கைக்குரியவர்கள் அல்லது மறைந்த அரசியல்வாதிகளின் உறவினர்களுக்கு ஆதரவளிக்கின்றனர்/முன்னுரிமையளிக்கின்றனர். இது அரசியலில் பெண்கள் நுழையும் போது "விதவைகள், மனைவிகள் மற்றும் மகள்கள்" என்ற அடையாளத்தை பரவலாக உருவாக்குகிறது (Manuratne et al. 2024; Jayawardena 1986; Kodikara 2009). இந்த நடைமுறை சில பெண்களுக்கு அரசியலில் நுழைவதற்கு வாய்ப்பளித்தாலும் இது பெரும்பாலும் தகுதிவாய்ந்த பிற பெண்களை புறக்கணிக்கின்றது. இது பெண்களை சுதந்திரமான செயற்பாட்டாளர்களாகக் கருதாமல் அரசியல் பதிலிகளாகக் கருதும் எண்ணத்தை வலுப்படுத்துகிறது (Wickramasinghe and Kodikara 2012).

இவ்வாறு கட்சிகள் பாலின அடிப்படையிலான அமைப்புகளாகச் செயற்படுகின்றன (Bjarnegård 2013; Kittilson 2013), இங்கு "சிறந்த வேட்பாளர்" எனக் கருதப்படுவது பொதுவாக ஆணாகவே இருக்கும் (Chapman 1993; Lovenduski and Norris 1989), மேலும் பெண்கள் தங்கள் குடும்ப அரசியல் செல்வாக்கையோ அல்லது பெயர் அங்கீகாரத்தையோ கொண்டு வராவிட்டால் அவர்கள் பெரும்பாலும் இரண்டாம்பட்ச தேர்வுகளாகவே கருதப்படுகிறார்கள். உதாரணமாக துன்புறுத்தல் புகார்களைக் கையாள்வதற்கோ அல்லது சமமான வளப் பங்கீட்டை உறுதி செய்வதற்கோ கட்சிகளுக்குள் பொறுப்புக்கூறல் வழிமுறைகள் இல்லாமையானது இந்த நிலையை மேலும் வலுப்படுத்துகிறது. இதன் விளைவாக பெண்களின் அடையாளப்பூர்வமான இருப்பு நிலைத்திருக்க அவர்களின் உண்மையான அரசியல் செல்வாக்கு தடைக்குட்படுகின்றது (Khan and Naqvi 2020). இதே போன்ற போக்குகள் தெற்காசியா முழுவதும் காணப்படுகின்றன. இந்தியாவின் பஞ்சாயத்து ஒதுக்கீட்டு முறையில் பெண்கள் பெரும்பாலும் ஆண் உறவினர்களுக்காகப் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பாகிஸ்தானிலும் ஒதுக்கப்பட்ட இருக்கைகள் இருந்த போதிலும் கட்சிகளின் பாகுபாடு காட்டும் வலைப்பின்னல்களைக் கலைக்கவில்லை. மேலும் நேபாளத்தில் உள்ளூராட்சி நிர்வாக சீர்திருத்தங்கள் பெண்களின் பங்குபற்றலை அதிகரித்தபோதிலும் ஆணாதிக்கப் படிநிலைகளை மாற்றமின்றி விட்டுவிட்டன. (Patel et al. 2021; Naseer et al. 2023; Giri 2024; Norris and Lovenduski 1995).

எனவே நிறுவன மாற்றத்திற்கு முறைசார் விதிகள் மற்றும் முறைசாரா நெறிமுறைகள் ஆகிய இரண்டையும் ஒன்றாகக் கையாள்வது அவசியமாகின்றது. தேர்தல் முறைமைகள் மற்றும் பாலின ஒதுக்கீடுகள் போன்ற முறைசார் வழிமுறைகள் கட்சிகளின் செயற்பாடுகளைப்

பாலின அடிப்படையில் மாற்றியமைக்கக் கூடியவை (Bjarnegård and Kenny 2016). தேர்தல் முறைமைகள் கட்சிகள் யாரை “தகுதியான” வேட்பாளராகக் கருதுகின்றன என்பதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இது பெரும்பாலும் ஆண்களுக்கு முன்னுரிமையளிக்கிறது. அதே நேரத்தில் ஒதுக்கீட்டு முறைகள் பொருத்தமான பெண்களை தெளிவாக அடையாளம் கண்டு முன்னிறுத்த கட்சிகளைக் கட்டாயப்படுத்துகின்றன. எனினும் பெண்ணிய நிறுவனவாத அணுகுமுறையினை பின்பற்றும் அறிஞர்கள் (பெண்ணிய நிறுவனாவாதிகள்) புதிய முறைசார் விதிகள் பெரும்பாலும் பழைய நிறுவன அமைப்புக்களின் மீது திணிக்கப்படுகின்றன அல்லது தற்போதுள்ள அதிகாரத்தில் இருப்பவர்களின் நலன்களுக்குச் சேவை செய்யும் வகையில் மாற்றப்படுகின்றன என்று எச்சரிக்கை விடுக்கின்றனர் (Holmes 2020). ஆணாதிக்க ஆதரவு வலையமைப்புகள் அல்லது பாலினப் பாகுபாடுகள் போன்ற அரசியல் நிறுவனங்களுக்கு அடித்தளமாக இருக்கும் முறைசாராக் கலாச்சாரங்களை சீர் செய்யாமல் விட்டால் சீர்திருத்தங்கள் வெறும் அடையாளப்பூர்வமான முறையிலே முடங்கிப் போகும் அபாயம் உண்டு. முறைசார் கட்டமைப்புகளில் ஏற்படும் மாற்றங்களானது அரசியல் வாழ்க்கையை நிர்வகிக்கும் முறைசாரா நிறுவன தர்க்கங்களில்/தத்துவங்களில் ஏற்படும் மாற்றங்களுடன் இணைந்திருக்கும் போது மட்டுமே நிலையான மாற்றம் நிகழ்கிறது. இது அடையாளப்பூர்வமான உள்ளடக்கத்தை உண்மையான செல்வாக்காக மாற்ற உதவுகின்றது.

## தெற்காசிய கண்ணோட்டத்தில் ஒதுக்கீட்டு முறைகள்

முறைசாரா பாலின நெறிமுறைகளால் முறைசார் செயல்முறைகள் சீர்குலைக்கப்படலாம் என்ற பெண்ணியல்வாத நிறுவனமயமாக்கப் பார்வையினை அடிப்படையாகக் கொண்டு கடந்த சில தசாப்தங்களாக அரசியலில் பெண்களின் குறைவான பிரதிநிதித்துவத்தைக் கையாள்வதற்கான மிகவும் பரவலாக பயன்படுத்தப்படும் உத்திகளில் ஒன்றாக பாலின ஒதுக்கீடுகள் உருவெடுத்துள்ளன. இவை பெரும்பாலும் ஆழமாக வேரூன்றிய பாலின அசமத்துவங்களை எதிர்கொள்வதற்கான தற்காலிக நடவடிக்கைகளாகவே கருதப்படுகின்றன (Athukorala et al 2021). இந்த ஒதுக்கீடுகள் பொதுவாக மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன: சட்ட ரீதியான வேட்பாளர் ஒதுக்கீடுகள், சட்ட ரீதியான ஒதுக்கப்பட்ட இடங்கள் மற்றும் தன்னார்வ அரசியல் கட்சி ஒதுக்கீடுகள் (Dahlerup et al. 2014). ஒதுக்கப்பட்ட இடங்கள் சட்டமன்றங்களில் ஒரு குறிப்பிட்ட அளவு பெண்களுக்கு ஒதுக்கப்படுவதை உறுதிசெய்து அதன் மூலம் அவர்களின் தேர்தலை உறுதி செய்கின்றன. இதற்கு மாறாக வேட்பாளர் ஒதுக்கீடுகள் அரசியல் கட்சிகள் ஒரு குறிப்பிட்ட சதவீதம் அல்லது எண்ணிக்கையிலான பெண் வேட்பாளர்களைப் பரிந்துரைக்க வேண்டும் எனக் கோருகின்றன. இருப்பினும் இது அவர்களின் தேர்தல் வெற்றியை உறுதி செய்வதில்லை. தன்னார்வக் கட்சி ஒதுக்கீடுகள் மேற்கண்ட இரு முறைமைகளிலிருந்து வேறுபடுகின்றன. ஏனெனில் இவை சட்டத்தால் கட்டாயப்படுத்தப்படாதவை. மாறாக அரசியல் கட்சிகள் ஒரு குறிப்பிட்ட வீதத்தில் பெண்களை வேட்பாளர்களாகப் பரிந்துரைக்க உறுதியளிக்கும் உள்ளார்ந்த கட்டமைப்பு விதிகளை

ஏற்றுக்கொள்கின்றன. எனவே இந்த ஒதுக்கீடுகளைச் செயற்படுத்துவது தனிப்பட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்துள்ளது (Dahlerup et al. 2014, Athukorala et al. 2021).

ஒதுக்கீடுகள் பல்வேறு நோக்கங்களுடன் அறிமுகப்படுத்தப்படுகின்றன: ஆண்களுக்கு இணையாகப் பெண்களின் சமமான பங்குபற்றலை உறுதி செய்வது, பெண்கள் குழவின் அடையாள அந்தஸ்தை உயர்த்துதல், அரசியலில் ஒரு "பெண்ணின் கண்ணோட்டத்தை" ஊக்குவித்தல் மற்றும் எதிர்காலத் தலைமைத்துவத்திற்காகத் திறமையான பெண்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்தும் ஒரு "முன்மாதிரி விளைவை" உருவாக்குதல் (Sawer 2000; Childs and Krook 2006; Manuratne et al. 2024). ஆனால் இவ்வாறு ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த இந்த நோக்கங்களை அடைவது எளிதானதல்ல. எண்ணிக்கையில் கிடைக்கும் முன்னேற்றங்கள் உண்மையான மற்றும் பன்முகப் பிரதிநிதித்துவமாக மாறுகின்றனவா அல்லது அவை வெறும் அடையாளப்பூர்வமான ரீதியான அல்லது பெயரளவிலான உட்சேர்க்கையாக மட்டுமே முடிவடைகின்றனவா என்பது குறித்தும் அறிஞர்களிடையே விவாதங்கள் நிலவுகின்றன. (Bird 2003; Sater 2007; Tripp 2006).

Dahlerup மற்றும் Gaber (2017) குறிப்பிடுவதாவது ஒதுக்கீட்டு முறைமைகளின் விளைவுகள் தேர்தல் முறைமை, அரசியல் கலாச்சாரம், மத நெறிமுறைகள், பெண்கள் அமைப்புகளின் வலிமை மற்றும் ஜனநாயக நிறுவனங்களின் தன்மை உள்ளிட்ட பரந்த சூழல் காரணிகள் மீது பெரிதும் சார்ந்துள்ளன. ஒதுக்கீடுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் எதிர்கொள்ளும் மூன்று தொடர்ச்சியான சவால்களை ஆய்வுகள் தொடர்ந்து அடையாளம் கண்டுள்ளன. முதலாவதாக பெயரளவாக்கம். அதாவது கட்சித் தலைவர்கள் பெண்களை அவர்களின் அரசியல் திறமைக்காக அல்லாமல் அவர்கள் கீழ்ப்படிவானவர்கள் மற்றும் எளிதில் கட்டுப்படுத்தக்கூடியவர்கள் என்று கருதி தேர்ந்தெடுக்கும்போது அங்கு அடையாளப் பிரதிநிதித்துவம் எழுகிறது. இதனால் இது ஆண் தலைமைத்துவத்திற்கு அதிக அதரவை பெற்றுத் தருகிறது. இரண்டாவதாக ஓரங்கட்டப்படல். அதாவது பெண்கள் முறைசார் பங்குபற்றலுக்கு அனுமதிக்கப்பட்டு ஆனால் அர்த்தமுள்ள தலைமைப் பதவிகளிலிருந்து விலக்கப்படுவதைக் குறிக்கின்றது. மூன்றாவதாக, Zetterberg (2009) விவரித்தபடி மறைக்கப்படுதல் (தென்படாமை) ஆகும். அதாவது பெண்கள் பெயரளவிற்கு பதவிகளை வகித்தாலும் சட்டமன்ற செயன்முறைகளிலிருந்து திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டு அதன்மூலம் மிகக் குறைந்த அல்லது எந்தவொரு உண்மையான அதிகாரத்தையும் பயன்படுத்த முடியாத நிலையைக் குறிக்கிறது.

மேலும் ஒதுக்கீடுகள் பல்வேறு சமூகப் பின்னணிகளைச் சேர்ந்த பெண்களை உள்ளடக்கி பிரதிநிதித்துவத்தை விரிவுபடுத்துவதற்குப் பதிலாக வலுவான கட்சி நம்பிக்கை, உயர் கல்வித் தகுதி அல்லது அதிகாரம் கொண்ட ஆண்களுடன் குடும்பத் தொடர்புகள் கொண்ட உயர்சாதி பெண்களைத் தேர்ந்தெடுக்கும் நிலையை உருவாக்கக் கூடும் என்று சில

விமர்சகர்கள் வாதிடுகின்றனர் (Bird 2003; Sater 2007; Tripp 2006). இருப்பினும் இதற்கு மாறாக சிலர் தேர்தல் அரசியலில் நுழைவதற்குத் தேவையான அரசியல் மூலதனமோ அல்லது தொடர்புகளோ இல்லாத ஒதுக்கப்பட்ட/ஓரங்கட்டப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடுகள் புதிய வாய்ப்புகளைத் திறக்கக்கூடும் என்று வாதிடுகின்றனர் (Schwartz 2004; Mehta 2002).

இறுதியாக Franceschet Krook மற்றும் Piscopo (2009) வாதிடுவது போல, ஒதுக்கீட்டின் செயற்திறன் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையைக் கொண்டு மட்டுமல்லாமல் இச் சீர்திருத்தங்கள் ஆழமாக வேரூன்றிய அதிகார அடுக்குகளையும் ஆதிக்க முறைகளையும் சீர்குலைக்கின்றனவா என்பதையும் கருத்திற் கொண்டும் மதிப்பிடப்படல் வேண்டும். பெண்ணிய நிறுவனமயமாக்கல் கண்ணோட்டத்தில் ஒதுக்கீடுகள் இருமுனைக் கத்தியாக அல்லது கூறாக இருக்கக்கூடும்: பாலின அடிப்படையிலான விலக்கலை எதிர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும் அடிப்படையில் ஆணாதிக்கம் காணப்படும் நிறுவனக் கட்டமைப்புகளில் அவை புகுத்தப்படும்போது சிலவேளை ஏற்கனவே உள்ள அதிகார அடுக்குகளை வலுப்படுத்தக்கூடும் (Benjamin 2025).

தெற்காசியா முழுவதும் பாலின ஒதுக்கீடுகள் பல்வேறு வழிகளில் செயற்படுத்தப்பட்டுள்ளன. இது நிறுவன வடிவமைப்பு எவ்வாறு பிரதிநிதித்துவத்தையும் சட்டப்பூர்வ தன்மையையும் வடிவமைக்கிறது என்பதை விளக்குகிறது. இந்தியாவில் (பஞ்சாயத்து ராஜ்) உள்ளூராட்சி அரசியல் நிறுவனங்களில் பெண்களுக்கு வழங்கப்படும் 33 வீத இட ஒதுக்கீடு பெண்களின் அரசியல் காட்சிப்படுத்தலை அதிகரித்துள்ளதுடன் சமூக மனப்பான்மைகளில் படிப்படியான மாற்றங்களுக்கும் பங்களித்துள்ளது. என்றாலும் கணவர்கள் அல்லது ஆண் உறவினர்கள் உண்மையான முடிவெடுப்பவர்களாகச் செயற்படும் பதிலிப் பிரதிநிதித்துவம் இன்னும் ஒரு முக்கிய சவாலாகவே உள்ளது (Rai 2005; Mangayarkarasu 2011). பாகிஸ்தானில் தேசிய மற்றும் மாகாண சட்டமன்றங்களில் பெண்களுக்கான ஒதுக்கப்பட்ட இடங்கள் 2002 முதல் நடைமுறையில் இருந்து வருகின்றன. ஆனால் இவை நேரடித் தேர்தல்கள் மூலம் அல்லாமல் அரசியல் கட்சிகளின் நியமனங்கள் மூலமே நிரப்பப்படுகின்றன (Rai 2005; Khan and Naqvi 2020). இந்த முறைமை நம்பிக்கை அடிப்படையிலான உட்சேர்க்கையை வலுப்படுத்துவதோடு பெண்களின் சுயாட்சியையும் கட்டுப்படுத்துகிறது. இதனால் ஒதுக்கீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் பெரும்பாலும் "இரண்டாம் நிலை உறுப்பினர்கள்" அல்லது "தானமாக வழங்கப்பட்ட இருக்கை" பெற்றவர்கள் என்று முத்திரை குத்தப்படுகிறார்கள் (Khan and Naqvi 2020; Rai 2005).

இந்த தெற்காசிய நிகழ்வுகள் ஒரு பொதுவான முரண்பாட்டை வெளிப்படுத்துகின்றன: ஒதுக்கீடுகள் பெண்களின் இருப்பை அதிகரிக்கக் கூடியதாக இருந்தாலும் கட்சிக் கட்டுப்பாட்டில் உள்ள தெரிவு செயன்முறைகள், ஆணாதிக்க நெறிமுறைகள், மற்றும் பொதுத் தெரிவுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து ஒதுக்கீட்டின் மூலம்

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வேறுபடுத்தும் நிறுவன வடிவமைப்புகள் ஆகியவற்றால் அவற்றின் மாற்றியமைக்கும் ஆற்றல் அடிக்கடி கட்டுப்படுத்தப்படுகிறது. இந்த பிராந்தியப் போக்கானது இலங்கையின் ஒதுக்கீட்டு முறை நடைமுறையில் எவ்வாறு செயற்பட்டுள்ளது என்பதை புரிந்துகொள்வதற்கு ஒரு முக்கியமான ஒப்பீட்டு அடித்தளத்தை வழங்குகிறது.

பாலின ஒதுக்கீடுகள் குறித்த இலங்கையின் அனுபவமானது இந்த பிராந்திய இயக்கவியலை நெருக்கமாகப் பிரதிபலிக்கின்றது. பல தசாப்தங்களாக நடந்த கோரிக்கைகளுக்குப் பிறகு உள்ளூராட்சி மட்டத்தில்[9] பெண்களுக்கான ஒதுக்கீடு 2016 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அது 2018இல் நடைமுறைக்கு வந்தது. இருப்பினும் இந்த ஒதுக்கீடு தனித்துவமாக உருவானதல்ல. இது 2012 மற்றும் 2017 இற்கு இடையில் செயற்படுத்தப்பட்ட தொடர்ச்சியான தேர்தல் சீர்திருத்தங்களின் விளைவாகும் (Vijeyarasa 2020).

முதல் சீர்திருத்தம் 2012ஆம் ஆண்டின் உள்ளூராட்சிகள் (தேர்தல்கள்) திருத்தச் சட்டம் எண் 22 ஆகும். இது உள்ளூராட்சி அமைப்புகளுக்காக "எளிய பெரும்பான்மை முறை" (FPTP)[10] மற்றும் "விகிதாசாரப் பிரதிநிதித்துவம்" (PR)[11] ஆகிய முறைகளை இணைத்து ஒரு கலப்புத் தேர்தல் முறையை நிறுவியது. இந்தச் சீர்திருத்தத்தால் செய்யப்பட்ட முக்கிய மாற்றம் 1990 முதல் நடைமுறையில் இருந்த 40 வீத கட்டாய இளைஞர் ஒதுக்கீட்டை ஒழித்து அதற்குப் பதிலாக "ஒவ்வொரு வேட்புமனுப் பத்திரத்திலும் பெயர்கள் இடம்பெறும் மொத்த வேட்பாளர்கள் மற்றும் கூடுதல் நபர்களில் 25 சதவீதம் பெண்கள் மற்றும் இளைஞர்களாக இருக்கலாம்" என்று குறிப்பிடும் ஒரு விருப்ப அடிப்படையிலான ஏற்பாட்டைக் கொண்டுவந்ததாகும். எனினும் இந்த ஏற்பாட்டின் ஒருங்கிணைந்த மற்றும் தன்னார்வத் தன்மை இந்த நடவடிக்கையைப் பெரும்பாலும் பயனற்றதாக ஆக்கியது (Vijeyarasa 2020).

9 இலங்கையின் உள்ளூராட்சி அமைப்பானது, மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளுக்கு அடுத்தபடியாக, மூன்றாவது மற்றும் கீழ்நிலை அரசாங்க அமைப்பாகும். உள்ளூராட்சி அதிகார சபைகள் என அழைக்கப்படும் உள்ளூராட்சி அமைப்புகளில், பெரிய நகரங்களுக்கான மாநகர சபைகளும், நடுத்தர நகரங்களுக்கான நகர சபைகளும், கிராமப்புறங்களுக்கான பிரதேச சபைகளும் உள்ளடங்கும். மொத்தம் 341 உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளன. அவற்றில் ஒவ்வொன்றும் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை ஒற்றை உறுப்பினர் தொகுதிகளாகவோ அல்லது பல உறுப்பினர் தொகுதிகளாகவோ இருக்கலாம். ஒற்றை உறுப்பினர் தொகுதியில் தொடர்புபட்ட உள்ளூராட்சி அமைப்புக்கு ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுகின்றார். பல உறுப்பினர் தொகுதிகள் இரண்டு அல்லது மூன்று பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். ஒரு தொகுதியில் சிங்கள, தமிழ் அல்லது முஸ்லிம் சமூகங்கள் சிறுபான்மையினராக இருந்து, தனிப் பிரதிநிதித்துவத்திற்குத் தகுதியளிக்கும் அளவுக்குப் போதுமான மக்கள்தொகையைக் கொண்டிருக்கும் இடங்களில் இவை பொதுவாக நிறுவப்படுகின்றன.

10 இந்த முறையில், ஒரு தொகுதியில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாகவோ அல்லது சுயேச்சை வேட்பாளர்களாகவோ போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் வாக்காளர்களுக்கு வழங்கப்படும், மேலும் அவர்கள் ஒரு வேட்பாளருக்கு வாக்களிப்பார்கள். மொத்த வாக்குகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமாகப் பெறாவிட்டாலும், அதிக வாக்குகளைப் பெறும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவார். உதாரணமாக, மற்ற எல்லா வேட்பாளர்களும் குறைவான வாக்குகளைப் பெற்றால், ஒரு வேட்பாளர் 40 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற முடியும்.

11 இந்த முறையின் கீழ், வாக்காளர்கள் ஒரு அரசியல் கட்சிக்கு வாக்களிக்கின்றனர், மேலும் பல உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் மாவட்டத்தில் கட்சிகள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படும் FPTP முறையைப் போலல்லாமல், விகிதாசாரப் பிரதிநிதித்துவ (PR) முறையானது, தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பின் வாக்காளர்களின் விருப்பங்களை மிகவும் நெருக்கமாகப் பிரதிபலிப்பதை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது சிறிய கட்சிகள் மற்றும் சிறுபான்மைக் குழுக்கள் தங்களின் தேர்தல் ஆதரவின் அளவிற்கேற்ப பிரதிநிதித்துவத்தைப் பெற அனுமதிக்கின்றது.

2016 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி தேர்தல் (திருத்தச்) சட்ட எண் 1 ஆனது மொத்த இருக்கைகளின் எண்ணிக்கையை மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு கணிசமாக அதிகரித்ததுடன் அனைத்து கூடுதலான இருக்கைகளையும் பிரத்தியேகமாகப் பெண்களுக்கு ஒரு தனிப் பட்டியலின் கீழ் ஒதுக்கியது. பொதுவாக “சுயேட்சைக் குழுப் பட்டியல்” எனக் குறிப்பிடப்படும் இந்தப் பட்டியலானது பெண்களுக்கு அரசியலிற்குள் நுழைவதற்கான புதிய வழிகளை உருவாக்கும் நோக்கம் கொண்டதாக இருந்தது. இதனை ஒரு சட்டப்பூர்வமான இட ஒதுக்கீட்டு ஒதுக்கீடாகவும் வகைப்படுத்தப்படலாம். அதனைத் தொடர்ந்து வந்த 2017 ஆம் ஆண்டின் உள்ளூராட்சித் தேர்தல்கள் (திருத்தச்) சட்ட எண் 16, இந்த ஒதுக்கீட்டை மேலும் தெளிவுபடுத்தியது. அதன்படி ஒவ்வொரு உள்ளூராட்சியிலும் “குறைந்தது 25 சதவீத” உறுப்பினர்கள் பெண்களாக இருக்க வேண்டும் என்றும், “எளிய பெரும்பான்மை முறை” FPTP வேட்புமனுக்களில் குறைந்தபட்சம் 10 சதவீதப் பெண்களும், “விகிதாசாரப் பிரதிநிதித்துவம்” PR பட்டியல்களில் குறைந்தது 50 சதவீதப் பெண்களும் இடம்பெற வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தியது. இதன் மூலம் இது ஒரு சட்டப்பூர்வமான வேட்பாளர் ஒதுக்கீட்டைப் பிரதிபலித்தது (Vijeyarasa 2020; Athukorala et al. 2021).[12]

இந்த முறைமையின் கீழ் 60 சதவீத இடங்கள் “எளிய பெரும்பான்மை” முறையிலும், மீதமுள்ள 40 சதவீத இடங்கள் “விகிதாசாரப் பிரதிநிதித்துவ” முறையிலும் நிரப்பப்படுகின்றன. இதன் பொருள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மட்டுமே குறிப்பிட்ட தொகுதிகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அதேசமயம் விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்டவர்களுக்கு தொகுதி அடிப்படையிலான தொகுதி இல்லை (Vijeyarasa 2020; Athukorala et al 2021).

இதன்படி ஒவ்வொரு அரசியல் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் இரண்டு வேட்புமனு பட்டியல்களை சமர்ப்பிக்க வேண்டும். ஒன்று வட்டார அல்லது தொகுதி மட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கானது. இதில் குறைந்தபட்சம் 10 சதவீதம் பெண்கள் இருக்க வேண்டும் மற்றொன்று விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியலுக்கானது. இதில் 50 சதவீதத்திற்கும் குறையாத பெண்கள் இடம்பெற வேண்டும். ஒரு கட்சி எளிய பெரும்பான்மை முறை மூலம் பெற்ற இடங்களை விட அதிக இடங்களுக்குத் தகுதி பெறும்போது அது விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியல் மூலம் மேலதிக வேட்பாளர்களை நியமிக்க முடியும் (Vijeyarasa 2020; Athukorala et al. 2021).

---

12 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின் போது, ஒவ்வொரு அரசியல் கட்சியும் மற்றும் சுயேச்சைக் குழுவும் ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிட வேட்பாளர்களைப் பரிந்துரைத்தன. வாக்காளர்கள் ஒரு அரசியல் கட்சிக்கோ அல்லது சுயேச்சைக் குழுவிற்கோ ஒரே ஒரு வாக்கை அளித்தபோதிலும், அந்த வாக்கு இரண்டு பணிகளைக் கொண்டிருந்தது. முதலாவதாக, அது ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றிபெறும் வேட்பாளரைத் தீர்மானித்தது. FPTP என்ற முதலில் வருபவருக்கே முன்னுரிமை முறையின் கீழ், அந்த தொகுதியில் அதிக வாக்குகளைப் பெற்ற கட்சி அல்லது குழுவின் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாவதாக, ஒவ்வொரு கட்சியின் ஒட்டுமொத்த இடங்களின் பங்கைத் தீர்மானிக்க, உள்ளூராட்சி அதிகாரப் பகுதி முழுவதும் வாக்குகள் ஒருங்கிணைக்கப்பட்டன. கூடுதல் இடங்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ (PR) முறையின் மூலம் ஒதுக்கப்பட்டு, கட்சியின் கூடுதல் வேட்பாளர் பட்டியலிலிருந்து நிரப்பப்பட்டன.

இந்த சீர்திருத்தங்களின் விளைவாக ஒரு இரட்டை வழி அமைப்பு உருவானது. இதில் பெண்கள் எளிய பெரும்பான்மை முறையின் கீழ் தனித்தனியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகவோ அல்லது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் பெண்கள் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாகவோ சபைகளில் நுழைய முடியும். நடைமுறையில் இந்த வேறுபாடு முக்கியத்துவம் பெற்றது. ஏனெனில் விகிதாசார பிரதிநிதித்துவப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட பல பெண்கள் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் கட்சித் தலைமையால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதனால் சபைகளின் உள்ளக அதிகார உறவுகளில் அவர்களின் செல்வாக்கும் தன்னாட்சியையும் கட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்தது (Athukorala et al 2021; Kanold 2020).

இருப்பினும் இந்த சீர்திருத்தத்திற்கு இரண்டு விதிவிலக்குகள் இருந்தன. முதலாவதாக ஒரு அரசியல் கட்சி அல்லது ஒரு சுயேட்சைக் குழுவிடம் உள்ளூராட்சி அமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தால் ஒதுக்கீடு பொருந்தாது. இரண்டாவதாக ஒரு கட்சி அல்லது குழு உள்ளூராட்சி அமைப்பில் மொத்த வாக்குகளில் 20 சதவீதத்திற்கும் குறைவாகப் பெற்று மூன்று இருக்கைகளுக்கும் குறைவாகப் பெற்றால் அந்த உள்ளூராட்சி அமைப்பிற்கு ஒதுக்கீடு பொருந்தாது (Athukorala et al 2021).

பெண்களின் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் நோக்கம் இருந்தபோதிலும் சட்டக் கட்டமைப்பு “மிகவும் சிக்கலான மற்றும் சரியாகப் புரிந்து கொள்ளப்படாத” ஒரு ஒதுக்கீட்டு முறையை உருவாக்கியது. 2018 தேர்தல்கள் முடிந்து பல மாதங்கள் கடந்த பின்னரும் பல்வேறு பங்குதாரர்கள் அதன் விதிகள் குறித்து தொடர்ந்தும் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர், மேலும் அதிகாரப்பூர்வ பதிவுகளிலும் முரண்பாடுகள் நீடித்தன. இரண்டு தனித்துவப் பட்டியல்களைச் சமர்ப்பிக்க வேண்டிய தேவை தொடர்ச்சியான குழப்பத்திற்கு வழிவகுத்தது (உள்ளூராட்சி அமைப்பு திருத்தச் சட்டம் 2017 ஆம் ஆண்டின் சட்ட எண் 16) (Vijeyarasa 2020). இருப்பினும் 2018 தேர்தல்களின் முடிவாக மொத்த சபை இருக்கைகளில் 23 வீதம் இடங்களைப் பெண்கள் பெற்றனர். மேலும் 95 வீதம் உள்ளூராட்சி அமைப்புகள் 25 வீதம் ஒதுக்கீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்தன (Athukorala et al. 2021).

ஒதுக்கீட்டின் விளைவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பு ஏற்பட்ட போதிலும் அது ஒரே நேரத்தில் “சாதாரணமான” மற்றும் “ஒதுக்கீட்டு” பிரதிநிதிகள் என்ற ஒரு குறியீட்டுப் பிரிவினையையும் உருவாக்கியது. பெரும்பாலும் அனைத்துப் பெண்களும் போட்டி நிறைந்த தொகுதி அளவிலான போட்டிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்படாமல் புதிதாக உருவாக்கப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவப் பட்டியல் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்பட்டனர். வெறும் 6.2 வீதமானவர்கள் மட்டுமே எளிய பெரும்பான்மை முறையின் கீழ் இருக்கைகளைப் பெற்றனர் (Kodikara 2016, 15; Vijeyarasa 2020). இந்தப் பிரிவினையானது ஒதுக்கீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் குறைந்த

நம்பகத்தன்மை உடையவர்கள் குறைந்த அதிகாரமுடையவர்கள், மற்றும் “உண்மையான அரசியல்வாதிகள்” அல்லர் என்ற கருத்துக்களை வலுப்படுத்தியது. முறைசாரா கட்சி மற்றும் மன்ற நெறிமுறைகள் இந்த மதிப்பிழப்பை மேலும் ஆழப்படுத்தின (Kodikara 2016; Vijeyarasa 2020). அறிஞர்கள் குறிப்பிடுவது போல விகிதாசார பிரதிநிதித்துவப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் மீதான குறைந்த நம்பகத்தன்மையே ஒதுக்கீட்டு முறையின் மாற்றத்திறன் வெளிப்படுவதற்கான முக்கியமான தடைகளில் ஒன்றாகும் (Vijeyarasa 2020). மேலும் ஜனநாயகக் கண்ணோட்டத்தில் இந்த இட ஒதுக்கீட்டு முறையின் வடிவமைப்பு சில வரம்புகளைக் கொண்டுள்ளது. ஏனெனில் தொகுதி நியமனங்களில் 10வீதம் மட்டுமே பெண்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் பெரும்பாலான இடங்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியல் மூலமாகவே ஒதுக்கப்படுகின்றன. இதன் பொருள் விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பெண்கள் தங்களுக்கென ஒரு தனித்துவமான தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை என்பதாகும். இது அவர்கள் அர்த்தமுள்ள பங்களிப்புகளைச் செய்வதற்கும் தங்களின் சொந்த அரசியல் நிலைப்பாட்டின் அடிப்படையில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் மேலும் கடினமாக்கக்கூடும் (Vijeyarasa 2020).

இதனை மேலும் சிக்கலாக்கும் விதமாக இட ஒதுக்கீட்டின் பெரும்பகுதி விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியல் மூலமே பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்யும் திருத்தப்பட்ட சட்டங்கள் இந்த இடங்களுக்கான வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் கட்சி அமைப்பாளர்களுக்கு “வரையரையற்ற தன்னிச்சையான அதிகாரங்களை” வழங்குகின்றன. இது கட்சி உறுப்பினர்களின் உறவினர்களை வேட்பாளர்களாக நியமிக்க வழிவகுக்கிறது. இது பொதுவாக “விதவைகள், மகள்கள் மற்றும் மனைவிகள்” என்று விபரிக்கப்படுகிறது. மேலும் எளிதில் கட்டுப்படுத்தக்கூடியவர்கள் என்று கருதப்பட்ட பெண்களுக்கு முன்னுரிமையளிக்கப்படுவதும் இடம்பெறுகின்றன (Vijeyarasa 2020; Manuratne et al. 2024; Kodikara and Samuel 2018). இத்தகைய நடைமுறைகள் அனுபவமுள்ள பெண்களைப் புறந்தள்ளி ஆதரவு வலையமைப்புகளைப் நிலைநிறுத்தியதோடு ஆழமாக வேரூன்றிய அதிகாரக் கட்டமைப்புகளை எதிர்க்கும் இட ஒதுக்கீட்டின் திறனையும் கட்டுப்படுத்தின (Vijeyarasa 2020). இந்த இயங்குமுறை பெண்களை பிரதான செயற்பாட்டாளர்களாகக் கருதாமல், அரசியல் வெளியாட்களாக நிலைநிறுத்தும் ஒரு பாலின அடிப்படையிலான நிறுவன தர்க்கத்தைப் பிரதிபலிப்பதோடு வலுப்படுத்துகிறது (Vijeyarasa 2020).

பெண்கள் அமைப்புகளின் வலுவான ஆதரவு கோரிக்கை இருந்தபோதிலும் இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் பெரும்பாலும் தயக்கத்தையோ அல்லது வெளிப்படையான எதிர்ப்பையோ வெளிப்படுத்தியுள்ளன. தேர்தல் அறிக்கைகள் ஒதுக்கீடுகளுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்தாலும், பெரும்பாலான மூத்த தலைவர்கள் அவற்றை “நடைமுறைக்கு சாத்தியமற்றவை” என்று நிராகரிக்கும் போக்கு

காணப்படுகின்றது. அதே நேரத்தில் ஒதுக்கீட்டு இடங்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் "பங்களிப்பின்றி பயனடைபவர்கள்" (பின் உறுப்பினர்கள்) என்று முத்திரை குத்தப்படும் களங்கத்தை எதிர்கொள்கின்றனர். இது அவர்களின் சட்டப்பூர்வத் தன்மையைக் குறைத்து உட்கட்டமைப்புத் திட்டங்கள் போன்ற முக்கியப் பணிகளைச் செய்யும் அவர்களின் திறனைக் கட்டுப்படுத்துகிறது (Manuratne et al. 2024).

கட்சிகள் பெண்களை வெற்றி பெற வாய்ப்பில்லாத தொகுதிகளுக்கு வேட்பாளராக நியமித்தல், தேர்தல் பிரச்சார நிதியிலிருந்து அவர்களை புறக்கணித்தல் மற்றும் அவர்களுக்கு மென்மையான (குறைந்த செல்வாக்குடைய) பொறுப்புகளை வழங்குவது போன்ற ஒதுக்கீடுகளின் மாற்றத்திற்கான ஆற்றலைக் குறைக்கும் வழிகளில் அவற்றை வழக்கமாகப் பின்பற்றுகின்றன (Manuratne et al. 2024; Naseer et al. 2023; UN Women 2021; Herath 2021). 2018 தேர்தல்களின் போது தங்கள் கட்சிகள் தோற்றுவிடும் என்று கட்சி அமைப்பாளர்கள் நம்பிய தொகுதிகளில் பல பெண்கள் நியமிக்கப்பட்டனர். இந்த வேட்பாளர்கள் (தேர்தல் வெற்றி நோக்கமின்றி குறியீட்டு வேட்பாளராகக் கருதப்பட்ட பெண்கள்) "Bili Girls"[13] என்று இழிவாகக் குறிப்பிடப்பட்டனர். இந்தச் சொல் குறிப்பாக பல விடயங்களை வெளிப்படுத்துகிறது, ஏனெனில் இந்த பெண்கள் எளிதில் கைவிடக்கூடியவர்களாகக் கருதப்பட்டனர் என்றும் தேர்தல் போட்டியில் "பலியிடப்படுவதற்கு" முன்பு ஒதுக்கீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே சேர்க்கப்பட்டனர் என்றும் இது சுட்டிக்காட்டுகிறது (Manuratne et al. 2024). இது பெயரளவு பிரதிநிதித்துவத்தின் வடிவத்தைப் பிரதிபலிக்கிறது, இதில் நிறுவனங்கள் சட்ட ரீதியான முறைசார் தேவைகளைப் பூர்த்தி செய்தாலும் அடிப்படையான ஆணாதிக்க அதிகாரக் கட்டமைப்புகளை அப்படியே விட்டுவிடுகின்றன (Kanter 1977).

இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் ஒப்பிடும் போது இலங்கையின் ஒதுக்கீட்டு முறை தனித்துவமானது. ஏனெனில் அது ஏற்கனவே உள்ள இடங்களை மறுஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக பெண்களுக்கு புதிய இடங்களை உருவாக்கியது. இந்த கட்டமைப்புத் தெரிவு ஆண்கள் மற்றும் பெண்கள் பற்றிய கருத்துக்களை ஆழப்படுத்தியது. மேலும் பிரதான அரசியல் அதிகாரத்தில் பெண்களின் ஒருங்கிணைப்பைத் தடுத்தது (Kodikara 2016). மேலும் கொடிகாரவின் (2023) கூற்றுப்படி, கணிசமான மற்றும் உருமாற்றக்கூடிய மாற்றத்தை செயல்படுத்தும் திறன் கொண்ட ஒரு "முக்கிய அளவு" (மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய போதுமான பிரதிநிதித்துவ அளவு) உருவாக்குவதற்காக ஒதுக்கீடுகள் பொதுவாக குறைந்தபட்சம் 30 சதவீத இடங்களை ஒதுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கைச் சூழலில் தற்போது ஒதுக்கீடு 25 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வரம்பு இன்னும் முழுமையாக எட்டப்படவில்லை. இதன் விளைவாக இந்த ஒதுக்கீட்டு முறை எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியும் என்பது குறித்த கேள்விகளை எழுப்புகிறது. இந்த இலங்கை பற்றிய அனுபவமானது கட்சி

13 தியாகப் பெண்கள் என தளர்வான அர்த்தத்தில் குறிப்பிடப்படும் ஒரு சொல்

நடைமுறைகள் அல்லது முறைசாரா நெறிமுறைகளில் அதற்கேற்ற மாற்றங்கள் இல்லாமல் ஒரு எண்ணிக்கை ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்துவது வேட்பாளர் தெரிவின் பாலின அடிப்படையிலான தர்க்கத்தை அர்த்தமுள்ள வகையில் மாற்ற முடியுமா என்பது குறித்த பரந்த கேள்விகளையும் எழுப்புகிறது.

அரசியல் கட்சிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்குள் கட்டமைப்பு சார்ந்த மாற்றம் இல்லாத பட்சத்தில் ஒதுக்கீடுகள் தாங்கள் சவால் விடுவதற்காக வடிவமைக்கப்பட்ட நிறுவன ரீதியான சமத்துவமின்மைகளை அகற்றுவதற்குப் பதிலாக வலுப்படுத்தும் அபாயத்தைக் கொண்டுள்ளன. முறைசார் சீர்திருத்தங்களுக்கும் முறைசாரா எதிர்ப்புக்கும் இடையிலான இந்த மாறுபட்ட நிலை 2018இல் உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் அனுபவங்களை ஆய்வு செய்வதற்கான ஒரு முக்கிய கண்ணோட்டத்தை வழங்குகிறது. மேலும் இந்த ஆய்வில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியல் அணுகுமுறையையும் இது வழிநடாத்துகின்றது.

# அத்தியாயம் 4

## முறைமை

எண்ணக்கரு ரீதியான கண்ணோட்டத்தின் அடிப்படையில், உள்ளூராட்சி அரசாங்கங்களிலுள்ள பெண்கள், முறையான நிறுவன சீர்திருத்தங்களுக்கும் முறைசாரா நடைமுறைகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதை இந்த ஆய்வு பரீட்சிக்கின்றது. இந்த பொறிமுறையைப் புரிந்துகொள்வதற்காக, இந்த ஆய்வு ஒரு பண்புசார் அணுகுமுறையைக் கையாள்கின்றது. பத்து மாவட்டங்களைச் சேர்ந்த இருபத்தாறு பெண் உறுப்பினர்களுடனான ஆழமான நேர்காணல்கள், கல்வியாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான பதினான்கு முக்கியத் தகவல் நேர்காணல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இவ் ஆய்வு முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 2018இல் உள்ளூராட்சி அரசாங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள், பாலின அடிப்படையிலான நிறுவனக் கட்டுப்பாடுகளை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் மற்றும் அவற்றுக்கு எவ்வாறு பதிலளிக்கிறார்கள் என்பதை ஆராய்கின்றது.

உள்ளூராட்சி அரசாங்கங்களில் 25 வீதம் பாலின ரீதியான ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களை மையமாகக் கொண்டு, நோக்க அடிப்படையிலான மாதிரி அணுகுமுறையைப் பயன்படுத்தி இவ் ஆய்விற்கான பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அத்துடன், அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளபடி, மாவட்டங்கள் மற்றும் இனத்துவம், அத்துடன் வெவ்வேறு அரசியல் கட்சிகள் முழுவதும் பன்முகப் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்வதற்காக அதிகபட்சமாக வெவ்வேறுபட்ட மூலக்கூறுகள் பின்பற்றப்பட்டன. இந்த மாதிரியானது, தொகுதி அளவிலான தேர்தல் போட்டிகள் மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவப் பட்டியல்கள் ஆகிய இரண்டின் மூலமும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சென்ற பெண்களை உள்ளடக்கியுள்ளது. இது, ஒதுக்கீட்டிற்குப் பிந்தைய சூழலில் பெண்கள் அரசியல் பதவிகளை அடைந்த பல வழிகளைப் பிரதிபலிக்கின்றது. அனைத்து உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களின் நேர்காணல்களும் நேரடியாக இடம்பெற்றது. அதேசமயம் சில முக்கியத் தகவலாளர்கள், குறிப்பாக வெளிநாடுகளில் உள்ளவர்கள், zoom ஊடாக நேர்காணல் செய்யப்பட்டனர். இந்த நேர்காணல்கள் 2023 மற்றும் 2025 இற்கு இடையில் நடத்தப்பட்டன.

*அட்டவணை 3: மாவட்டம் மற்றும் இனத்துவத்தின் அடிப்படையில் நேர்காணல் செய்யப்பட்ட பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் தகவல்கள்*

| மாவட்டம் | சிங்களம் | தமிழ் | முஸ்லிம் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பதுளை | 2 | 1 | 0 | 0 | 3 |
| மட்டக்களப்பு | 0 | 2 | 1 | 0 | 3 |
| கொழும்பு | 1 | 0 | 2 | 1 | 4 |
| காலி | 2 | 0 | 1 | | 3 |
| கண்டி | 1 | 1 | 1 | 0 | 3 |
| கேகாலை | 0 | 0 | 1 | 0 | 1 |
| மன்னார் | 0 | 3 | 0 | 0 | 3 |
| பொலனறுவை | 1 | 0 | 0 | 0 | 1 |
| புத்தளம் | 0 | 2 | 1 | 0 | 3 |
| இரத்தினபுரி | 1 | 1 | 0 | 0 | 2 |
| **மொத்தம்** | 8 | 10 | 7 | 1 | 26 |

பங்கேற்பாளர்கள் தேர்தல் பிரச்சாரங்களின் போது ஏற்பட்ட அனுபவங்கள், தேர்தலுக்குப் பிந்தைய சவால்கள், மற்றும் உண்மையான அரசியல் பங்கேற்பில் இட ஒதுக்கீட்டின் தாக்கம் குறித்த கண்ணோட்டங்கள் ஆகியவற்றை சுதந்திரமாக கலந்துரையாடுவதை ஊக்குவிப்பதற்காக, திறந்த வினாக்கொத்தினைக் கொண்டதொரு பகுதி-கட்டமைக்கப்பட்ட நேர்காணல் வழிகாட்டி பயன்படுத்தப்பட்டது. இந்த எடுத்துரைப்புக்கள் உள்ளூராட்சி அரசாங்கங்களுடன் பெண்கள் கொண்டுள்ள ஈடுபாட்டின் சிக்கலான யதார்த்தங்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு மற்றும் எதிர்ப்பின் பல அடுக்குகள் குறித்த நுணுக்கமான கண்ணோட்டத்தை வழங்கின. நிறுவனத் தடைகள், முறைசாரா நடைமுறைகள் மற்றும் பாலின அடிப்படையிலான அதிகார உறவுகள் தொடர்பான தொடர்ச்சியான வடிவங்களைக் கண்டறிவதற்காக, பெண்ணிய நிறுவனமயமாக்கத்தின் முக்கியக் கருத்துக்களின் வழிகாட்டுதலுடன், நேர்காணல் தரவுகள் கருப்பொருள் ரீதியாக பகுப்பாய்வு செய்யப்பட்டன.

தரவுகளின் முக்கியத்துவம் வாய்ந்த தன்மை காரணமாக, பங்கேற்பாளர்கள் அனைவரும் அநாமதேயப்படுத்தப்பட்டுள்ளனர். பெண் உறுப்பினர்கள் மாவட்ட அடிப்படையிலான குறியீடுகளைப் (உதாரணமாக, கொழும்பு - 019, பதுளை - 021) பயன்படுத்தி குறிப்பிடப்படுகிறார்கள். இவை தொகுதி எண்கள் அல்லது தனிப்பட்ட ரீதியான அடையாளங்காட்டக்கூடியவர்களுடன், தொடர்பில்லாதவை மற்றும் தரவு முகாமைத்துவ நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அதேபோன்று, முக்கியத் தகவலாளர்கள் அகரவரிசைப் பெயர்களைப் (முக்கியத் தகவலாளர் A-N) பயன்படுத்தி

அடையாளம் காணப்படுகின்றார்கள் இதில் பரந்த பணி விவரங்களும் இருப்பிட விளக்கங்களும் மட்டுமே வழங்கப்படுகின்றன. இந்த உத்தியானது, இரகசியத்தன்மையை உறுதிசெய்ய உதவியதுடன், வெவ்வேறு மாவட்டங்கள் மற்றும் கட்சிகளிடையே உள்ள போக்குகளையும் அனுபவங்களையும் பகுப்பாய்வு மூலம் முன்னிலைப்படுத்தவும் வழிவகுத்தது.

இந் நேர்காணல் எடுத்துரைப்புகளை அடிப்படையாகக் கொண்டு, பெண்கள் நடைமுறையில், உள்ளூராட்சி அரசாங்கங்களில் முறைசார்ந்த உள்ளடக்கத்திற்கும் முறைசாரா கட்டுப்பாடுகளுக்கும் இடையிலான முரண்பாடுகளை எவ்வாறு கையாண்டனர் என்பதைப் பின்வரும் பகுப்பாய்வு ஆராய்கின்றது.

# அத்தியாயம் 5

## 2018ஆம் ஆண்டு தேர்தலின் போது பெண்கள் எதிர்கொண்ட சவால்கள்

2018ஆம் ஆண்டு 25% இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டமையானது இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க படிநிலையாக பரவலாகக் கருதப்பட்டது. கோட்பாட்டு ரீதியாக இத்தகைய இட ஒதுக்கீடுகள் பெண்கள் அரசியலில் நுழைவதற்கான தடைகளைத் அகற்றி அவர்களுக்கு மேலும் சமமான வாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன (Bystydzienski 1995). இருப்பினும், இந்த இட ஒதுக்கீடு வழக்கமாக அரசியலிலிருந்து விலக்கப்பட்டிருக்கும் பல பெண்களுக்குக் கதவுகளைத் திறந்தபோதிலும் அரசியலில் நுழைவது அவ்வளவு எளிதானதாக இருக்கவில்லை என்பதை அவர்களின் அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன. முக்கிய தகவலாளர் M குறிப்பிட்டது போல, "இந்த இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு கட்டத்திலும் நாங்கள் போராடியபோதிலும் அது ஒரு எளிதான பயணமாக இருக்கவில்லை. பெண்கள் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க அளவில் போராடிக் கொண்டிருக்கின்றனர்."[14] இந்தக் கூற்றானது இந்த ஆய்வில் மீண்டும் மீண்டும் வெளிப்படும் ஒரு கருப்பொருளை எடுத்துக்காட்டுகின்றது. இட ஒதுக்கீடானது பெண்களின் எண்ணிக்கையளவில் பிரதிநிதித்துவத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருந்தாலும், இலங்கையின் அரசியல் அமைப்பைக் கட்டமைக்கும் ஆழமாக வேரூன்றிய நிறுவன மற்றும் கலாச்சார நெறிமுறைகளை அடிப்படையாக மாற்றுவதில் இதுவரை முழுமையாக வெற்றி பெறவில்லை.

பெண்ணியல நிறுவனமயமாக்கத்தின் கண்ணோட்டத்தில், ஒதுக்கீடு என்பது அரசியல் கட்சிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற முறையான அரசியல் அரங்குகள், மற்றும் குடும்பம் மற்றும் சமூகம் போன்ற முறைசாரா நிறுவன அரங்குகள் உட்பட ஏற்கனவே இருந்த நிறுவன அமைப்புக்களின் மேல் திணிக்கப்பட்ட ஒரு "முறைசார் விதிமுறையைக்" குறிக்கிறது. என்றாலும் இத்தகைய முறைசார் மாற்றங்கள் பெரும்பாலும் முறைசாரா நடைமுறைகள், பாலின அடிப்படையிலான நெறிமுறைகள் மற்றும் ஆணாதிக்க அதிகார இயக்கங்களுடன் மோதி பெண்கள் முழுமையாகவும் சமமாகவும் பங்கேற்கும் திறனைக் கட்டுப்படுத்தின. பல சந்தர்ப்பங்களில், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட பாலின ஒதுக்கீடுகள் போன்ற அதே நிறுவனக் கட்டமைப்புகளே ஒரே நேரத்தில் அவர்களின் ஓரங்கட்டப்படுதலையும் மீண்டும் உருவாக்கின.

உள்ளூராட்சிமன்றங்களின் வகிபாகத்தின் பின்னணியில் கருத்தில் கொள்ளும்போது, இந்த ஓரங்கட்டலின் முக்கியத்துவம் மேலும் தெளிவாகின்றது. இலங்கையில் அரசியல்

14 மேல் மாகாண கொழும்பு மாவட்ட அரசியல் ஆர்வலர் 25 ஜூன் 2025.

உரையாடல்கள் பெரும்பாலும் நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களை மையமாகக் கொண்டிருந்தாலும், பிரஜைகள் தங்கள் அன்றாட வாழ்வில் மிகவும் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் அரசாங்க மட்டமாக உள்ளூராட்சி மன்றங்களே அமைகின்றன. ஒரு உறுப்பினர், "ஒரு குடியிருப்பாளரின் பிறப்பு முதல் இறப்பு வரை எல்லாவற்றிற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் அவசியப்படுகின்றன. ஒருவர் பிறப்பதற்கு முன்பே அவர்களுக்கு உள்ளூராட்சி மன்றத்தின் சேவைகள் தேவைப்படுகின்றன, ஏனெனில் அது கர்ப்பம் மற்றும் மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்புக்கும் அவசியமானவை"[15] என இது பற்றி குறிப்பிட்டார். சுகாதாரம், வீதிகள், நகர்ப்புறத் திட்டமிடல் முதல் உடல்நலம் மற்றும் சமூக நலன் வரையிலான அத்தியாவசிய பொதுச் சேவைகளை வழங்குவதில் உள்ளூராட்சி அமைப்புகளின் மையப் பங்கை இந்தக் கவனிப்பு எடுத்துக்காட்டுகிறது. மேலும், இந்த நிறுவனங்களுக்குள் பெண்களின் அர்த்தமுள்ள பங்கேற்பு ஏன் இன்றியமையாதது என்பதையும் இது வெளிப்படுத்துகிறது. எனவே, பெண்கள் முழுமையாகப் பங்கேற்பதற்கான திறனைக் கட்டுப்படுத்தும் தடைகள், அவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தில் மட்டுமல்லாமல், அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களின் அன்றாட வாழ்க்கையை வடிவமைக்கும் முடிவுகளிலும் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்கும் திறனிலும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

இந்த ஆய்வில் பதிவு செய்யப்பட்டுள்ள சவால்கள் வேட்புமனுத் தாக்கலுக்கு முன்பிருந்து, தேர்தல் பிரச்சாரக் காலம் மற்றும் பதவியேற்ற பிறகு என முழு அரசியல் வாழ்க்கைச் சுழற்சியையும் உள்ளடக்கியுள்ளன. பெண்கள் வளங்களையும் கட்சி ஆதரவையும் பெற சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சபைகளுக்குள் விரோதங்களையும் பாகுபாட்டையும் எதிர்கொள்வதாகவும், அரசியல் வாழ்க்கையுடன் குடும்பப் பொறுப்புகளின் இரட்டைச் சுமையையும் சமாளிக்க வேண்டியிருந்ததாகவும் தெரிவித்தனர். இந்தச் சவால்கள் எவ்வாறு உருவாகின்றன மற்றும் செயற்படுகின்றன என்பதை நன்கு புரிந்துகொள்வதற்காக பெண்களின் அரசியல் அனுபவங்களை வடிவமைக்கும் மூன்று முக்கிய நிறுவனங்களான அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி மன்றங்கள், குடும்பம் மற்றும் சமூக அமைப்புக்கள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு பின்வரும் பகுப்பாய்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்த இடங்களை ஒருங்கிணைத்து ஆய்வு செய்வது முறையான அரசியல் நிறுவனங்களும் பரந்த சமூகக் கட்டமைப்புகளும் உள்ளூராட்சி மட்டத்தில் பெண்களின் பங்குபற்றலை எவ்வாறு செயற்படுத்துகின்றன, கட்டுப்படுத்துகின்றன மற்றும் ஒழுங்குபடுத்துகின்றன என்பதை காட்டுகின்றது.

15 கொழும்பு 019,கொழும்பு மாவட்டம்,22 நவம்பர்,2023

## 5.1 அரசியல் கட்சிகளுக்குள் நுழைவுக்கட்டுப்பாடு மற்றும் ஓரங்கட்டப்படுதல்

உலகளாவிய ரீதியில் அரசியல் கட்சிகள் நவீன பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் முக்கிய தூண்களாக கருதப்படுகின்றன. ஏனெனில் அவை குடிமக்களுக்கு முறையான அரசியல் அமைப்புக்குள் செயற்பாடுமிக்க அரசியல் பங்குபற்றலுக்கும் பிரதிநிதித்துவத்திற்கும் ஒரு தளத்தை வழங்குகின்றன (Siriwardhana 2023). இருப்பினும் இலங்கைச் சூழலில் அரசியல் கட்சிகள் அதிகரித்த அளவில் ஆணாதிக்கமிக்க முறைசாரா தன்மையுடனும், பெண்கள் எளிதில் வழிநடத்த முடியாத கடினமான ஒரு களமாகவும் மாறிவிட்டன (Peiris 2014; Peiris 2018; Uyangoda 2018). அவை பொதுத் துறை - தனியார்துறைப் பிரிவினையை வலுப்படுத்துவதாகவும், அரசியல் அரங்கில் பாலின அடிப்படையிலான தொழில் பிரிவினைகளை மீண்டும் உருவாக்குவதாகவும் விமர்சிக்கப்பட்டுள்ளன (Peiris 2014, 49). மேலும் அவை பெண்களை பிரச்சாரம் செய்தல், நிதி திரட்டுதல் மற்றும் ஆதரவைத் திரட்டுதல் போன்ற அமைப்பு சார்ந்த பணிகளுக்குள் பெரும்பாலும் முடக்கிவிடுகின்றன. (De Silva 1995; Kiribamuna 1999; Liyanage 2018).

ஒதுக்கீட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு கிராமிய அபிவிருத்திச் சங்கங்கள், இறுதிச்சடங்கு குழுக்கள் அல்லது சமுர்த்தி அமைப்பு போன்றவற்றில் பங்குபற்றல் போன்ற அடிமட்ட பொதுமக்கள் ஈடுபாட்டிலிருந்து தேர்தல் அரசியலுக்கான மாற்றம் பெண்களுக்கு அரிதாகவே இருந்தது (Uyangoda and de Mel 2012,22). இது அரசியல் கட்சிகள் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான நுழைவாயில்களாகச் செயல்படும் அதே வேளையில், அவை பெண்களின் அரசியல் அதிகாரத்திற்கான அணுகலைக் கட்டுப்படுத்தும் நிறுவனங்களாகவும் ஒரே நேரத்தில் செயற்பட முடியும் என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

எனவே, பின்வரும் பகுதியானது அரசியல் கட்சிகளுக்குள் இருக்கும் இத்தகைய நிறுவன இயக்கவியலானது வேட்பாளர் தெரிவு செயன்முறைகளில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதை ஆய்வு செய்கின்றது. குறிப்பாக பெயரளவிலான நியமனங்களும் முறைசாரா கட்சி நடைமுறைகளும் தேர்தல் அரசியலில் பெண்களின் நுழைவையும் அதன் பின்னரான அவர்களின் நிலைத்திருக்கக் கூடிய திறனையும் வடிவமைக்கின்றன.

### 5.1.1 வேட்பாளர் தெரிவு மற்றும் பெயரளவிலான நியமனம்

உள்ளூராட்சி அரசாங்கத்தில் பெண்களின் பங்குபற்றலை அதிகரிக்கும் நோக்கத்துடன் ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும் இந்த சீர்திருத்தம் பாலின உட்சேர்க்கைக்கான ஒரு உண்மையான உறுதிப்பாடாக கருதப்படாமல், அரசியல் கட்சிகளால் பெரும்பாலும் ஒரு "மேலோட்டமாக செய்யப்படும் செயற்பாடாகவே" கருதப்பட்டது. அதிகப் போட்டி நிறைந்த இடங்களில் போட்டியிடப் பரிந்துரைக்கப்படுவதற்குப் பதிலாக, விகிதாசாரப்

பிரதிநிதித்துவப் (PR) பட்டியலின் கீழ் உள்ள 50% மேலதிக இடங்களுக்குப் பெண்கள் விகிதாசாரத்திற்கு அதிகமாகப் பரிந்துரைக்கப்பட்டனர். முக்கியத் தகவலாளர் K குறிப்பிட்டது போல, பெண்களின் சேர்க்கை என்பது “பெயரளவிலான இடங்கள்,” “இலவச இடங்கள்,” அல்லது “bonus இடங்கள்” என விவரிக்கப்பட்டது. இந்தச் சொற்கள் அவர்களின் அரசியல் செல்லுபடியாக்கத் தன்மையை மேலும் குறைத்ததுடன் அவர்கள் ஒதுக்கீட்டின் காரணமாக மட்டுமே இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தை வலுப்படுத்தின.[16]

இந்த பெயரளவிலான சித்தரிப்பானது ஆரம்பத்திலிருந்தே பல அரசியல் கட்சிகள் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக வெளிப்படுத்திய பரந்த எதிர்ப்புடன் நெருக்கமாகப் தொடர்புபட்டிருந்தது. முக்கியத் தகவலாளர் D யின் கூற்றுப்படி பல கட்சித் தலைவர்கள் இந்த இட ஒதுக்கீடு ஒருபோதும் சட்டமாகாது என்ற அனுமானத்தின் கீழ் செயற்பட்டனர் அவர்களில் ஒரு தலைவர் “எங்கள் பெண்கள் அரசியலில் ஈடுபடப் போவதில்லை” என்று வெளிப்படையாகக் கூறினார்.[17] பெண்களை சேர்க்கத் தவறினால் வேட்பாளர் பட்டியல்கள் செல்லுபடியற்றதாகிவிடும் என்று தெரிவிக்கப்பட்ட பிறகும் சில தலைவர்கள், அந்த இட ஒதுக்கீட்டை சட்ட ரீதியாக அமுல்படுத்துவதைத் தங்களால் தடுக்க முடியும் என்று வலியுறுத்தியதோடு, அதன் அமுலாக்கத்தில் தங்களால் தலையிட முடியும் என நம்பினர்.

இதன் விளைவாக, வேட்பாளர் தெரிவு அடிக்கடி கடைசி நேரத்தில் நடைபெற்றது. 25% ஒதுக்கீட்டு தேவையை பூர்த்தி செய்ய தாங்கள் சட்ட ரீதியாக நிர்பந்திக்கப்படுவதை கட்சிகள் உணர்ந்தவுடன் அடிமட்ட அளவில் கட்சிக்காக அயராது உழைத்த பெண்களின் பெயர்களைச் சேர்ப்பதற்குப் பதிலாக கட்சி உறுப்பினர்களின் மகள்கள், மனைவிகள் அல்லது பிற பெண் உறவினர்களின் பெயர்களை அவசரமாக பரிந்துரை செய்தனர். முக்கியத் தகவலாளர் D குறிப்பிட்டது போல, இந்தக் கட்சிகள் வலுவான பெண் வேட்பாளர்களை விட “இடத்தை நிரப்புபவர்களையே” தேடின. ஏனெனில் திறமையான பெண்கள் கட்சி அமைப்புகளுக்குள் ஆண்களின் ஆதிக்கத்திற்கு நீண்டகால அச்சுறுத்தலாகக் கருதப்பட்டனர்.[18]

தெளிவான தெரிவு அளவுகோல்கள் இல்லாதது இந்த நிலைமைகளை மேலும் சிக்கலாக்குகின்றது. தகுதி, கல்வி, அரசியல் அனுபவம் அல்லது சமூக ஈடுபாடு ஆகியவை பெண்களின் வேட்பாளர் நியமன வாய்ப்புகளில் சிறிதளவே செல்வாக்கு செலுத்தின. இதனால் பல, பெண் கட்சிப் பணியாளர்களுக்கு வேட்பாளர் நியமனங்களைக் கோரவோ அல்லது பெறவோ தெளிவான வழிமுறை எதுவும் இல்லாமல் போனது. திறமையான மற்றும் தகுதியான பெண்கள் வேட்பாளர்களாக பரிந்துரைக்கப்பட்ட போதும் ஆண் தொகுதி அமைப்பாளர்கள் அவர்களுக்கு பாதகமான வழிகளில் இந்த செயன்முறையைத் தொடர்ந்தும் கையாண்டனர். பல ஆண்டுகளாகத் தங்கள் தொகுதிகளில் பணியாற்றிய பெண்களுக்கு வேட்பாளர்

16 வெளிநாட்டிலுள்ள பாலின ஆய்வாளர், 20 நவம்பர் 2023 (நிகழ்நிலை நேர்காணல்)

17 மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தில் உள்ள சர்வதேச அரசுசாரா அமைப்பில் பணிபுரியும் கொள்கை வாதாடல் நிபுனர்

18 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

நியமனங்கள் மறுக்கப்பட்ட நிகழ்வுகளைப் பல முக்கியத் தகவலளிப்பவர்கள் விவரித்தனர். ஏனெனில் அவர்கள் வலுவான போட்டியாளர்களாக உருவாகி தங்களின் எதிர்கால வேட்பாளர் வாய்ப்புகளுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்று அமைப்பாளர்கள் அஞ்சினர். இதன் விளைவாக அனுபவம் வாய்ந்த பெண்கள் அடிக்கடி அரசியல் அனுபவமற்ற புதியவர்களால் மாற்றப்பட்டனர். அவர்கள் நிலவும் அசமத்துவ அதிகார அமைப்புகளுக்கு எந்த சவாலையும் ஏற்படுத்தாதவர்கள் ஆவர்.

அரசியல் கட்சிகள் இறுதியில் அதிகமான பெண்களை வேட்பாளர்களாக நியமிக்க வேண்டும் என்ற சட்டப்பூர்வத் தேவைக்கு இணங்கியபோதிலும், அந்த இணக்கம் வேட்பாளர் தேர்வை நிர்வகிக்கும் முறைசாரா நடைமுறைகளை அடிப்படையாக மாற்றவில்லை. மாறாக, கட்சிகள் ஏற்கனவே இருந்த அதிகாரக் கட்டமைப்புகளைப் பாதுகாக்கும் வழிகளில் அந்த ஒதுக்கீட்டிற்குத் தங்களை மாற்றியமைத்துக் கொண்டன. இது, யார் வேட்பாளராக நியமிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பான முடிவுகளில் மட்டுமல்லாமல், பெண்கள் எங்கு போட்டியிட வேண்டும் என்பதிலும் அவர்கள் அரசியலில் நுழைந்த சூழல்களிலும் தெளிவாகத் தெரிந்தது.

அரசியல் கட்சிகள் கையாண்ட ஒரு மூலோபாயம், பெண்களுக்குப் பரிச்சயமில்லாத அல்லது வெற்றி பெற முடியாத தொகுதிகளை ஒதுக்குவதாகும். பெண்களுக்கு வலுவான சமூகத் தொடர்புகளோ அல்லது தேர்தல் ஆதரவோ இல்லாத தொகுதிகளில் அவர்களை நிறுத்துவதன் மூலம், கட்சிகள் தங்களின் வெற்றி வாய்ப்புகளைப் பெருமளவில் குறைத்துக்கொண்டன. முக்கிய தகவலாளர் M அவர்களின் கூற்றுப்படி, கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், பெரும்பான்மையாக ஆங்கிலம் பேசும் மக்கள் வசிக்கும் ஒரு தொகுதியில் நியமிக்கப்பட்டார். அவருக்கு ஆங்கிலம் பேசத் தெரியாமல் இருந்தது. அவரது தோல்வியை உறுதி செய்வதே அந்தத் தொகுதி ஏற்பாட்டாளரின் நோக்கமாக இருந்தது. இதுவும் கூட ஏற்பாட்டாளர் அவரது ஆரம்ப வேட்புமனுவைத் தடுத்த பின்னரே இந்த நியமனம் நிகழ்ந்தது. இதைத் தொடர்ந்து கட்சித் தலைமை தலையிட்டு அவரை மேலதிக பட்டியலில் சேர்த்தது. பின்னர், அவர் போட்டியிடுவதற்காக அந்தப் பட்டியலில் மனு அளிக்க வேண்டியிருந்தது. அதன் பின்னரே அவர் தேர்தலில் போட்டியிட முடிந்தது.[19]

மொத்தத்தில் இந்த நடைமுறைகள் 2018ஆம் ஆண்டு தேர்தலின் போது பெயரளவு பிரதிநிதித்துவம் எவ்வாறு நடைமுறையில் செயற்பட்டது என்பதை நிரூபிக்கின்றன. கட்சிகள் முறைப்படி இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடித்தாலும் கட்சி ஏற்பாட்டாளர்களே “வெல்ல முடியாத தொகுதிகள்” என்று குறிப்பிட்ட இடங்களில் பெண்களைத் திட்டமிட்டு நியமிப்பதன் மூலம் அரசியல் நிறுவனங்களின் ஆணாதிக்கக் கட்டமைப்பைத் தக்கவைத்துக் கொண்டன. மேலும் முக்கியத் தகவலாளர் M சுட்டிக்காட்டியபடி பெண்களைப் பரிந்துரை செய்ய

19 மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தைச் அரசியல் செயற்பாட்டாளர், 25 ஜூன் 2025.

தயங்குவதை கட்சிகள் "தினன ஜோக்கியோ" (දිනන ජෝකියෝ) எனக் கூறி காரணம் காட்டி நியாயப்படுத்தின.[20 21] இந்த கருத்து கட்சிக்குள்ளான கலந்துரையாடல்களுக்குள் மட்டுமல்லாது இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்பே மூத்த அரசியல்வாதிகளாலும் இது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன[22] அவர்கள் அரசியல் கட்சிகள் பாலின சமத்துவத்தில் அக்கறை கொள்ளவில்லை என்றும் மாறாக "யார் தேர்தலில் வெற்றி பெற முடியும்" என்பதில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளன என்றும் குறிப்பிட்டார். இதன் மூலம், பெண்களிடையே "வெற்றிபெறும் அதிகபட்ச வாய்ப்பு" (Winning Horses) இல்லை என்பதை அவர் சூசகமாகக் கூறினார் (Kodikara 2023).

இத்தகைய சூழல்களில், குதிரைப் பந்தயத்திலிருந்து பெறப்பட்ட "ஜோக்கியோ" என்ற சொல், பெண்களை "வெற்றி பெறக் கூடிய வேட்பாளர்கள்" என்று எதிர்பார்க்கப்படும் கலைஞர்களாக இழிவாகச் சித்தரிக்கப் பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில், அத்தகைய பெண்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை என்றும் வலியுறுத்தப்பட்டது. நடைமுறையில், "வெற்றி பெறக்கூடிய வேட்பாளர்" என்ற இந்தக் கருத்து நன்கு அறியப்பட்ட பெயர், நிதி வளங்கள், செல்வாக்கு, கட்சித் தலைவர்களுடனான குடும்பத் தொடர்புகள், அத்துடன் கட்சிக்கும் தொகுதிக்கும் இடையிலான ஆதரவு வலையமைப்புகளைப் பேணுவதில் தீவிர ஈடுபாடு போன்ற அளவுகோல்களின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகிறது (Kodikara 2009; Liyanage 2018a). இந்த நியாயப்படுத்தலானது திறமையான பெண்களுக்கு வேட்புமனுக்கள் மறுக்கப்படுவதற்கும் அதற்குப் பதிலாகக் கட்சி அனுபவமற்ற பெண் உறவினர்களை களமிறக்குவதற்கும், பின்னர் அந்த வேட்பாளர்களின் தேர்தல் தோல்விகள் பெண்கள் தொடர்ந்தும் கூடுதல் பட்டியல் வழியாகவே வழிநடத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதாரமாக மேற்கோளிடப்பட்டு, அதன் மூலம் அவர்களின் அரசியல் செல்லுபடியாக்கத் தன்மையை குறைப்பதற்கும் வழிவகுத்த ஒரு சுழற்சியை ஏற்படுத்தியது.

"வெற்றிபெறும் திறன்" குறித்த இந்த கணிப்புக்கள் பெண்களின் திறன்கள் பற்றிய பாலின அடிப்படையிலான கண்ணோட்டங்கள் மூலமாகவும் வலுப்படுத்தப்படுகின்றன. ஒரு ஆண் உள்ளூராட்சி சபை உறுப்பினர் குறிப்பிட்டது போல, "பெண்கள் தைரியமானவர்கள் அல்லர், போதுமான அர்ப்பணிப்பும் கொண்டவர்கள் அல்லர் இந்த ஆணாதிக்கக் கலாச்சாரத்தில் அவர்கள் தங்களின் கீழ்நிலைகளை அனுபவித்து தங்கள் வாழ்க்கையை குடும்பங்கள்/ வீடுகளுக்குள் சுருக்கிக் கொள்கிறார்கள். தேர்தல்களில் வெற்றி பெறவும், அரசியல் உலகில் நிலைத்து நிற்கவும் அவர்கள் சவாலை ஏற்க வேண்டும்" (Liyanage 2018b). இத்தகைய பார்வைகள் அரசியலுக்குப் பெண்கள் தகுதியற்றவர்கள் என்பது பற்றிய ஒரே மாதிரியான

20 இச்சொல்லைத் தோராயமாக மொழிபெயர்த்தால் "வெல்லக்கூடிய குதிரைகள்" என்ற பொருள் கிடைக்கும்.

21 மேல்மாகாண கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர், 25 ஜூன் 2025.

22 இந்தக் கூற்றை சிறிசேன 2009-ஆம் ஆண்டில் 'சம்முத்தியா' என்ற பிரபலமான தொலைக்காட்சி கலந்துரையாடல் நிகழ்ச்சியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளராக இருந்தபோது வெளியிட்டார். பின்னர் அவர் 2015 முதல் 2019 வரை இலங்கையின் ஏழாவது ஜனாதிபதியாகப் பணியாற்றினார்.

கருத்துக்களை மீண்டும் உருவாக்குவது மட்டுமல்லாமல் கட்டமைப்புத் தடைகளைக் கடந்து செல்லும் பொறுப்பையும் பெண்கள் மீதே சுமத்துகின்றன.

எந்தப் பெண்கள் வேட்பாளர்களாக நியமிக்கப்படுவார்கள் என்பதையும், அவர்கள் போட்டியிடும் நிபந்தனைகளையும் வடிவமைப்பதைத் தாண்டி, கட்சி நடைமுறைகள் பெண்கள் அரசியலில் நுழையும் விதத்திலும் செல்வாக்கு செலுத்தின. பல சந்தர்ப்பங்களில், தேர்தல் அரசியலில் பெண்களின் நுழைவு ஆண் உறவினர்களால் மத்தியஸ்தம் செய்யப்பட்டதாக நேர்காணல் தரவுகள் வெளிப்படுத்தின. இது, ஆண்களின் அரசியல் அதிகாரத்தைப் பெண்களுக்கு மாற்ற முடியும் என்ற ஆணாதிக்க அனுமானங்களை வலுப்படுத்தியது. இட ஒதுக்கீட்டின் அறிமுகம் பெண்களுக்கு அரசியல் பதவிகளை அடைய புதிய வாய்ப்புகளை உருவாக்கியிருந்தாலும், அவர்கள் அரசியலில் நுழைந்த செயல்முறையானது, பெண்களைச் சுதந்திரமான அரசியல் செயல்பாட்டாளர்களாக நேரடியாக ஈடுபடுத்துவதற்குப் பதிலாக, பெரும்பாலும் முறைசாரா ஆணாதிக்க நடைமுறைகளாலேயே ஆளப்பட்டது என்பதை இந்த நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஒரு உறுப்பினர், தனது கணவர் ஏற்கனவே அரசியலில் ஈடுபட்டிருந்ததால்தான் தானும் அரசியலில் நுழைந்ததாகவும், அவரது அரசியல் தொடர்புகளின் காரணமாகவே தனக்கு அந்த வாய்ப்பு கிடைத்ததாகவும் வெளிப்படையாகக் கூறினார். மேலும் அவர், குடும்பத்திற்குள் கருத்து வேறுபாடுகளைத் தவிர்ப்பதற்காகத் தனது கணவரின் அதே அரசியல் கட்சியில் சேர்ந்ததாக விளக்கினார்.

“ஒரு குடும்பத்தில், கணவன் மற்றும் மனைவி இருவரும் எந்த அரசியல் கட்சியை ஆதரிப்பது என்பதில் உடன்பட வேண்டும். இது கருத்து வேறுபாட்டிற்கு வழிவகுக்கக் கூடாது, ஏனெனில் அது பிரச்சினைகளை ஏற்படுத்தும். எனவே, அவர் அந்தக் கட்சியில் உறுப்பினராக இருந்ததால், நானும் அதே கட்சியில் சேர்ந்தேன்.”[23]

தனது அரசியல் கட்சியைத் தேர்ந்தெடுத்ததற்கான அவரது நியாயப்படுத்தலில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், இது தன் மீது திணிக்கப்பட்ட ஒரு முடிவு என்று முன்வைப்பதற்குப் பதிலாக, குடும்பத்திற்குள் அரசியல் சார்புநிலை என்பது இயல்பானது மற்றும் விரும்பத்தக்கது என்று அந்த உறுப்பினர் விளக்கினார். இது, முறைசாரா பாலின நெறிமுறைகள் குடும்ப உறவுகளுக்குள் எவ்வாறு இயல்பாக்கப்பட்டு மீண்டும் உருவாக்கப்படலாம் என்பதை விளக்குகிறது.

23 பொலன்னறுவை 032, பொலன்னறுவை மாவட்டம், 13 நவம்பர் 2023

அரசியல் நடவடிக்கைகளில் கணவரின் தொடர்ச்சியான ஈடுபாடு பற்றி நேர்காணலின் களக் குறிப்புகள் விளக்குகின்றன. நேர்காணலின் போது அவர் உடனிருந்ததையும், அடிக்கடி நிதி விடயங்களைக் குறிப்பிட்டதையும், சில சமயங்களில் அவர் சார்பாகக் கேள்விகளுக்குப் பதிலளித்ததையும், பின்னர் அந்த உறுப்பினர் அவரது பதில்களுக்கு ஒப்புக்கொண்டதையும் அவை சுட்டிக்காட்டின.[24] இது அந்த பெண் உறுப்பினரின் தரப்பில் சுயமாகச் செயல்படும் திறன் இல்லை என்பதைக் குறிக்கவில்லை என்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளில் நுழைந்த பின்னரும் சில பெண்களின் அரசியல் பங்கேற்பை வடிவமைப்பதில் ஆண் குடும்ப உறுப்பினர்களின் தொடர்ச்சியான செல்வாக்கை இது சுட்டிக்காட்டுகிறது.

மற்றொரு நேர்காணலிலும் இதே போன்றதொரு அம்சம் வெளிப்பட்டது. அதில் ஒரு உறுப்பினர் தான் ஒரு வேட்பாளராகப் பரிசீலிக்கப்படுவதை அறிவதற்கு முன்பே, தனது கணவரே தனது வேட்புமனுவைத் தொடங்கியதாக விளக்கினார். அவரது கூற்றுப்படி, ஒரு பெண் வேட்பாளரைத் தேடி கட்சிப் பிரதிநிதிகள் அவரது குடும்பத்தைத் தொடர்பு கொண்டபோது, அவரது கணவர் அவரிடம் இது பற்றிக் கலந்தாலோசிக்காமலேயே, அவர் சார்பாக அந்த வேட்புமனுவை ஏற்றுக்கொண்டு, அந்த விடயத்தைத் தானே கையாள்வதாகக் கட்சி அதிகாரிகளுக்கு உறுதியளித்துள்ளார். அதன் பின்னர்தான் அவர் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என்பது அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. தனது இறுதி வெற்றியைப் பற்றிப் பேசுகையில், தனது சொந்த அரசியல் கொள்கை அல்லது பிரச்சாரத்தை விட, தான் சார்ந்திருந்த கட்சியைச் சேர்ந்த ஒரு முன்னாள் ஜனாதிபதியின் செல்வாக்கே தனது வெற்றிக்கு முக்கியக் காரணம் என்று அவர் கூறினார்.[25]

இந்தக் கூற்றில் குறிப்பாகக் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், கணவர் அவர் சார்பாக வேட்புமனுவை ஏற்றுக்கொண்டார் என்பதல்ல, மாறாக அந்த அரசியல் கட்சி, வருங்கால வேட்பாளருடன் நேரடியாக ஒருபோதும் தொடர்பு கொள்ளவில்லை என்பதுதான். வேட்புமனுத் தாக்கல் செயல்பாட்டில் அவரது ஈடுபாடு இல்லாதது, பெண்களைச் சுதந்திரமான அரசியல் செயல்பாட்டாளர்களாக நேரடியாக ஈடுபடுத்துவதன் மூலம் அல்லாமல், ஏற்கனவே உள்ள குடும்ப அதிகாரக் கட்டமைப்புகள் மூலமாகவே அரசியலில் நுழைவது சாத்தியமாகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. பெண்களின் அரசியல் பங்கேற்பில், தனிப்பட்ட மற்றும் பொதுத் தளங்களுக்கு இடையிலான எல்லைகள் எவ்வாறு குறைவடைந்தன என்பதையும் இது விளக்குகிறது. முறைசார் அரசியல் நிறுவனங்களில் நுழைவது தொடர்பான முடிவுகள் பெரும்பாலும் குடும்பத்திற்குள்ளேயே எடுக்கப்படுகின்றன. இதன் விளைவாக, ஒரு முறைசார் நிறுவன சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், குடும்பம் மற்றும் கட்சி ஆகிய இரண்டிலும் செயல்படும் முறைசாரா பாலின அதிகார உறவுகள், அரசியல் பதவிகளைப்

24 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

25 கொழும்பு 020, கொழும்பு மாவட்டம், 21 நவம்பர் 2023

பெறுவதற்கான பெண்களின் வாய்ப்புகளை எவ்வாறு தொடர்ந்து வடிவமைக்கின்றன என்பதை இந்த நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இருப்பினும், சில சமயங்களில், ஆண் உறவினர்கள் பெண்களின் அரசியல் பிரவேசத்திற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் மூலமாகத் திறம்பட அரசியல் அதிகாரத்தையும் செலுத்தினர். முக்கியத் தகவல் அளிப்பவர் H, கண்டி மாவட்டத்தில் ஒரு ஆண் உறவினருக்குப் பதிலாக ஒரு பெண் வேட்பாளராக நிறுத்தப்பட்ட ஒரு வழக்கத்தை விபரித்தார். அங்கு, 19 வயதுப் பெண் ஒருவர் கட்சியால் வேட்பாளராக நிறுத்தப்பட்டு நிதி உதவியும் செய்யப்பட்டார். ஆனால் அவரது சகோதரரே பிரச்சாரத்தை நடத்தி, வாக்குகள் சேகரித்து, அரசியல் நடவடிக்கைகளின் மீதான கட்டுப்பாட்டைத் தன்வசம் வைத்திருந்தார். அவருக்குப் பதிலாக இவருக்கே வாக்குகள் அளிக்கப்பட்டன.[26] ஒரு சுதந்திரமான அரசியல்வாதியாகச் செயல்படுவதற்குப் பதிலாக, அப்பெண் முறைசார் வேட்பாளராகச் செயற்பட்டார். அதே நேரத்தில் அரசியல் அதிகாரம் தொடர்ந்து அவரது சகோதரராலேயே செலுத்தப்பட்டது. இத்தகைய வழக்குகள், பெண்களின் அரசியல் சுய தீர்மானமெடுக்கும் இயலுமையை மேம்படுத்துவதற்குப் பதிலாக, ஆணாதிக்கக் கட்டுப்பாட்டை வலுப்படுத்தும் வழிகளில் இட ஒதுக்கீடு எவ்வாறு செயல்படுத்தப்படலாம் என்பதை விளக்குகின்றன. இது அரசியல் அதிகாரம் ஆண் உறவினர்களின் கைகளில் இருக்கும்போது, பெண்கள் முறைசார்ந்த வேட்பாளர் பதவிகளை வகிக்க அனுமதிக்கிறது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, பெண்கள் அரசியலில் நுழையும் சூழ்நிலைகளை அவசியமாக மாற்றியமைக்கவில்லை என்பதை இந்தக் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன. இந்த ஒதுக்கீடு பெண்களின் பிரதிநிதித்துவத்தை விரிவுபடுத்திய போதிலும், வேட்பாளர் தேர்வு மற்றும் சில சமயங்களில் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை, ஆண் உறவினர்களுக்குச் சலுகை அளிக்கும் முறைசாரா நடைமுறைகள், நிறுவப்பட்ட ஆதரவு வலையமைப்புகள் மற்றும் ஏற்கனவே உள்ள கட்சிப் படிநிலைகளால் தொடர்ந்து வடிவமைக்கப்பட்டன. ஒரு பெண்ணிய நிறுவனவாதக் கண்ணோட்டத்தில், ஒதுக்கீடுகள் போன்ற முறையான நிறுவன சீர்திருத்தங்கள் முறைசாரா நிறுவனங்களுக்குள் எவ்வாறு இடமளிக்கப்படலாம் என்பதை இது விளக்குகிறது. இது, கட்சிகள் சட்டத் தேவைகளுக்கு இணங்கவும், அதே நேரத்தில் ஏற்கனவே உள்ள பாலின அடிப்படையிலான அதிகாரக் கட்டமைப்புகளைப் பாதுகாக்கவும் அனுமதிக்கிறது. முக்கியத் தகவல் அளிப்பாளர் M பிரதிபலித்ததைப் போல:

“இந்த ஒதுக்கீட்டைக் கொண்டு வருவதன் மூலம், கட்சிப் பட்டியல்களை நிரப்புவதற்காக மட்டும் பெண்களைக் கொண்டுவர நாங்கள் விரும்பவில்லை பெண்கள் முடிவுகளை எடுக்கக்கூடிய பதவிகளில் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். அவர்களால் கருத்துக்களை

26 மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உள்ள மகளிர் அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளர், 12 ஜனவரி 2024

வெளிப்படுத்தவோ அல்லது முடிவுகளை எடுக்கவோ முடியாவிட்டால், இந்த ஒதுக்கீட்டில் எந்த அர்த்தமும் இல்லை, மேலும் நாம் எந்த மாற்றத்தையும் காண மாட்டோம்."[27]

இந்தப் பிரிவில் காட்டப்பட்டதன்படி, பெயரளவிலான நியமனங்கள், அனுபவம் வாய்ந்த பெண்களை விலக்குதல், ஆண் உறவினர்கள் மூலம் பெண்கள் நுழைவதற்கு வழிவகுத்தல், மற்றும் பதில் வேட்பாளர்களை நியமித்தல் ஆகியவை கூட்டாக ஒதுக்கீட்டின் மாற்றியமைக்கும் ஆற்றலைக் கட்டுப்படுத்தின. அரசியல் ஆட்சேர்ப்பை நிர்வகித்த முறைசாரா நிறுவனங்களுக்கு சவால் விடுப்பதற்குப் பதிலாக, இந்த நடைமுறைகள் கட்சிகள் ஏற்கனவே இருந்த ஆணாதிக்கப் படிநிலைகளைப் பாதுகாத்துக்கொண்டே, ஒதுக்கீட்டின் முறையான தேவைகளுக்கு இணங்க வழிவகுத்தன.

### 5.1.2 தேர்தல் பிரச்சாரங்களின் போது எதிர்கொண்ட நிதித் தடைகள்

பல பெண்களுக்கு வாக்குகள் அளிக்கப்படுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அரசியல் வாழ்வின் முதல் தடை எழுந்தது. அதாவது நிதிப் புறக்கணிப்பு பெண்களின் அரசியல் பிரவேசத்தை அதன் அடிமட்டத்திலேயே வடிவமைத்தது. நேர்காணல்களில் உள்ளூராட்சி சபை பெண் உறுப்பினர்கள் தங்கள் பிரச்சாரங்களுக்கு கிட்டத்தட்ட முழுவதுமாகத் தாங்களாகவே நிதியளிக்க வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டதை மீண்டும் மீண்டும் குறிப்பிட்டனர். இதற்கு முற்றிலும் மாறாக கட்சி அமைப்பாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் செல்வந்தர்களின் நிறுவப்பட்ட வலையமைப்புகளை தங்கள் ஆண் வேட்பாளர்கள் நம்பிக்கையாக பயன்படுத்த முடிந்தது என குறிப்பிட்டனர். அரசியல் கட்சிகள் பெண்களுக்கு குறிப்பிடத்தக்க நிதி ஆதரவை அரிதாகவே வழங்கியதால் சுவரொட்டிகள், விளம்பரப் பதாகைகள் அச்சிடுதல் மற்றும் பயணச் செலவுகள் போன்ற பிரச்சாரச் செலவுகளின் முழுச் சுமையை பெண்களே சுமக்க வேண்டியிருந்தது.[28]

இந்த அனுபவங்கள தனிப்பட்ட போராட்டங்களைப் பிரதிபலிப்பதற்கு பதிலாக அரசியல் கட்சிகளுக்குள் இருக்கும் ஆழமான நிறுவன ரீதியான வடிவங்களைச் சுட்டிக்காட்டுகின்றன. பெண்ணிய நிறுவனமயமாக்கத்தின் கண்ணோட்டத்தில் இந்த நிதிப் பற்றாக்குறை என்பது தனிப்பட்ட சிரமம் மட்டுமல்லாமல் வளங்களைச் சமமற்ற முறையில் விநியோகித்து ஆண்களுக்குச் சலுகையளித்து பெண்களைப் புறக்கணிக்கும் நிறுவனங்களின் கட்டமைப்பு ரீதியான விளைவாகும் (Mahoney and Thelen 2010). கட்சி அமைப்புகளுக்குள் பிரச்சார நிதி, நிதி வலையமைப்புகள் மற்றும் பிற பொருள் வளங்களுக்கான அணுகல் பெரும்பாலும் ஆண் வேட்பாளர்களுக்குச் சாதகமாக இருந்த முறைசாரா உறவுகள் மற்றும் ஆதரவு அமைப்புகள் மூலமாகவே வழிநடாத்தப்பட்டது. இந்த முறைசாரா வள வலையமைப்புகள்

27 மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் செயற்பாட்டாளர், 25 ஜுன் 2025.
28 பதுளை 015, பதுளை மாவட்டம், 08 டிசம்பர் 2023.

எந்த வேட்பாளர்களால் போட்டி நிறைந்த பிரச்சாரங்களை நடத்த முடியும் என்பதை பெரும்பாலும் நிர்ணயித்ததால் இது ஆரம்பத்திலிருந்தே பெண்களை ஒரு குறிப்பிடத்தக்க பின்தங்கிய நிலையில் வைத்தது.

நிறுவன அல்லது கட்சி ஆதரவு இல்லாத நிலையில் பல பெண்கள் மிகவும் தனிப்பட்ட மற்றும் நிலையற்ற சமாளிப்பு உத்திகளை/முறைகளை கடைப்பிடிக்கத் தொடங்கினர். பல மாவட்டங்களில் நிதி திரட்டுவதற்காக தங்க நகைகளை அடகு வைக்கும் ஒரு குறிப்பிடத்தக்க போக்கு வெளிப்பட்டது. பதுளையைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் பிரச்சாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தனது நகைகளை அடகு வைத்ததை நினைவு கூர்ந்தார். அதே போன்று புத்தளத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதியும் அதே போன்ற ஒரு அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.[29] இவை தனிப்பட்ட சம்பவங்கள் அல்லாமல் மாறாக ஒரு பரந்த அளவிலான ஒரு முறைமையின் பகுதியாக இருந்தன. இதன்மூலம் பெண்களின் அரசியல் பங்குபற்றல் பெரும்பாலும் அவர்களின் தனிப்பட்ட தியாகங்களின் மீது அமைந்திருந்தது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

நகைகளை அடகு வைக்கும் முடிவானது கடன்கள் அல்லது நிறுவனக் கடன்களைப் பெறுவதற்குப் பதிலாக எடுக்கப்பட்டது. இதனை இலங்கையில் பெண்கள் எதிர்கொள்ளும் கட்டமைப்பு ரீதியான பொருளாதாரப் பின்னடைவுகளின் பரந்த பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது நன்கு புரிந்துகொள்ள முடிகிறது. பெண்கள் பெரும்பாலும் ஆண்களை விடக் குறைவாகவே சம்பாதிக்கின்றார்கள் மற்றும் மூலதனத்திற்கான வரையறுக்கப்பட்ட அணுகலையே கொண்டுள்ளனர். மேலும் காணி மற்றும் பிற முக்கிய சொத்துக்கள் பொதுவாக கணவரின் பெயரிலேயே இருப்பதால் அடகு வைக்கக்கூடிய உறுதிச் சொத்துக்களும் அவர்களிடம் குறைவாகவே உள்ளன. சில சமயங்களில் வணிகப் பரிவர்த்தனைகளில் ஈடுபடுவதற்குக் கூட கணவரின் சட்டப்பூர்வ அனுமதி தேவைப்படுகிறது. இதன் விளைவாக பெண்கள் “பெரும்பாலும் ஆண்களை விட வறுமை நிலையில்” இருக்கிறார்கள் என்றும் “அரசியல் வாழ்க்கைக்காக குறைந்தளவு வளங்களை ஒதுக்கி வைக்கவோ” அல்லது குடும்ப மூலதனத்தை இடர்விளைவிக்கவோ “குறைவான நாட்டம்” கொண்டுள்ளனர் (Kanold 2020; Women's Environment and Development Organisation 2007). எனவே இந்த பாலின அடிப்படையிலான கட்டமைப்பு ரீதியான தடைகள் பல பெண்களுக்கு நகைகளை அடகு வைப்பதே ஒரே சாத்தியமான நிதி உத்தியாக மாறியதற்கான விளக்கத்தை வழங்குகின்றன.

ஒருவரின் தேர்தல் பிரச்சாரத்திற்கு நிதி திரட்டுவதற்காக நகைகளை அடகு வைக்கும் இந்தச் செயலானது ஒரு கலாச்சாரக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது குறிப்பாக கவனத்தை ஈர்க்கின்றது. இலங்கையில் தங்க நகைகள் பெண்களின் வாழ்வில் மகத்தான குறியீட்டு மதிப்பைக் கொண்டுள்ளன (Samarakoon et al. 2022). ஒரு பெண் குழந்தை பிறந்த

29 புத்தளம் 037, புத்தளம் மாவட்டம், 28 நவம்பர் 2023.

தருணத்திலிருந்தே அவளது பெற்றோர் அவளது எதிர்காலத்திற்கான ஒரு முதலீடாகவும் அவளது திருமணத்தை உறுதி செய்வதற்கான ஒரு உறுதியான வரதட்சணையாகவும் தங்கத்தைச் சேகரிக்கத் தொடங்குகிறார்கள். அவள் பருவமடையும்போது/வயதுக்கு வரும் போது அவள் பெண்மைக்குள் அடியெடுத்து வைப்பதைக் குறிக்கும் வகையில் நகைகளால் அலங்கரிக்கப்படுகிறாள் (Winslow 1980). சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்களில் தங்கம் குடும்பத்தின் அந்தஸ்தையும் மணமகளின் மதிப்பையும் பகிரங்கமாக சுட்டிக் காட்டும் ஒரு அடையாளமாக செயற்படுகின்றது. இலங்கையின் சில முஸ்லிம் சமூகங்களில் திருமண இரவில் நடைபெறும் சர்ச்சைக்குரிய "கன்னித்தன்மைச் சோதனையைத்" தொடர்ந்து நடைபெறும் கொண்டாட்டச் சடங்குகளில் தங்கம் வழங்கப்படும் நடைமுறை காணப்படுகின்றது. இது அவளது "தூய்மையை" மட்டுமல்லாமல் அவளது வெற்றிகரமான திருமண நுழைவையும் குறிக்கிறது. (Muslim Women's Research Action Forum, 1999). இந்தச் சூழல்களில் தங்கம் என்பது வெறும் ஆபரணம் மட்டுமல்ல. அது ஆணாதிக்க பொருளாதார அமைப்பின் உட்பகுதியில் இயங்கும் ஒரு நாணயமாகவும், கீழ்ப்படிதல் ஒழுக்கம் மற்றும் திருமணத்திற்கான தயார்நிலை ஆகியவற்றின் குறியீடாகவும்/சின்னமாகவும் விளங்குகின்றது.

எனவே ஆணாதிக்க மரபுகளில் ஊறியிருந்த இதே தங்கமானது பல பெண்களுக்கு அரசியல் அரங்கிற்குள் நுழைய அவர்கள் அணுகக்கூடிய ஒரே மூலதனமாக மாறியிருப்பதென்பது ஆழ்ந்த முரண்பாட்டிற்குறிய ஒரு விடயமாகும். அரசியல் கட்சிகளால் நிதி ஆதரவு மறுக்கப்பட்ட நிலையில் நிறுவன ரீதியான கட்டுப்பாடுகளால் ஓரங்கட்டப்பட்டு ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த ஒரு சூழலில் தவித்த இந்தப் பெண்கள் ஒரு காலத்தில் தங்களை இல்லற வாழ்வோடு பிணைத்திருந்த நகைகளை தங்களின் மீதமிருந்த கடைசிச் சொத்தாக நாடினர். அவர்கள் திருமணத்தை நிலைநிறுத்தும் நேக்கத்திற்கல்லாது ஆட்சி அமைப்பில் ஓர் இடத்தைப் பெறுவதற்காக பருவ வயதில் கொடுக்கப்பட்ட கழுத்தணிகளையும் பிறப்பிலிருந்து சேகரித்த வளையல்களையும், தலைமுறை தலைமுறையாகக் கைமாறி வந்த பரம்பரைச் சொத்துக்களையும் அடகு வைத்தனர். அடிமைத்தனத்தின் அடையாளமாக இருந்த இந்தச் சின்னத்தை அரசியல் எதிர்ப்பிற்கான ஒரு கருவியாக மீள் பயன்படுத்தியதன் மூலம் இந்தப் பெண்கள் அதன் அர்த்தத்தை மறுவரையறை செய்தனர். ஒரு காலத்தில் மணமகளின் அடையாளமாக இருந்த இந்தத் தங்கமானது ஒரு பெண் அரசியல்வாதியின் நாணயமாக மாறியது.

ஏனையவர்களுக்கு தேர்தல் பிரச்சாரங்களின் போது நிதி நிலைத்திருப்பானது கணவர்கள், உறவினர்கள் அல்லது நண்பர்களிடம் ஆதரவை நாடுவதிலேயே சார்ந்திருந்தது. இந்தச் சார்புநிலையானது ஆண் குடும்ப உறுப்பினர்கள் மீதான பெண்களின் பொருளாதாரச் சார்தலை வலுப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் பெண்களின் அரசியல் சுதந்திரத்தை விரிவுபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட இட ஒதுக்கீட்டின் நோக்கத்தையே பலவீனப்படுத்தியது. எனினும் பெண்கள் நிதி திரட்டுவதற்கு மாற்று வழிகளை நாடியபோது அவர்கள் கௌரவம்/கண்ணியம் குறித்த பாலின அடிப்படையிலான நெறிமுறைகளால் கட்டுப்படுத்தப்பட்டனர்.

முக்கிய தகவலாளர் M ஆனவர், ஆண் அரசியல்வாதிகள் கட்சி உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் நிதியளிப்பவர்களுக்காக விருந்துகளை நடத்துவதன் மூலமும் மதுபானம் வழங்குவதன் மூலமும் அவர்களை மகிழ்விப்பதன் மூலமும் எளிதாக ஆதரவைப் பெற முடியும் என்று சுட்டிக்காட்டினார்.[30] என்றாலும் இந்த அவதானிப்பு இலங்கையில் மதுபானம் செயற்படும் பரந்த பாலின அடிப்படையிலான கலாச்சாரச் சூழலுக்குள் புரிந்துகொள்ளப்பட வேண்டும். மதுபானத்துடனான பெண்களின் உறவு முரண்பாடுகளால் குறிக்கப்பட்ட ஆழமான பாலின மற்றும் ஆணாதிக்க நெறிமுறைகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. பெண்கள் வரலாற்று ரீதியாக கிராம அளவில் மதுபானம் குறிப்பாகக் கள்ளு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இது பெரும்பாலும் வீட்டு அல்லது சமூக அடிப்படையிலான அமைப்புகளுக்குள் தயாரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. என்றாலும் உற்பத்தியில் பெண்களின் இந்த ஈடுபாடு இருந்தபோதிலும் மதுபானத்துடன் தொடர்புடைய அவர்களின் வெளிப்படையான ஈடுபாடு குறிப்பாக அதன் விற்பனை, பயன்பாடு அல்லது குடிப்பதோடு தொடர்புடைய சமூக இடங்களில் அவர்களின் இருப்பு என்பவை நீண்ட காலமாக சமூக ரீதியாகக் களங்கப்படுத்தப்பட்டு, ஒழுக்க ரீதியாகக் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நெறிமுறைகள் முன்னர் முறையான சட்டக் கட்டுப்பாடுகள் மூலம் வலுப்படுத்தப்பட்டன. அவை பெண்கள் மதுபானம் வாங்குவதையும் மதுபானம் தயாரித்தல், போத்தல்களில் அடைத்தல் அல்லது விற்பனை செய்தல் போன்றவற்றில் ஈடுபடும் நிறுவனங்களில் பணிபுரிவதையும் தடை செய்தன. 1979ஆம் ஆண்டு மதுவரிக் கட்டளைச் சட்டத்தில் வேரூன்றியிருந்த கட்டுப்பாடுகளைத் தலைகீழாக மாற்றி, ஜூலை 2025இல் வெளியிடப்பட்ட ஒரு அரசாங்க வர்த்தமானியில் இந்தப் பாகுபாடு நிறைந்த விதிகளை முறையாக நீக்கியபோதிலும், சட்ட சீர்திருத்தங்கள் நடைமுறையில் பெண்களின் நடத்தையை தொடர்ந்து ஒழுங்குபடுத்தும் முறைசாரா ஒழுக்க நெறிகளை அகற்றவில்லை (Verité Research 2018).

இந்த முரண்பாடானது மதுபானம் ஒரு மையப் பங்கை வகிக்கும் தேர்தல் அரசியல் சூழலில் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கையில் தேர்தல்களில் வெற்றிபெற "பணம், அதிகாரம் மற்றும் செல்வாக்கு" தேவை என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும் அரசியல் அணிதிரட்டலில் மதுபானம் ஒரு மேலதிக பெரும்பாலும் தவிர்க்க முடியாத அங்கமாக விளங்குகிறது என்று நேர்காணல் தரவுகள் தெரிவிக்கின்றன (Kodikara 2009; Liyanage 2018a). மதுபானத்தை மையமாகக் கொண்ட கூட்டங்கள் முறைசாரா பேச்சுவார்த்தை மற்றும் கூட்டணி அமைப்பதற்கான முக்கிய இடங்களாகச் செயற்படுகின்றன. இவ்விடங்களில் ஆண் அரசியல்வாதிகள் தங்களுக்கு ஆதரவளிப்பவர்களுடன் ஒத்திசைவான உறவுகளை வளர்த்துக் கொள்கின்றனர். இத்தகைய சூழல்களில் பெண்களின் பங்குபற்றலானது அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் அச்சுறுத்தலாக இருப்பதால் இத்தகைய இடங்கள் கட்டமைப்பு ரீதியாக ஆண்களுக்குச் சாதகமாகவே உள்ளன. பேரணிகள்

30 மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் ஆர்வலர், 25 ஜூன் 2025.

மற்றும் அரசியல் கூட்டங்களில் பங்குபற்றலை உறுதி செய்வதற்கான ஒரு பேரம் பேசும் கருவியாகவும் மதுபானம் வழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது, இது தேர்தல் பிரச்சாரத்தின் முறைசாரா வழிமுறைகளுக்குள் அதை மேலும் ஆழமாக வேரூன்றச் செய்கிறது. இந்தப் பழக்கவழக்கங்கள் மதுபானத்தால் தூண்டப்பட்ட வலையமைப்புகளுக்கான அணுகல் அரசியல் செயற்தன்மைக்கு ஒரு முன்நிபந்தனையாக மாறும் ஒரு ஆணாதிக்க அரசியல் கலாச்சாரத்தை மீண்டும் உருவாக்குகின்றன. இதன் மூலம் பெண்களின் பங்குபற்றலுக்கும் செல்வாக்கிற்கும் ஒரு மேலதிக முறைசாரா தடையை உருவாக்குகின்றன.

ஒரு பெண் அரசியல்வாதி தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது ஒரு ஆதரவாளர் தனது வீட்டிற்கு மூன்று சாராய போத்தல்களை கொண்டு வந்து தனது கூட்டங்களுக்கு வருபவர்களுக்கு அவற்றை விநியோகிக்கலாம் என்று கூறியதை விவரித்தார். அதனை அவர் தானாக செய்ய விரும்பாத நிலையில் தனது கணவரிடம், “எனக்குத் தெரியாமல், நீங்கள் கொடுப்பது போல வந்திருப்பவர்களுக்குக் கொடுங்கள்” என்று கேட்டதாக விளக்கினார்.[31] இது ஒரு தனிப்பட்ட சம்பவம் என்று அவர் வலியுறுத்தியதோடு, தங்கள் தேர்தல் பிரச்சாரங்கள் முழுவதும் மதுபானத்தை பெரிதும் எதிர்பார்க்கும் சமகால ஆண்களின் அணுகுமுறையிலிருந்து தனது அணுகுமுறையை வேறுபடுத்திக் காட்டியபோதிலும், பெண்கள் தங்கள் மரியாதையை பாதுகாத்துக் கொள்வதற்காக பெரும்பாலும் ஆண் இடைத்தரகர்கள் மூலம் முறைசாரா பிரச்சார எதிர்பார்ப்புகளை மறைமுகமாக எந்த அளவிற்குப் பேண வேண்டும் என்பதை அவரது இந்த விபரிப்பு விளக்குகிறது.

எனவே இத்தகைய நடைமுறைகள் வெறும் பொருளாதார பரிமாற்றங்களாக மட்டுமன்றி உண்மையில் அரசியல் விசுவாசம், நம்பிக்கை மற்றும் வலையமைப்புகள் உருவாக்கப்பட்டு நிலைநிறுத்தப்படும் வழிமுறைகளாகவும் செயற்படுகின்றன. எனினும் பெண் அரசியல்வாதிகள் தங்கள் நற்பெயருக்கு களங்கத்தை விளைவிக்காமலும் தங்கள் நம்பகத்தன்மையை சேதப்படுத்தும் வதந்திகளுக்கு ஆளாகாமலும் இத்தகைய நடைமுறைகளில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகின்றது.[32] இதன் விளைவாக இலங்கை அரசியல் சூழலில் இன்றியமையாத அங்கமாக விளங்கும் சமூக இடங்களை செயலிலிருந்து அவர்கள் நடைமுறை ரீதியாக விலக்கப்படுகின்றார்கள். இந்த இரட்டை சிக்கல்/இரட்டை கட்டுப்பாடு பெண்கள் நிதி பெறுவதைக் கட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல் தனிப்பட்ட மற்றும் பொதுத் தளங்களில் அவர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்திய பாலின அடிப்படையிலான மரியாதை நெறிமுறைகளையும் வலுப்படுத்தியது.

Shvedova (2005) போன்ற அறிஞர்கள் விவாதிப்பதன் படி, இத்தயை நடைமுறைகள் ஒரு பரந்த “ஆணாதிக்க அரசியல் மாதிரியின்” ஒரு பகுதியாகும். இதில் அரசியல் கட்சிகளும்

31 கொழும்பு 021, கொழும்பு மாவட்டம், 21 அக்டோபர் 2023.

32 மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் ஆர்வலர், 25 ஜூன் 2025.

அரசியல் வாழ்க்கையும் ஆண்களின் நெறிமுறைகள் விழுமியங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளை மையமாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக இரவு நேரக் கூட்டங்கள், முறைசாரா முடிவெடுக்கும் செயன்முறைகள், குடிப்பழக்கம் மற்றும் சூதாட்டம் போன்றவை இதில் அடங்கும். இத்தகைய சூழல்கள் 'நுழைவுக் கட்டுப்பாட்டு' இடங்களாகச் செயற்பட்டு இந்த நிகழ்வுகளில் பங்குபற்ற முடியாதவர்கள் (அல்லது விரும்பாதவர்கள்) உண்மையான அதிகார மையங்களிலிருந்து விலக்கப்படுவதை உறுதிசெய்கின்றன.

பெண்களைப் பொறுத்தவரை இந்த களத்தில் பங்கேற்பது இரட்டைச் சிக்கல்களை உருவாக்குகின்றது. இந்த சூழல்களில் ஈடுபட முயற்சித்தால் அவர்கள் நம்பகத்தன்மையை இழக்கும் அல்லது "ஒழுக்கமற்றவர்கள்" என்ற குற்றச்சாட்டை எதிர்கொள்வது மட்டுமல்லாமல் குடும்ப முரண்பாடுகளையும் சந்திக்க நேரிடுகிறது. ஏனெனில் இரவு நேரக் கூட்டங்கள் அல்லது பொது இடங்களில் கூடிப் பழகுவது குடும்பச் சண்டைகளைத் தூண்டலாம் அல்லது வீட்டுப் பொறுப்புகளைப் புறக்கணித்ததாகக் குற்றச்சாட்டுகளை எழுப்பலாம். இது பெரும்பாலும் பெண்களை தாங்களாகவே அரசியலில் நுழைவதிலிருந்தே விலக்கச் செய்கின்றது. ஏனெனில் இத்துறையில் நுழைவதற்கு அவர்களின் இருப்புக்கு கட்டமைப்பு ரீதியாக பாதகமான நடைமுறைகளை சமாளிக்க வேண்டியுள்ளது (Shvedova 2005).

மேலும் ஆணாதிக்கம் கொண்ட இத்தகைய வலையமைப்புகள் கட்சிகளின் செயற்பாட்டில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. ஏனெனில் அரசியல் கட்சிகள் கட்டமைக்கப்பட்ட உறுப்பினர் இயக்க முறைமைகளிலிருந்து விலகி மேலும் நெகிழ்வான மற்றும் உறவு சார்ந்த செயற்பாட்டு முறைகளை நோக்கி நகர்வதால் இந்த வலையமைப்புகளை உருவாக்குவதில் ஏற்கனவே கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள பெண்களுக்கு இந்தப் போக்கானது அரசியலில் நுழைவதற்கு இன்னும் கடுமையான தடையை உருவாக்குகிறது. மேலும் கட்சிகளின் ஆணாதிக்க செயற்பாட்டு முறைகள் சட்டமன்ற அமைப்புகளிலும் தொடர்கின்றன. அங்கு பணிபுரியும் தாய்மார்கள் மற்றும் பெண் உறுப்பினர்களுக்கான ஆதரவற்ற அமைப்புகள் நீடித்த அரசியல் வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்வதில் உள்ள சிரமத்தை மேலும் அதிகரிக்கின்றன (Shvedova 2005).

De Alwis (1995) நமக்கு சுட்டிக்காட்டுவது போல பெண்கள் எப்போதும் தேசத்தின் ஆணாதிக்கப் பார்வையின் கீழ் வைக்கப்படுகின்றனர். அரசியலிற்குள் நுழைவதற்காக அவர்கள் "மரியாதைக்குரியவர்களாக" கருதப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால் ஆதரவு மற்றும் ஆணாதிக்க நடைமுறைகளால் கட்டமைக்கப்பட்ட ஒரு அரசியல் தளத்திற்குள் நுழைந்தவுடன் அந்த மரியாதையைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள முடிவதில்லை.

சில சந்தர்ப்பங்களில் இந்த பாலின அடிப்படையிலான கட்டுப்பாடுகள் வெறும் தடையாக மட்டுமல்லாமல் கட்டாயப்படுத்தலாக இருந்தன. சில சந்தர்ப்பங்களில் பிரச்சார நிதிக்கு ஈடாக

சிலர் பாலியல் சலுகைகளைக் கோரியதாக முக்கியத் தகவலாளர்கள் வெளிப்படுத்தினர்.[33] இத்தகைய நெறிமுறையற்ற கோரிக்கைகள் நிதிச் சார்புநிலை எவ்வாறு சுரண்டலுக்கான சூழல்களை உருவாக்கக்கூடும் என்பதை விளக்குகின்றன. மேலும் ஆண் அரசியல்வாதிகள் எதிர்கொள்ளாத ஒரு பாலின அடிப்படையிலான பாதிப்பையும் இது உருவாக்குகிறது.

இருப்பினும், நேர்காணல்கள் அனைத்திலும் நிதிப் புறக்கணிப்பே பிரதானமாக இருந்தபோதிலும் ஒரு சில பெண்கள் தங்களுக்கு அதிக ஆதரவு வழங்கும் கட்சி அமைப்புகள் இருப்பதாக விவரித்தனர். உதாரணமாக மட்டக்களப்பில் உள்ள காத்தான்குடி நகர சபையின் உறுப்பினர் ஒருவர் தனது கட்சியே தனது பிரச்சாரம் தொடர்பான அனைத்து செலவுகளையும் ஏற்றுக்கொண்டதாக விளக்கினார். என்றாலும் இது ஒரு விதிவிலக்கு என்பதை அவர் ஒப்புக்கொண்டார். மற்றைய கட்சிகளைச் சேர்ந்த தனது சக உறுப்பினர்கள் பலர் தங்கள் பிரச்சாரங்களுக்குத் தனிப்பட்ட முறையில் நிதியளிக்க வேண்டியிருந்தது என்பதையும் அவர் குறிப்பிட்டார். தனது கட்சிக்குள்ளேயே கூட வள ஒதுக்கீட்டில் பாலின அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளை அவர் கவனித்தார். மேலும் அவர் கூறியதாவது:

“ஆண்களுக்கு முழுமையான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டால் பெண்களுக்கு அதன் அரைவாசிக்கும் குறைவாகவே வழங்கப்படும்”.[34]

அவருடைய அனுபவமானது அரசியல் நிறுவனங்களுக்குள் இருக்கும் நிதி வளங்கள் ஒருபோதும் நடுநிலையானவை அல்ல என்றும் மாறாக அவை பாலின அடிப்படையிலான தர்க்கங்களின் மூலம் விநியோகிக்கப்படுகின்றன என்பதைக் கூறும் பெண்ணிய நிறுவனமயமாக்க வாதங்களை வலுப்படுத்துகிறது. இத்தகைய பகிர்வு முறைகள் பெரும்பாலும் அதிக “மதிப்புடைய” அரசியல் முதலீடுகளாகக் கருதப்படும் ஆண் வேட்பாளர்களுக்கு சாதகமாக அமைகின்றன (Duerst-Lahti 2008).

அதே நேரத்தில் கட்சிகளிடையே இந்த போக்குகள் வேறுபட்டிருந்தன. பெரும்பாலான கட்சிகள் தங்கள் தேர்தல் பிரச்சாரச் செலவுகளை தாங்களே நிதியளிக்கும் திறனை அடிப்படையாகக் கொண்டு வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து நியமிக்கின்றன. ஆனால் தேசிய மக்கள் சக்தி (NPP) என்ற ஒரு கட்சி மட்டும் தனது அனைத்து வேட்பாளர்களுக்கும் நிதியளிக்கும் ஒரு நடைமுறையைக் கடைப்பிடித்தது. இந்த அணுகுமுறை ஏற்கனவே பொருளாதார வளங்களைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமையளிக்கும் நடைமுறை மற்றும் ஏற்கனவே பரவலாக உள்ள ஆதிக்கம் செலுத்தும் வள ஒதுக்கீட்டு முறையிலிருந்து மாறுபட்டு நியாயம் மற்றும் போட்டித்தன்மை குறித்த பரந்த விவாதங்களை எழுப்பியது. சுவாரஸ்யமான விடயம் என்னவெனில், முக்கியத் தகவல் அளிப்பவர் M இந்த அணுகுமுறையை விமர்சன ரீதியாகப்

33 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

34 மட்டக்களப்பு 016, மட்டக்களப்பு மாவட்டம், 15 நவம்பர் 2023.

கவனித்தார். ஏனைய கட்சிகளின் கீழ் போட்டியிடும் பெண்கள் அனுபவிக்கும் நிதிச் சுமைகளிலிருந்து NPP வேட்பாளர்களைப் பாதுகாப்பதன் மூலம் இது ஒரு சமமற்ற போட்டிச் சூழலை உருவாக்குகிறது என்று அவர் வாதிட்டார். தகவல் அளிப்பவரின் பார்வையில், மற்ற இடங்களில் எதிர்கொள்ளப்படும் அதே கட்டமைப்புத் தடைகளை இந்த வேட்பாளர்களும் எதிர்கொள்கிறார்களா என்ற கேள்விகளை இது எழுப்பியது.[35]

எனினும் இன்னுமொரு முக்கியமான விமர்சனம் என்னவென்றால் ஒரு கட்சி தனது வேட்பாளர்களுக்கு நிதி ஆதரவு வழங்குவது உண்மையிலேயே “நியாயமற்றது” எனக் கருதப்பட வேண்டும் என்பதா அல்லது அடிப்படையான கட்டமைப்புப் பிரச்சினை என்பது மற்ற அரசியல் கட்சிகள் பெண்களுக்கு முறையான நிதி அல்லது அமைப்பு ரீதியான ஆதரவை வழங்கத் தவறுவதுதானா என்பதாகும். பெரும்பாலான கட்சிகளில் நிறுவன ரீதியான ஆதரவு இல்லாத நிலை ஆதரவு வழங்கும் கட்சிகளை விதிவிலக்கானவர்களாகவோ அல்லது சிக்கலானவர்களாகவோ கருத வேண்டியதில்லை. மாறாக இலங்கையின் கட்சி அமைப்பு முழுவதும் பிரச்சார வளங்கள் மிகவும் சமமற்ற முறையில் விநியோகிக்கப்படுவதே பரந்த பிரச்சினையாக உள்ளது. இது பெரும்பாலான அரசியல் அமைப்புகளில் பெண்களுக்குத் தொடர்ந்தும் பாதகமாக அமைகிறது.

பெண்ணிய நிறுவனமயமாக்கத்தின் கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்யும்போது இந்தச் சம்பவங்கள் பெண்களின் அரசியல் புறக்கணிப்பை உருவாக்கும் ஒன்றோடொன்று இணைந்த தடைகளை வெளிப்படுத்துகின்றன. வரையறுக்கப்பட்ட மூலதனம் மற்றும் பிணையச் சொத்துக்கள் அடமானம் வைக்கக் கூடிய சொத்துக்கள் போன்ற பொருளாதாரக் கட்டுப்பாடுகள் பெண்கள் மீது தனித்துவமாக திணிக்கப்படும் மரியாதை குறித்த கருத்தாக்கத்துடன் இணைந்து செயற்படுகின்றன. ஆண்களைப் போல அவர்கள் அரசியல் ஆதரவு (ஆதரவு வழங்கப்படும் அரசியல் பரிமாற்ற முறை) முறைகளில் ஈடுபட முயன்றால் அந்த மரியாதையைப் பேணுவது இயலாது போகின்றது. அதே நேரம் பாலியல் சலுகைகளைக் கோரும் வடிவிலான கட்டாயச் சுரண்டல் ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து பிரச்சார நிதி வளங்களுக்கான பெண்களின் அணுகலை மேலும் கட்டுப்படுத்துகின்றன. அரசியல் கட்சிகள் உட்பட நிறுவனங்கள் பெரும்பாலும் ஆண்களுக்கிடையிலான சமூக வலைப்பின்னல்கள் மூலம் செயற்படுகின்றன. இதில் வளங்கள் பெரும்பாலும் ஆண்களிடையே பரிமாறப்படுகின்றன. இதனால் பெண்கள் பிரச்சார நிதி மற்றும் முடிவெடுக்கும் செயன்முறைக்கான சட்டபூர்வமான அணுகலிலிருந்து விலக்கப்படுகிறார்கள் (Bjarnegård and Kenny 2016; Manuratne et al. 2024). இந்த அதிகார பூர்வமற்ற விதிமுறைகள் தொழில்நுட்ப ரீதியாக முறையான சட்டத்திற்கு வெளியில் இருந்தாலும் யாருக்கு ஆதரவு கிடைக்கும், யாருக்குக் கிடைக்காது என்பதை ஆழமாக வடிவமைத்தன. இதன் விளைவாக பெண்கள் போட்டியிடுவதற்காக தங்கள் தனிப்பட்ட

35 மேல் மாகாணத்தைச் சேர்ந்த அரசியல் ஆர்வலர், கொழும்பு மாவட்டம், 25 ஜூன் 2025.

சொத்துக்கள், தங்களின் சமூக நற்பெயர் மற்றும் தனிப்பட்ட உடல் ரீதியான உரிமையைக் கூட தியாகம் செய்ய வேண்டிய ஒரு அரசியல் நிலை உருவாகியுள்ளது.

### 5.1.3 அதிகாரப் பதவியில் பிரதிநிதித்துவத்தின் செலவு

பெண்களின் தேர்தல் பிரச்சாரங்களை நிர்ணயித்த நிதிசார் அழுத்தங்கள் தேர்தல்களுக்கு பிறகு குறையவில்லை. மாறாக அவை மேலும் அதிக சுமையுடன் அவர்கள் பதவிக்கு வந்த பிறகும் அவர்களை பின்தொடர்ந்தன. நேர்காணல்களானது, குறிப்பிடத்தக்க தொடர்ச்சியை வெளிப்படுத்தின. தேர்தல் பிரச்சாரங்களின் போது பெண்களை நகைகளை அடகு வைக்கவோ அல்லது கணவர்களைச் சார்ந்திருக்கவோ கட்டாயப்படுத்திய அதே கட்சி மற்றும் நிறுவன ஆதரவு பற்றாக்குறை இப்போது உறுப்பினர்களாக அவர்களின் அன்றாடப் பொறுப்புகளையும் வடிவமைத்தது. மக்களின் நம்பிக்கையைப் பெறவும் நிலைநிறுத்தவும் உறுப்பினர்கள் நேரடி பொருளாதார உதவிகளை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பலரின் அனுபவங்களில் மீண்டும் மீண்டும் வெளிப்பட்ட ஒரு கருப்பொருளாக இருந்தது. இது பொருளாதார ரீதியாக சிரமப்படும் குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பது, சிறுவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வாங்கித் தருதல், இறுதிச் சடங்குகளுக்கு நிதியளிப்பது போன்றவற்றை உள்ளடக்கியிருந்தது. இத்தகைய நடவடிக்கைகள் சமூக சேவையின் வடிவங்களைப் போலத் தோன்றினாலும் பல சபை உறுப்பினர்கள் அவை பொதுமக்களால் “கட்டாயமானவை” என்றும் தங்கள் பொறுப்பின் அத்தியாவசிய பகுதியாகவும் பார்க்கப்படுவதாக வலியுறுத்தினர்.[36] [37] உண்மையில் இவை இலங்கை அரசியல் சூழலில் ஒரு அங்கமாகவே இருந்து வருகின்றன. எனினும் அரசியல் கட்சிகள் எந்தவொரு நிதி ஆதரவையும் வழங்காததால் பெண்களே அந்தச் செலவுகளைத் தனிப்பட்ட முறையில் ஏற்க வேண்டியிருந்தது.

ஒரு நேர்காணலில் பங்கேற்றவர் தனது கணவரிடம் கடன் வாங்கியதாக விவரித்தார். கண்டியைச் சேர்ந்த மற்றொருவர் தேவையுள்ள சமூக உறுப்பினர்களுக்கு உதவுவதற்காக தனது சொந்த நகைகளை மட்டுமல்லாமல் தன் பிள்ளைகளின் நகைகளையும் அடகு வைத்ததாகத் தெரிவித்தார். தன்னால் திரும்பப் பெற முடியாத “பதினைந்து முதல் இருபது பவுண்கள் தங்கம்” இன்னும் வங்கியில் இருப்பதாக அவர் கூறி வருத்தப்பட்டார்.[38] அவர் தனது அனுபவத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறினார்:

“நாங்கள் சபைக்குள் நுழைந்தால் எல்லாவற்றையும் செய்துவிடலாம் என்று நினைத்தோம். ஆனால் உள்ளே பல சட்டங்களும் கட்டுப்பாடுகளும் உள்ளதால் நாங்கள் நினைப்பதைச்

36 பதுளை 014, பதுளை மாவட்டம், 17 ஜனவரி 2024.

37 மன்னார் 030, மன்னார் மாவட்டம், 07 ஜூன் 2024.

38 கண்டி 026, கண்டி மாவட்டம், 28 பெப்ரவரி 2024

செய்ய முடியாது. நாங்கள் எதையாவது செய்ய விரும்பினால் அமைச்சரை அணுக வேண்டும். நாங்கள் அமைச்சரின் கீழ் பணிபுரியும் மிகச் சிறிய நபர்கள மட்டுமே".[39]

இந்த அனுபவங்கள் தனியார் தொகுதியில் பெண்களின் பங்களிப்புகளுடன் Jayawardena (1986) நீண்ட காலமாக இணைத்துக் கூறிய பராமரிப்பு மற்றும் தியாகம் போன்ற பண்புகள் அரசியலுக்குள் எவ்வாறு மாற்றப்பட்டன என்பதை விளக்குகின்றன. அங்கு அவை மதிப்புமிக்க பங்களிப்பாகக் கருதப்படாமல் ஒரு நிதிச் சுமையாக மாறின. இந்தப் பெண்கள் மீது வைக்கப்பட்ட இந்த எதிர்பார்ப்புகள் ஆழமாகப் பாலின அடிப்படையில் அமைந்த பாகுபாடு கொண்ட முறைசாரா நிறுவனங்களில் வேரூன்றியுள்ளன.

அங்கு பெண்கள் பராமரிப்பு, தன்னலமற்ற தன்மை மற்றும் தார்மீகப் பொறுப்பு ஆகியவற்றை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பண்புகள் அரசியல் தளத்தில் பெண் பண்புகளாகக் கருதப்பட்டு மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றன. பெண்ணிய நிறுவனமயமாக்கம் இத்தகைய நெறிமுறைகள் முறையான பங்களிப்புகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதைக் காட்டுகின்றது. இது பெண்களின் அரசியல் பங்களிப்பின் மீது கண்ணுக்குத் தெரியாத ஆனால் உணரக் கூடிய உறுதியான பாலின அடிப்படையிலான செலவுகளை விதிக்கினறன என்பதை வெளிப்படுத்துகின்றது .

சபை உறுப்பினர்கள் முறைப்படி அதிகாரபூர்வமாக பதவியேற்ற பிறகும் இந்தச் சுமை குறையவில்லை. உண்மையில் அது பல்வேறு வழிகளில் தீவிரமடைந்தது. பதுளையைச் சேர்ந்த ஒரு முன்னாள் சபை உறுப்பினர் விளக்கியதாவது:

"எனக்கு எந்தவித நிதி உதவியும் கிடைக்கவில்லை. என் மனதில் பல திட்டங்கள் இருந்தன, ஆனால் அவற்றைச் செயற்படுத்த எனக்கு எந்த நிதி ஆதரவும் கிடைக்கவில்லை".[40]

அவரது வார்த்தைகள் பெண்கள் தங்கள் பொதுப் பொறுப்புக்களை மிகக் குறைந்த நிறுவக அல்லது கட்சி ஆதரவுடன் தனியாகச் செய்ய வேண்டியிருந்த ஒரு பரந்த விரக்தியைப் பிரதிபலித்தன. இவ்வாறு சபை உறுப்பினர் என்ற அதிகாரபூர்வமான பதவியானது கண்ணுக்கு எட்டாத ஆனால் உணரக் கூடிய பாலின அடிப்படையிலான செலவுகளை உட்படுத்தி பிரதிநிதித்துவத்தின் அடிப்படை நோக்கத்தையே குறைமதிப்பிற்கு உள்ளாக்குகிறது.

39 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

40 பதுளை 013, பதுளை மாவட்டம், 14 ஜனவரி 2024.

### 5.1.4 போதிய பயிற்சி மற்றும் நிறுவன ஆதரவின்மை

2018ஆம் ஆண்டு ஒதுக்கீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களில் பலர், முறையான அரசியல் அமைப்புகள் குறித்த குறைந்த அறிவு மற்றும் அனுபவத்துடன் முதல் முறையாக உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டனர். அரசியல் கட்சிகள் இந்த ஒதுக்கீட்டின் மூலம் அதிக எண்ணிக்கையிலான புதிய வேட்பாளர்களை நியமித்திருந்ததால், அவர்களுக்குப் போதுமான அரசியல் வழிகாட்டுதலையும் பயிற்சியையும் வழங்குவதற்கான பொறுப்பும் கட்சிகளுக்கு இருந்தது. உள்ளூராட்சி மன்ற நடைமுறைகள், முன்மொழிவு வரைவு, அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சட்ட மற்றும் நிர்வாகப் பொறுப்புகள் குறித்து முறையான வழிகாட்டுதல் இல்லாததால், பெண்கள் மிகக் குறைவான நிறுவன வழிகாட்டுதலுடன் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதற்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருப்பதை உறுதிசெய்வதற்குப் பதிலாக, பல அரசியல் கட்சிகள் பெண்களின் நியமனத்துடன் அவர்களின் பொறுப்பு முடிந்துவிடுவதாகக் கருதியதையே இது காட்டுகிறது. இதன் விளைவாக தங்கள் சொந்தக் கட்சிகள் வழங்கத் தவறிய திறன் மேம்பாட்டு ஆதரவிற்காக பலர் வெளி நிறுவனங்களை குறிப்பாக அரச சார்பற்ற அமைப்புக்களையும் நாடினர்.

இந்தத் தொடர்ச்சியான பயிற்சி இல்லாமை என்பது வெறும் நிர்வாகக் குறைபாடு மட்டுமல்ல மாறாக அது பெண்களின் உள்ளார்ந்த அரசியல் பங்களிப்பில் முதலீடு செய்ய நிறுவன ரீதியாக நிலவும் ஆழமான தயக்கத்தையே இது பிரதிபலிக்கிறது. பெண்களின் அரசியல் திறன்களில் அமைப்புரீதியாகக் குறைவாக முதலீடு செய்யப்படுவது என்பது பெண் உறுப்பினர்களை ஆட்சியை வடிவமைக்கக் கூடிய திறன் கொண்ட அதிகாரமிக்க செயற்பாட்டாளர்களாகக் கருதுவதற்கு பதிலாக ஒதுக்கீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் செயலற்ற வெறும் பெயரளவிலானவர்களாகவே நிலைநிறுத்துகிறது.

இந்தப் புறக்கணிப்பு தற்செயலானது அல்ல மாறாக அரசியல் கட்சிகளுக்குள் ஆழமாக வேரூன்றியிருக்கும் ஆணாதிக்கக் கட்டமைப்புகளின் விளைவு என்பதை பெண்ணிய நிறுவனமயமாக்கம் விளக்குகின்றது. பாலின அடிப்படையிலான நிறுவனங்களாகக் கருதப்படும் அரசியல் கட்சிகள் முறைசாரா அதிகார அமைப்புகள் மூலம் செயல்படும் ஆணாதிக்க நெறிமுறைகளைச் சுற்றியே கட்டமைக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்புகள் பெரும்பாலும் ஆதரவு தொடர்புகள் சலுகையளித்து வாக்குப் பெறும் அரசியல் மற்றும் ஆணாதிக்கத்திற்கு முன்னுரிமையளித்து பெண்களைத் தொடர்ந்து ஓரங்கட்டும் ஒரே பாலின சமூக வலையமைப்புகளால் இயக்கப்படுகின்றன (Bjarnegård and Kenny 2016; Lovenduski 2005). இவ்வாறு இட ஒதுக்கீடு (ஒரு முறையான அமைப்பு) பெண்களின் நுழைவை அரசியலிற்குள் நுழைவதை சாத்தியமாக்கிய போதிலும் முறையான பயிற்சி இல்லாமை, குறைந்த அரசியல் வெளிப்பாடு, மற்றும் உள்ளக முடிவெடுக்கும் செயன்முறைகளிலிருந்து

விலக்கப்படுதல் போன்ற முறைசாரா நிறுவன நடைமுறைகள் பெண்கள் உண்மையான அரசியல் செயற்பாட்டாளர்களாக உருவாகும் திறனைத் தொடர்ந்தும் தளர்த்துகின்றன.

முக்கியத் தகவலாளர் B அரசியல் கட்சிகளை "ஆணாதிக்கமிக்க, வன்முறைமிக்க, ஊழல் நிறைந்தவை" என்று விபரித்தார். தகவல் அளித்தவரின் கூற்றுப்படி, கட்சித் தலைமையை கேள்வி கேட்ட அல்லது நிறுவப்பட்ட படிநிலைகளை எதிர்த்த பெண்கள் பெரும்பாலும் "வெளியேற்றப்பட்டனர்" அல்லது "தேவையற்றவர்கள்" என்று முத்திரை குத்தப்பட்டனர். இதன் காரணமாக, அந்தத் தகவல் அளித்தவர் அரசியல் கட்சிகளை "பெண்களின் குரலுக்குச் செவிசாய்க்காத வழிபாட்டுக் குழுக்கள்" என்று வர்ணித்தார்.[41] இவ்வகையான விளக்கங்கள் பெண்களின் புறக்கணிப்பு என்பது பலவீனமான நிறுவன ஆதரவின் செயலற்ற பக்கவிளைவு மட்டுமல்லாமல் கட்சி கலாச்சாரங்களின் மூலம் செயற்படத் திணிக்கப்படும் ஒன்றாக இருப்பதை வெளிப்படுத்துகின்றன.

இதேபோல் முக்கியத் தகவலாளர்களான A[42] மற்றும் J[43] ஆகியோரும் இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் பெரும்பாலும் ஆண்களால் வழிநடத்தப்படும் நிறுவனங்களாக உள்ளன என்று குறிப்பிட்டனர். சில கட்சிகளில் பெண்கள் பிரிவுகள் இருந்தாலும் கூட அவை முடிவெடுக்கும் தளங்களில் பெண்கள் நுழைவதற்கு அரிதாகவே வழிவகுக்கின்றன. மாறாக பெண்கள் பெரும்பாலும் அடிப்படை ரீதியான பிரச்சாரம், பொதுக்கூட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் ஏற்பாட்டுப் பணிகள் போன்ற துணைநிலைப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படுகிறார்கள். இது கட்சிப் படிநிலைகளுக்குள் அவர்களின் ஓரங்கட்டப்பட்ட நிலையை மேலும் வலுப்படுத்துகிறது. கட்சிகள் "பெண்கள் சுயாதீனமாக சிந்திப்பதை விரும்புவதில்லை" என்றும் அதற்குப் பதிலாக அவர்கள் "தலைவரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்ற வேண்டும்" என்று எதிர்பார்க்கின்றன என இரு தகவலாளர்களும் வலியுறுத்தினர்.

உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள பெண்களுக்கு அடிக்கடி ஓரங்கட்டப்பட்ட வகிபாகங்கள் ஒதுக்கப்படுகின்றன என்றும் அவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான விடயங்களில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள் என்றும் முக்கியத் தகவலாளர் C மேலும் குறிப்பிட்டார். அதே நேரம் பொருளாதாரம், உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு போன்ற முக்கிய பிரச்சினைகளை ஆண் உறுப்பினர்கள் கவனித்துக்கொள்கிறார்கள்.[44] போதிய பயிற்சி இல்லாததையும் அதிகாரப்பூர்வமற்ற முறையில் பாலின அடிப்படையிலான பொறுப்புகளை ஒதுக்குவதையும் ஒன்றிணைப்பதன்

41 கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சமாதானம் மற்றும் பெண்கள் உரிமை ஆர்வலர், 25 அக்டோபர் 2023 (இணையவழி நேர்காணல்)

42 மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாலினச் சிறப்பு நிபுணர் மற்றும் அரசியல்வாதி, 06 நவம்பர். 2023.

43 வடமேல் மாகாண குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் உரிமை ஆர்வலர் மற்றும் பெண்கள் உரிமை அமைப்பின் பணிப்பாளர், 21 டிசம்பர். 2023.

44 மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் உரிமை ஆர்வலர், ஆய்வாளர் மற்றும் பெண்கள் உரிமை அமைப்பின் இணை நிறுவனர், 11 டிசம்பர். 2023.

மூலம் கட்சிகளும் சபைகளும் பாலின அடிப்படையிலான "சூழ்நிலைக்கேற்ற நடத்தை குறித்த தர்க்கம்" திறம்பட மீண்டும் உருவாக்குகின்றன. இது பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் கூட அவர்கள் செல்வாக்கு செலுத்தும் திறனைக் கட்டுப்படுத்துகிறது.

மொத்தத்தில் இந்த இயக்கங்கள் போதிய பயிற்சி இன்மை என்பது தனிப்பட்ட பிரச்சினை அல்லாது நிறுவன ரீதியான புறக்கணிப்பின் ஒரு பரந்த வடிவத்தின் ஒரு பகுதி என்பதனைக் காட்டுகிறது. ஒதுக்கீடுகள் போன்ற முறையான விதிமுறைகளின் மூலம் பெண்கள் அரசியல் தளங்களிற்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் முறைசாரா நடைமுறைகள் அவர்கள் உண்மையான அதிகாரம் பெறுவதற்குப் பதிலாக அடையாளப்பூர்வமாக மட்டுமே இருப்பதை உறுதி செய்கின்றன.

## 5.2 உள்ளூராட்சி மன்றங்களுக்குள் பாலினமயப்படுத்தப்பட்ட அதிகார இயக்கவியல்

பாலின ஒதுக்கீட்டின் அறிமுகம் உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் எண்ணிக்கைப் பிரதிநிதித்துவத்தை அதிகரித்திருந்தாலும், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்களின் வாழ்வியல் அனுபவங்கள், இந்த நிறுவனங்கள் இன்னும் ஆழமாகப் பாலினப் பாகுபாடு கொண்டவையாகவே இருக்கின்றன என்பதை நிரூபிக்கின்றன. நேர்காணல்கள் முழுவதும், பெண்கள் அரசியல் பதவிகளில் நுழைந்த பின்னரும், அதிகாரத்தைப் பயன்படுத்தும் தங்கள் திறனைத் தொடர்ந்து குறைமதிப்பிற்கு உட்படுத்திய புறக்கணிப்பு, அதிகார மறுப்பு மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றின் தொடர்ச்சியான வடிவங்களை விபரித்தனர். இவை தற்செயலானவை அல்ல. மாறாக, பெண்ணிய நிறுவனவாதிகள் "பொருத்தத்தின் பாலின தர்க்கம்" (Chappell 2006) என்று விபரிக்கும் ஒன்றைப் பிரதிபலிக்கின்றன. இதன் மூலம், தலைமைத்துவம், அதிகாரம் மற்றும் அரசியல் திறன் ஆகியவை ஆண்பாலுக்குரியதாகக் குறியிடப்படுகின்றன. அதேநேரத்தில் பெண்கள் திட்டமிட்டு ஓரங்கட்டப்படுகிறார்கள். பின்வரும் பிரிவுகள், இந்த பாலின அடிப்படையிலான நிறுவன இயக்கவியல் மீண்டும் உருவாக்கப்பட்ட ஒன்றோடொன்று தொடர்புடைய மூன்று வழிமுறைகளை ஆராய்கின்றன: மன்றங்களுக்குள் மௌனமாக்குதலும் புறக்கணித்தலும், ஒதுக்கீடுகள் மற்றும் பாலின முத்திரைகள் மூலம் அதிகார மறுப்பு, மற்றும் வளங்களுக்கான சமமற்ற அணுகல்.

### 5.2.1 மன்றங்களுக்குள் இடம்பெறும் ஒடுக்குமுறையும் புறக்கணிப்பும்

உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்கள், சபைகளுக்குள் அவர்களின் நுழைவு பெரும்பாலும் விரோதமான நிறுவன கலாச்சாரத்துடன் எதிர்கொள்ளப்படுவதாக தொடர்ந்தும் தெரிவித்தனர். அங்கு அவர்களின் இருப்பு விருப்பமின்றி ஏற்றுகொள்ளப்பட்டாலும் அவர்களின் குரல்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. கூட்டங்களின் போது தாங்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும், இடையூறு செய்யப்பட்டதாகவும் மற்றும் வெளிப்படையாக ஒடுக்கப்பட்டதாகவும் பலர்

விபரித்தனர். காலியைச் சேர்ந்த ஒரு மன்ற உறுப்பினர் தனது மாவட்டத்தில் தான் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர் சங்கத்தின் தலைவராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றியபோதிலும் இந்தத் தலைமைப் பொறுப்பு இருந்தபோதிலும் அவரும் மற்ற பெண்களும் ஆண் சக உறுப்பினர்களால் வழக்கமாகக் குரல் உயர்த்தப்பட்டு அடக்கப்பட்டதாகவும் அல்லது உட்காரச் சொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார். இதன் மூலம் பங்குபற்றலுக்கான சம வாய்ப்புகள் அவர்களுக்கு முற்றிலும் மறுக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தினார். மற்றொரு மன்ற உறுப்பினரும் இதே அனுபவத்தை பிரதிபலித்து பின்வருமாறு குறிப்பிட்டார்:

“சபையில் ஒரு பெண் உறுப்பினராகப் பேசுவது அதற்குரிய தனிப்பட்ட சவால்களைக் கொண்டிருந்தது.”[45]

பெண் உறுப்பினர்கள் முன்வைக்கும் முன்மொழிவுகளை குறிப்பாக பாலர் பாடசாலை வசதிகள் தொடர்பான அடிப்படைச் சேவைகள் ஆண் அரசியல்வாதிகளால் முன்மொழிபவரின் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு தொடர்ந்து நிராகரிக்கப்பட்டன என்பதை அவர் விபரித்தார்.[46] முக்கியத் தகவலாளர் F இந்தக் கருத்தை உறுதிப்படுத்தி பெண் உறுப்பினர்கள் அடிக்கடி வாய்மொழித் துஷ்பிரயோகத்திற்கும் மிரட்டலுக்கும் உள்ளாக்கப்படுவதை குறிப்பிட்டதோடு பின்வரும் விடயங்கள் கூறப்படுவதாகவும் குறிப்பிட்டார். அதாவது “நீங்கள் ஒதுக்கீட்டின் மூலம் வந்தவர்கள். அதனால் உங்கள் வாயை மூடுங்கள்”[47] என்பது போன்ற கருத்துக்களைக் கூறினார்.

இந்த அனுபவங்கள் அறிஞர்கள் “பாலினமயமான பொருத்தத்தின் தர்க்கம்” (Chappell 2006). என்று விபரிப்பதைப் பிரதிபலிக்கின்றன. பாரம்பரியமாக ஆண்களாக இருக்கும் அரசியல்வாதிகள் பாலினமும் பாலியல்பும் ஒன்றோடொன்று இணைந்தவை எனக் கருதி நீண்ட காலமாக செயற்பட்டு வருகின்றனர். அதாவது ஆண்கள் இயல்பாகவே பகுத்தறிவுள்ளவர்களாகவும், அதிகாரம் மிக்கவர்களாகவும், ஆட்சி செய்யத் தகுதியானவர்களாகவும் பார்க்கப்படுகிறார்கள். அதேசமயம் பெண்கள் மென்மையானவர்களாகவும் பிறரைச் சார்ந்திருப்பவர்களாகவும், அல்லது துணைப் பங்கு வகிப்பதற்கு மட்டுமே பொருத்தமானவர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள் (Lovenduski 2005). இந்தத் தர்க்கத்தின்படி பெண் உறுப்பினர்கள் பேசுவதற்கான அல்லது புதிய திட்டங்களை முன்வைப்பதற்கான தங்கள் உரிமையைப் பயன்படுத்த முயன்றபோது அவர்கள் ஆழமாக வேரூன்றிய நெறிமுறைகளை மீறியவர்களாகக் கருதப்பட்டனர். மேலும் இதன் விளைவாக அவர்கள் ‘நெறிமுறைகளை மீறுபவர்கள்’ என்று அடையாளப்படுத்தப்பட்டு அவர்களை மீண்டும் மௌனத்திற்குள் தள்ளும் வகையில் கேலி, வாய்மொழித் துஷ்பிரயோகம் மற்றும் நடைமுறை ரீதியான புறக்கணிப்பு ஆகியவற்றின் மூலம் ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கு உள்ளாக்கப்பட்டனர். இத்தகைய “ஆழமாக வேறூன்றிய பாலின நெறிமுறைகள்” தொடர்ந்து

45 பதுளை 013, பதுளை மாவட்டம், 14 ஜனவரி. 2024.

46 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

47 ஊவா மாகாண பதுளை மாவட்டத்தில் உள்ள ஒரு சிவில் சமூக அமைப்பின் பணிப்பாளர், 14 ஜனவரி 2024.

நீடிப்பதால் (Chappell 2006) இட ஒதுக்கீட்டின் மூலம் பெண்கள் உள்ளூராட்சி மன்றங்களில் நுழைந்தது ஏன் தானாகவே சமமான பங்களிப்பாக மாறவில்லை என்பதை விளக்குகின்றது. மாறாக அவர்களின் இருப்பே அரசியலின் ஆண்கள் இயல்பான உரிமையுடைய ஆட்சி அதிகாரிகளாக தொடர்ந்தும் கருதப்படும் நிறுவனமயமாக்கப்பட்ட படிநிலைகளைச் சவாலுக்கு உட்படுத்துகிறது (Chappell and Waylen 2013).

இந்தப் பெண்கள் அனுபவித்த பாகுபாடானது வாய்மொழித் துன்புறுத்தல் மற்றும் வழக்கமான மதிப்பிழப்பு ஆகியவற்றைத் தாண்டி நிறுவன நடைமுறைகளிலும் நீடித்தது. மேல் மாகாணத்தில் நடந்த வரவுசெலவுத் திட்ட விவாதங்களில் பெண்களுக்குப் பேசுவதற்கு வெறும் மூன்று நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் ஆண்களுக்கு ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வரை அனுமதிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். பெண்களுக்கு அனுபவம் இல்லை என்றும் அவர்களால் பெரிதாக எதையும் பங்களிக்க முடியாது என்றும் பரவலாக நிலவிய அனுமானத்தின் அடிப்படையிலேயே இந்தச் சமமற்ற அணுகுமுறை அமைந்திருந்தது. இது “பாலின அடிப்படையிலான பொருத்தத்தின் தர்க்கம்” என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகும். இது அதிகாரம் மற்றும் முடிவெடுக்கும் திறனை இயல்பாகவே ஆண்களுக்குரிய பண்புகளாக நிலைநிறுத்தி பெண்களை ஓரங்கட்டும் நிறுவன எதிர்பார்ப்புகளையும் நெறிமுறைகளையும் கொண்ட ஒரு தொகுப்பாகும் (Chappell 2006). இந்த தர்க்கமானது பரந்த சமூக நம்பிக்கைகளில் ஆழமாக வேரூன்றியுள்ளது. முக்கியத் தகவலாளிகள் F மற்றும் A ஆகியோரின் கூற்றுகளில் முறையே பிரதிபலிப்பது போல, பெண்களிடம் “அரசியல் என்பது ஆண்களுக்கானது”[48] என்று அடிக்கடி கூறப்பட்டதோடு, அவர்கள் “உணர்ச்சிவசப்படுபவர்கள்” அல்லது “பலவீனமானவர்கள்” என்றும், அதனால் தலைமைத்துவத்திற்குத் தகுதியற்றவர்கள் என்றும் ஒரே மாதிரியாகச் சித்தரிக்கப்பட்டனர்.[49]

இந்தப் புறக்கணிப்பு அன்றாட மன்ற செயன்முறைகள் மற்றும் உட்கட்டமைப்புகளிலும் நீடித்திருந்தது. ஒரு சபை உறுப்பினர் அவர்களது சபையில் பெண் உறுப்பினர்களுக்கென தனி கழிப்பறைகள் இல்லை என்று விளக்கினார். அவர் மேலும் கூறுகையில்,

“ஒரு பெண் கழிப்பறையைப் பயன்படுத்த வேண்டுமென்றால், ஒரு ஆண் உறுப்பினர் பயன்படுத்தி முடிக்கும் வரை அவர் காத்திருக்க வேண்டும். மேலும் பாதுகாப்பிற்காக கதவருகில் மற்றொரு பெண்ணை நியமிக்க வேண்டும்” என்றார்.[50]

ஒரு சாதாரண நிர்வாகக் குறைபாடாகத் தோன்றும் இந்நிலைமை உண்மையில் நிறுவனங்கள் எவ்வாறு உடல் சார்ந்த முறையில் ஆண்களின் வசதிக்கும் பங்கேற்புக்கும் முன்னுரிமை அளிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதையும் அரசியல் தளங்களின்

48 ஊவா மாகாண பதுளை மாவட்டத்தில் உள்ள ஒரு சிவில் சமூக அமைப்பின் பணிப்பாளர், 14 ஜனவரி 2024.

49 மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாலினச் சிறப்பு நிபுணர் மற்றும் அரசியல்வாதி, 06 நவம்பர் 2023.

50 காலி 024, காலி மாவட்டம், 13 மார்ச் 2024.

உட்கட்டமைப்பிலேயே புறக்கணிப்பு எவ்வாறு உட்பொதித்துள்ளன என்பதையும் விளக்குகிறது (Chappell 2006, 225).

நிறுவன ரீதியான தடைகள் மேலும் இலக்கு வைக்கப்பட்ட வடிவங்களிலும் வெளிப்பட்டன. ஒரு சபை உறுப்பினர் குறைந்த வருமானம் கொண்ட ஒரு குடும்பம் பயன்படுத்திய பொது நீர்க்குழாய் தொடர்பான ஒரு நிகழ்வை விபரித்தார். சமூகமே ஒன்றாகக் கூடி நீர்க் கட்டணத்தைச் செலுத்தியிருந்தாலும் அந்தக் குடும்பத்தின் தொடர்ச்சியான பயன்பாட்டைப் பாதுகாத்து உறுதிப்படுத்துவதற்காக அவர் அந்த ஏற்பாட்டை அதிகாரபூர்வமாக்க முயன்றார். இருப்பினும் ஆண் சபை உறுப்பினர் ஒருவர் தலையிட்டு அவரது இந்த முயற்சியைத் தடுத்தார். இந்த நிறுவன ரீதியான தடையின் விளைவாக அந்தக் குழாய் இறுதியில் மூடப்பட்டது.[51] மற்றொருவர், ஒரு மேம்பாட்டுத் திட்டத்திற்கு நிதி கிடைத்தவுடன் தனது பெயர் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக ஒரு ஆண் சக உறுப்பினரின் பெயர் சேர்க்கப்பட்டதை விபரித்தார்.[52] இத்தகைய செயல்கள் பாலினப் பாகுபாடு அன்றாட நிறுவன நடைமுறைகள் மூலம் எவ்வாறு செயற்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகின்றன (Chappell 2006). இத்தகைய செயல்கள் வெளிப்படையாகச் சிறியதாகத் தோன்றினாலும் தொடர்ச்சியாக நிகழும் இந்தத் தடைகள் சேர்ந்து, சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்ய பெண்கள் முயற்சிக்கும்போது கூட அவர்கள் இந்த அமைப்பிற்குள் சமமான பங்கேற்பாளர்கள் அல்ல என்பதை அவர்களுக்கு உணர்த்துகின்றன.

பெண்கள் தங்கள் சபைகளுக்குள் மகளிர் குழுக்களை அமைக்க முயன்றபோது கூட எதிர்ப்பு வெளிப்பட்டது. இத்தகைய குழுக்கள் பிரதேச செயலகம் போன்ற உயர் அதிகாரிகளால் பெரும்பாலும் அங்கீகரிக்கப்பட்ட போதிலும் ஆண் உறுப்பினர்கள் அவை தேவையற்றவை எனக் கூறி அடிக்கடி எதிர்த்தனர்.[53] உள்ளூராட்சி மன்றங்களில் முடிவெடுப்பதிலும் நிர்வாகத்திலும் சபை குழுக்கள்[54] ஒரு முக்கியப் பங்கை வகிக்கின்றன. என்றாலும் 2018 இற்கு முன்னர் எந்தவொரு மன்றத்திலும் பாலினம் சார்ந்த பிரச்சினைகளை எடுத்துரைக்கும் பிரத்தியேகக் குழு எதுவும் இருக்கவில்லை. பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரித்ததைத் தொடர்ந்து பல பெண் உறுப்பினர்கள் அத்தகைய குழுக்களை அமைக்க வலியுறுத்தத் தொடங்கினர். ஆனால் இந்த முயற்சிகள் தொடர்ந்தும் எதிர்ப்பைச் சந்தித்தன. காலியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர் அத்தகைய ஒரு குழுவை அமைக்க அவர் சந்தித்த சிரமங்களை விபரித்தார்.

51 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

52 மன்னார் 031, மன்னார் மாவட்டம், 07 ஜூன் 2024.

53 காலி 024, காலி மாவட்டம், 13 மார்ச் 2024.

54 உள்ளூராட்சி மன்றங்கள், நிதி, பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், சுகாதாரம், கழிவு மேலாண்மை, வணிக நிலம் போன்ற நிர்வாகத்தின் முக்கியப் பகுதிகளை மேற்பார்வையிடும் பொறுப்புள்ள நிலைக்குழுக்கள் அமைப்பின் மூலம் செயற்படுகின்றன. இக்குழுக்கள் நியமிக்கப்பட்ட ஒரு தலைவரால் வழிநடத்தப்படுகின்றன, மேலும் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இரண்டிலிருந்தும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்றன. மன்றத்தின் வகை மற்றும் அளவைப் பொறுத்து குழுக்களின் எண்ணிக்கை மாறுபடும்.

இருப்பினும் அவர் இறுதியில் வெற்றி பெற்றார். அவரது இந்த முயற்சிக்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்த மற்றொரு உறுப்பினர் பாராட்டுத் தெரிவித்து இவ்வாறு குறிப்பிட்டார்.

“இந்தக் குழுவின் மூலம் ஆண் சபை உறுப்பினர்களால் செய்ய முடியாத பணிகளை அவரால் செய்து முடிக்க முடிந்தது” என்று குறிப்பிட்டார்.[55]

இதே போன்ற எதிர்ப்பு மொரட்டுவ மாநகர சபையிலும் காணப்பட்டது. அங்கு ஆண் உறுப்பினர்கள் ஒரு பாலினம் சார்ந்த தனிக் குழுவின் தேவையைக் கேள்விக்குள்ளாக்கினர். ஆண் உறுப்பினர்களும் பெண்களின் பிரச்சினைகளைக் கையாள்வதில் சமமான திறன் கொண்டவர்கள் என்றும் இந்தப் பிரச்சினைகளை தற்போதுள்ள எந்தக் குழுவின் கீழும் கையாள முடியும் என்றும் அவர்கள் வாதிட்டனர். இந்தச் சூழலில் ஒரு தனி மகளிர் குழு நிறுவப்படாத நிலையில் ஏற்கனவே இருந்த பொதுப் பயன்பாட்டு சேவைகள் குழுவின் பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் சேர்க்கப்பட்டனர். இது பெண்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற முழுமையான நிறுவன அங்கீகாரத்திற்குப் பதிலாக ஒரு பகுதி மற்றும் பேச்சுவார்த்தை மூலம் கிடைத்த சமரசத்தையே பிரதிபலித்தது.

ஒரு நேர்காணல் பங்கேற்பாளர் குறிப்பிட்டது போல மகளிர் குழுக்கள், பெண் உறுப்பினர்கள் சபைக்குள் தங்கள் செல்வாக்கை வலுப்படுத்திக்கொள்ள வழிவகுக்கும் என்ற கவலைகளிலேயே இத்தகைய எதிர்ப்பு பெரும்பாலும் வேரூன்றியிருந்தது.[56] இருப்பினும் இத்தகைய குழுக்களை அமைப்பதற்கான முயற்சிகளை எதிர்கொண்டபோது பல்வேறு சபைகளிலும் மாகாணங்களிலும் உள்ள ஆண் உறுப்பினர்கள் காட்டிய எதிர்ப்பு மிக ஒத்த தன்மையுடன் இருந்தன. இத்தகைய ஒத்த தன்மையுடைய எதிர்ப்பானது ஒதுக்கீடுகள் அல்லது மகளிர் குழுக்கள் போன்ற முறையான நிறுவன சீர்திருத்தங்கள் முறையான சமத்துவ நடவடிக்கைகளுக்கு முரணாக இருப்பதோடு பெண்களின் அரசியல் பங்குபற்றலையும் பங்களிப்பையும் மதிப்பிழக்கச் செய்யும் ஆழமாக வேரூன்றிய முறைசாரா நெறிமுறைகளால் அடிக்கடி பலவீனப்படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டுகிறது (Helmke and Levitsky 2006).

மாவட்டங்கள் மற்றும் சபைகள் முழுவதும் காணப்படும் இந்த மௌனமாக்கல் அல்லது ஓரங்கட்டல் முறைகள், நடைமுறை ரீதியான ஓரங்கட்டுதல், உடல்ரீதியான புறக்கணிப்பு, நிறுவன ரீதியான தடை, மற்றும் சீர்திருத்தங்களுக்கு எதிரான எதிர்ப்பு ஆகியவை இந்த சவால்கள் தனிப்பட்ட நிகழ்வுகள் அல்ல மாறாக அவை நிறுவனக் பண்பாட்டில் ஆழமாக வேறூன்றிய அமைப்பு சார்ந்த மற்றும் கட்டமைப்பு ரீதியான பிரச்சினைகள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இவை அனைத்தும் ஒன்றுசேர்ந்து Lovenduski (2011) விபரித்தபடி

55 காலி 023, காலி மாவட்டம், 17 ஜனவரி 2024.

56 கொழும்பு 019, கொழும்பு மாவட்டம், 22 நவம்பர் 2023.

நிறுவனங்களுக்குள் ஒரு "பாலின ஆட்சிமுறை" உருவாவதை விளக்குகின்றன. இங்கு ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையிலிருக்க பெண்கள் கட்டமைப்பு ரீதியாகப் பாதகமான ஒரு சூழலில் பயணிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

### 5.2.2 ஒதுக்கீடுகள் மற்றும் அடையாளப் பெயர்கள் மூலம் சட்டபூர்வமற்ற தன்மையை உருவாக்குதல்

நிறுவன ரீதியான மௌனமாக்கலுக்கு அப்பால் பெண் உறுப்பினர்கள் அரசியலில் தங்கள் இருப்பை நம்பகத் தன்மையற்றதாக்குவதற்கான திட்டமிட்ட முயற்சிகளையும் எதிர்கொண்டனர். அவர்கள் அடிக்கடி "பட்டியல் நபர்கள்" என்று குறிப்பிடப்பட்டனர். இதன் மூலம், அவர்களின் தெரிவுசெய்யப்பட்டமை தகுதியற்றது என்றும், அது அவர்களின் சொந்த அரசியல் திறன்கள் அல்லது தெரிவுசெய்யப்பட்டமை சட்டபூர்வத்தன்மையால் அல்லாமல், ஒதுக்கீட்டு முறையால் மட்டுமே சாத்தியமானது என்றும் உணர்த்தப்பட்டது. மேலும், பெண் உறுப்பினர்கள் வேட்புமனுக்களைப் பெறுவதற்காக[57] "பாலியல் இலஞ்சம்" வழங்கியதாக அடிக்கடி குற்றம் சாட்டப்பட்டதையும் முக்கியத் தகவல் அளிப்பவர் J வெளிப்படுத்தினார். இத்தகைய குற்றச்சாட்டுகள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாக அவர்களின் நம்பகத்தன்மையையும் சட்டபூர்வத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு வகையான நற்பெயரை சீர்குலைக்கும் வடிவமாக அமைந்தன. இந்த இயக்கவியலானது Franceschet and Piscopo's (2008) என்போரின் கருத்துப்படி, "குறிச்சொல் விளைவு" (label effect) என்ற கருத்தை ஒத்ததாகும். அதன்படி ஒதுக்கீடுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் குறைந்த திறமை வாய்ந்தவர்களாகவோ அல்லது சுயமாகச் செயல்படும் திறன் இல்லாத "பதிலாள் வேட்பாளர்களாகவே" பார்க்கப்படுகிறார்கள் (Kanold 2020).

அரசியல் நிறுவனங்களில் நீண்டகாலமாக நிலவி வரும் குடும்ப அரசியல், ஊழல் மற்றும் பரம்பரை அரசியல் போன்றவை பெரும்பாலும் ஆண் அரசியல்வாதிகளுடன் தொடர்புடைய பண்புகளாக இருந்தாலும் இந்தக் கருத்துக்கள் இன்னும் முரண்பாடாகத் தொடர்கின்றன. ஆயினும் ஒதுக்கீடுகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் மட்டுமே கடுமையான ஆய்வுக்கு உள்ளானார்கள். முக்கியத் தகவலாளர் A குறிப்பிடுவதாவது,

"ஒரு தலைவராக வேண்டுமென்றால் நீங்கள் ஒரு பெரிய ஆளுமையுடன் மிகவும் வலிமையான ஆணாக இருக்க வேண்டும். பெண்களால் ஒரு நல்ல வேலை செய்ய முடியாது"[58]

புதிதாக வரும் ஆண்கள் பெரும்பாலும் மூத்த கட்சி உறுப்பினர்களால் வழிகாட்டப்பட்டுப் பாதுகாக்கப்படும் நிலையில் பெண்கள் தொடர்ந்து தங்கள் தகுதியை நிரூபிக்க வேண்டிய

57 வடமேல் மாகாணத்தைச் சேர்ந்த பெண்கள் உரிமை ஆர்வலர் மற்றும் பெண்கள் உரிமை அமைப்பின் பணிப்பாளர், குருநாகல் மாவட்டம், 21 டிசம்பர் 2023.

58 மேல் மாகாணத்தைச் சேர்ந்த பாலின நிபுணர் மற்றும் அரசியல்வாதி, கொழும்பு மாவட்டம், 06 நவம்பர் 2023.

கட்டாயத்தில் உள்ளனர். இந்த ஏற்றத்தாழ்வு அரசியல் நிறுவனங்களின் ஆழமான பாலினப் பாகுபாட்டை விளக்குகிறது. இங்கு ஒதுக்கீடுகள் மூலம் முறையான சேர்க்கை முறை இருந்தபோதிலும் முறைசாரா நெறிமுறைகளும் பாரபட்சங்களும் பெண்களைத் தொடர்ந்து ஓரங்கட்டுகின்றன.

மேலும் பாலியல் சார்ந்த கலந்துரையாடல்கள் இந்தப் பெண் அரசியல்வாதிகளை சட்டபூர்வமற்றவர்களாகக் காட்டும் செயல்முறையை மேலும் வலுப்படுத்தின. 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பிறகு குறிப்பாக கவனிக்கத்தக்க ஒரு உதாரணமாக 'ஹன்சி மந்திரி' (හාන්සි මන්ත්‍රී)[59] என்ற இழிவான பட்டப்பெயரின் பயன்பாடாகும். இந்தப் பதமானது பெண்கள் தங்கள் தகுதியின் அடிப்படையில் அல்லாமல் பாலியல் சலுகைகள் மூலமாகவே வேட்புமனுக்களைப் பெற்றனர் என்று குறிப்பிட்டது. இது கடின உழைப்பின் மூலம் தங்கள் இடத்தைப் பெற்றதாகக் கருதப்பட்ட 'மகன்சி மந்திரி' (මහන්සි මන්ත්‍රී) என்று அழைக்கப்படுபவர்களுடன் அவர்களை வேறுபடுத்திக் காட்டியது. ஆண் அமைப்பாளர்கள் இந்த கலந்துரையாடலைத் திட்டமிட்டு பயன்படுத்தி பெண் உறுப்பினர்களின் நம்பகத்தன்மையைக் குறைக்கவும், மற்றவர்கள் அவர்களைப் பாதுகாப்பதைத் தடுக்கவும், அவர்களின் அரசியல் இருப்பு சட்டவிரோதமானது என்ற கருத்தை இயல்பாக்கவும் செய்தனர். கட்சித் தலைவர்கள் இதுபோன்ற வற்புறுத்தல் நடைமுறைகளை அறிந்திருந்தாலும் இவை மௌனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பெரும்பாலும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருப்பதாகவும் நேர்காணல் பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டனர்.[60]

நேர்காணலில் பங்கேற்ற பெண் அரசியல்வாதிகள் தாங்கள் பாலியல் ரீதியான சலுகைகளுக்காக அணுகப்பட்டதாகத் தெரிவிக்கவில்லை. என்றாலும் கட்சி அமைப்புகளுக்குள் இத்தகைய பாலியல் வற்புறுத்தல்கள் பரவலாக இருப்பதாகவும் அவை பெரும்பாலும் கட்சித் தலைவர்களால் கவனிக்கப்படாமல் விடப்படுவதாகவும் முக்கியத் தகவலாளர்கள் குறிப்பிட்டனர். "ஹன்சி மந்திரி" போன்ற பாலியல் சார்ந்த அவமதிப்புச் சொற்கள் பெண்களின் அரசியல் பங்குபற்றலை ஒழுக்கமற்றதாகக் காட்டும் மறைமுகக் குறிப்புகள் மூலம் அவர்கள் சட்டபூர்வமற்றவர்களாக காட்டப்படுவதை வெளிப்படுத்துகின்றன. என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த நிலைமை சில பெண்கள் தாமே பாலியல் துஷ்பிரயோகம் குறித்த பிரச்சினையை விபரித்த விதத்திலும் பிரதிபலித்தது. ஒரு பெண் உறுப்பினர், "அரசியலில் உள்ள பெண்கள் எதிர்கொள்ளக்கூடிய மற்றொரு பிரச்சினை பாலியல் துஷ்பிரயோகம்" என்பதை ஒப்புக்கொண்டாலும் பெண்கள் "தங்கள் நேர்மையையும் நன்மதிப்பையும்" பேணுவதும் "பண சலுகைகளால் ஈர்க்கப்படுவதைத்"[61] தவிர்ப்பதுமே அதற்கான தீர்வு என்று குறிப்பிட்டார். இந்த

59 இந்த இழிவான சொல்லுக்கு நேரடிப் பொருள் "முதுகுப்புறமாக படுத்தல்" என்பதாகும். இது, தங்களது சொந்தத் தகுதியின் மூலம் அல்லாமல், கட்சி அமைப்பாளர்களுடன் பாலியல் சலுகைகளைப் பரிமாறிக்கொள்வதன் மூலம் அரசியல் பிரவேசம் பெற்றதாகக் கருதப்படும் பெண் அரசியல்வாதிகளை நோக்கிப் பயன்படுத்தப்படுகிறது.

60 மேல் மாகாணத்தைச் சேர்ந்த அரசியல் ஆர்வலர், கொழும்பு மாவட்டம், 25 ஜூன் 2025.

61 பதுளை 014, பதுளை மாவட்டம், 17 ஜனவரி 2024.

அணுகுமுறை பல விடயங்களை உணர்த்துகிறது. பாலியல் துன்புறுத்தலுக்கான சுரண்டலைத் தடுப்பதற்கான பொறுப்பை ஆண் குற்றவாளிகள் மீதோ அல்லது அரசியல் நிறுவனங்கள் மீதோ சுமத்துவதற்குப் பதிலாக இது பிரச்சினையைப் பெண்களின் நடத்தை மற்றும் ஒழுக்கத்திற்குள் தள்ளுகின்றது. பெண்ணியல்வாத நிறுவனமயமாக்க கண்ணோட்டத்தில் இத்தகைய கருத்துக்கள் அதன் விளைவுகளை அனுபவிப்பவர்களிடம் கூட "பாலின அடிப்படையிலான பொருத்தத்தின் தர்க்கம்" எவ்வளவு ஆழமாக உள்வாங்கப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கின்றன. பெண்கள் தூய்மை மற்றும் கட்டுப்பாடு போன்ற ஒரு தரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அதே நேரத்தில் ஆண்களின் வற்புறுத்தும் நடத்தை சாதாரணமாகக் கருதப்பட்டு கவனிக்கப்படாமலோ அல்லது கட்சி அமைப்புகளுக்குள் மறைமுகமாக ஏற்றுக்கொள்ளப்படாமலோ விடப்படுகின்றது. இந்தப் பிரச்சினையைத் தனிப்பட்டதாக்குவதன் மூலமும் பெண்கள் சோதனைகளை எதிர்த்து நிற்க வேண்டும் என்று பரிந்துரைப்பதன் மூலமும் பெண்களைப் பாதுகாப்பதற்கும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும் கட்சிகளுக்கு உள்ள அமைப்பு சார்ந்த பொறுப்பு மறைக்கப்படுகிறது. இது ஆணாதிக்க அதிகார உறவுகளை வலுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு எதிராக நிறுவனப் பொறுப்புக்கூறலைக் கோருவதற்கான பெண்களின் வாய்ப்பையும் கட்டுப்படுத்துகிறது.

அதேபோல் விகிதாசாரப் பட்டியல் முறை மூலம் பதவிக்கு வந்த பெண்கள் "பின் மந்திரி" (පින් මන්ත්‍රී)[62] என்று இழிவாக அழைக்கப்பட்டனர். இந்த சொல் அவர்கள் உண்மையான அரசியல்வாதிகள் அல்ல மாறாக பெயரளவில் நியமிக்கப்பட்டவர்கள் என்ற அர்த்தத்தைக் குறிப்பதாகும். பெண்களின் பங்குபற்றலை விரிவுபடுத்தும் நோக்கில் ஒதுக்கீடுகள் கொண்டுவரப்பட்ட போதிலும் அவை எவ்வாறு அவர்களின் அதிகாரத்தை மதிப்பிழக்கச் செய்வதற்கான ஒரு காரணமாக அமைந்தன என்பதை இந்த பெயரிடல்கள் பிரதிபலிக்கின்றன. பெண்ணிய நிறுவனமயமாக்க கண்ணோட்டத்தில் இத்தகைய கலந்துரையாடல்கள் முறைசாரா நிறுவனங்கள் எவ்வாறு ஆண் ஆதிக்கத்தை நிலைநிறுத்தச் செயற்படுகின்றன என்பதை விளக்குகின்றன. பெண்கள் முறையாகப் பதவிக்கு வந்திருந்தாலும் கூட அவர்களின் அதிகாரத்தை மதிப்பிழக்கச் செய்யும் மொழியின் மூலம் அவர்கள் தொடர்ந்தும் பலவீனப்படுத்துகின்றனர்.

நியமன நடைமுறைகள் இந்த புறக்கணிப்பை மேலும் வலுப்படுத்தின. கட்சி அமைப்பாளர்கள் அடிப்படை மட்ட அரசியல் அனுபவமுள்ள பெண்களை விட மனைவிகள், மகள்கள் அல்லது செல்வந்த உறவினர்களை முன்னுரிமையுடன் தேர்ந்தெடுத்தனர். இதன் அர்த்தம் ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதற்காக பல பெண்கள் குறியீட்டு வேட்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

62 இழிவான முறையில் பயன்படுத்தப்படும் இந்தச் சொல் தோராயமாக "இலவசமாகப் பயனடைபவர்கள்" என்று மொழிபெயர்க்கப்படுகிறது. இது தங்கள் சொந்த முயற்சி அல்லது தகுதியின் மூலம் அல்லாமல், "நல்ல கர்மா" அல்லது சாதகமான சூழ்நிலைகள் காரணமாக அரசியலில் நுழைந்ததாகக் கருதப்படும் பெண் அரசியல்வாதிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

அதே நேரத்தில் உண்மையான முடிவெடுக்கும் அதிகாரம் ஆண்களிடம் இருந்தது. மேலும் சில சந்தர்ப்பங்களில் வெற்றி பெற்ற பெண்கள் மீண்டும் போட்டியிடுவதிலிருந்து தடுக்கப்பட்டனர். ஏனெனில் அவர்கள் ஆண் தலைவர்களை விட மேலோங்கக் கூடும் என்று அமைப்பாளர்கள் பயந்தனர். இந்த நடைமுறைகள் ஒதுக்கீடுகள் முறையாக உள்ளடக்கியதாக இருந்தாலும், ஆணாதிக்க நுழைவுக் கட்டுப்பாடுகள் மூலம், அவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதனைக் காட்டுகின்றன. இதன்மூலம் பெண்களின் சுயாட்சி கட்டுப்படுதப்பட்டு அரசியல் நிறுவனங்களுக்குள் அவர்கள் சார்ந்திருப்பதை வலுப்படுத்துகின்றது.

### 5.2.3 வளங்களுக்கான சமமற்ற அணுகல்

வளங்களுக்கான சமமற்ற அணுகல் தேர்தல் பிரச்சாரக் கட்டத்தைத் தாண்டி பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும் தங்களுடைய பங்குகளை திறம்படச் செய்யும் திறனை தொடர்ந்தும் வடிவமைத்தது. இந்த ஏற்றத்தாழ்வுகளில் பல கட்சி அமைப்புகளுக்குள் உருவான போதிலும், அவை உள்ளூராட்சி மன்றங்களிலும் மீண்டும் உருவாக்கப்பட்டன. அங்கு முறையான நடைமுறைகளும் முறைசாரா பழக்கவழக்கங்களும் ஆண் உறுப்பினர்களுக்குச் சாதகமாக ஒன்றோடொன்று கலந்தன. இதன் விளைவாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகத் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி மற்றும் பொருள் வளங்களைப் பெறுவதைக் கட்டுப்படுத்தும் கூடுதல் நிறுவன ரீதியான தடைகளை பெண்கள் எதிர்கொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்குள் அபிவிருத்தி நிதிகள் ஒதுக்கப்படுவதில் இந்த ஏற்றத்தாழ்வுகள் குறிப்பாகத் தெளிவாகக் காணப்பட்டன. மத்திய அல்லது மாகாண அரசாங்கங்களால் ஒதுக்கப்படும் அபிவிருத்தி நிதிகள், பெரும்பாலும் தலைவரின் விருப்பத்திற்கேற்ப விநியோகிக்கப்படுவதாக கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு மன்ற உறுப்பினர் விளக்கினார். இந்த நடைமுறை ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குச் சாதகமாகவும், எதிர்க்கட்சி உறுப்பினர்களை, அவர்களில் பலர் பெண்களாக இருந்தவர்களை, ஓரங்கட்டுவதாகவும் இருந்தது. மொரட்டுவ மாநகரசபை உள்ளூராட்சி மன்றத்தில், பெரும்பாலான நிதிகள் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆண்களுக்கே சென்றன. அதே சமயம், உள்ளூராட்சி மன்ற ஆண் உறுப்பினர்கள் பெற்ற மிகப் பெரிய தொகைகளுடன் ஒப்பிடுகையில், பெண்களுக்கு ஐந்து முதல் பத்து இலட்சம் வரையிலான குறைவான ஒதுக்கீடுகள் மட்டுமே கிடைத்தன. பெரிய அளவிலான திட்டங்களை நிர்வகிக்கும் திறன் பெண்களுக்கு இல்லை என்ற பரவலான கருத்தே இந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிப்படையாக இருந்தது. இந்த ஒருதலைப்பட்சமான பார்வை, அவர்களுக்கு நிதி கிடைப்பதைக் குறைத்தது மட்டுமல்லாமல், அவர்களின் அரசியல் முக்கியத்துவத்தின் எல்லையையும் கட்டுப்படுத்தியது[63]. உள்ளூராட்சி மன்றங்களுக்குள் அபிவிருத்தி நிதிகள் கிடைத்தபோதிலும், அவை உள்ளூராட்சிமன்ற பெண்

63 கொழும்பு 019, கொழும்பு மாவட்டம், 22 நவம்பர் 2023

உறுப்பினர்களுக்கு அரிதாகவே ஒதுக்கப்பட்டதாக மற்றொரு மன்ற உறுப்பினர் தனது அனுபவத்தை குறிப்பிட்டார்.[64]

இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் அமைப்பு ரீதியானவை என்பதை முக்கியத் தகவலாளர்கள் உறுதிப்படுத்தினர். முக்கியத் தகவலாளர் C-யின் கூற்றுப்படி, ஆண் உறுப்பினர்களுடன் ஒப்பிடும்போது பெண் உறுப்பினர்கள் தங்கள் திட்டங்களுக்கு மிகக் குறைவான நிதியையே பெற்றனர். மேலும் சில சந்தர்ப்பங்களில், பெண்களின் திட்ட முன்மொழிவுகள் ஆண் உறுப்பினர்களால் நேரடியாகவே நிராகரிக்கப்பட்டன அல்லது அபகரிக்கப்பட்டன. இது அவர்களின் பணியையும் நம்பகத்தன்மையையும் சீர்குலைத்தது. வளங்களுக்கான இந்த வரையறுக்கப்பட்ட அணுகல், பெண்கள் பெரும்பாலும் சிறிய, அவ்வளவாக வெளிப்படாத திட்டங்களை மேற்கொள்வதற்குக் கட்டுப்படுத்தப்பட்டனர் என்பதைக் குறித்தது. முரண்பாடாக, இந்த வெளிப்படாமை, "பெண்கள் வேலை செய்வதில்லை" அல்லது அவர்கள் தங்கள் பணிகளில் செயலற்றவர்கள்[65] என்ற தீங்கு விளைவிக்கும் ஒரே மாதிரியான கருத்துக்களை வலுப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. நிறுவன ரீதியான புறக்கணிப்பு, பெண்களின் அரசியல் இயலாமை குறித்த சுய-வலுவூட்டும் கதைகளை எவ்வாறு உருவாக்கியது என்பதை இது விளக்குகிறது: பெண்கள் வெளிப்படையான திட்டங்களை மேற்கொள்வதற்குத் தேவையான வளங்கள் மறுக்கப்பட்டன, அதன் விளைவாக அவர்கள் வெளிப்படாமல் போனது, அவர்கள் திறமையற்ற பிரதிநிதிகள் என்பதற்குச் சான்றாக மேற்கோள் காட்டப்பட்டது.

இருப்பினும், எல்லா உள்ளூராட்சி மன்றங்களும் இந்த விலக்குதல் முறையைப் பின்பற்றவில்லை. சிலாப நகரமன்றத்தின் ஒரு பிரதிநிதி, தனது மன்றத்தில் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு பதிலாகப் பிரிவு வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் ஒரு சமத்துவமான அணுகுமுறையை விபரித்தார். இந்த அமைப்பு, ஆண், பெண் என இருபாலரிடமும் ஒத்துழைப்பை ஊக்குவித்ததுடன், உள்ளகப் போட்டியையும் மோதலையும் கணிசமாகக் குறைத்தது.[66] இத்தகைய எடுத்துக்காட்டுகள், விலக்கு நடைமுறைகள் தவிர்க்க முடியாதவை அல்ல, மாறாக வள ஒதுக்கீட்டை நிர்வகிக்கும் நிறுவன ஏற்பாடுகளைச் சார்ந்தவை என்பதைக் காட்டுகின்றன. வெளிப்படையான மற்றும் சமத்துவமான நடைமுறைகளின்படி வளங்கள் விநியோகிக்கப்பட்டபோது, பாலின அடிப்படையிலான விலக்கலுக்கான வாய்ப்புகள் கணிசமாகக் குறைந்தன.

வளங்களை அணுகுவதில் உள்ள இந்த அசமத்துவம் மாவட்டங்கள் முழுவதிலும் பிரதிபலித்தது. அதாவது புத்தளத்தைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், ஆரம்பத்தில் கிடைத்த கட்சி

64 காலி 023, காலி மாவட்டம், 17 ஜனவரி 2024

65 மேற்கு மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பெண்கள் உரிமை ஆர்வலர், ஆய்வாளர் மற்றும் பெண்கள் உரிமை அமைப்பின் இணை நிறுவனர், 11 டிசம்பர் 2023

66 புத்தளம் 035, புத்தளம் மாவட்டம், 28 நவம்பர் 2023.

ஆதரவானது காலப்போக்கில் குறைந்து தன்னை ஓதுக்கப்பட்ட நிலையில் விட்டுவிட்டதாகக் குறிப்பிட்டார்:

“தற்போது, அவர்களிடமிருந்து எங்களுக்கு எந்த ஆதரவும் கிடைக்கவில்லை. மேலும், தங்களுடைய கட்சியில் பெண் உறுப்பினர்கள் இருப்பதை அவர்கள் நினைவில் வைத்திருக்கின்றார்களா என்பது தொடர்பிலும் இது கேள்வி எழுப்புகிறது.”[67]

இந்த அனுபவம் தனிப்பட்டதல்ல. முக்கியத் தகவலாளர் C குறிப்பிடுகையில், பெண்கள் தங்களை நிலைநிறுத்திக் கொள்வதில் பெரும்பாலும் இரட்டைப் போராட்டத்தை எதிர்கொள்கின்றனர் அவர்கள் மன்றத்தின் படிநிலை அமைப்புகளையும் கட்சி வலையமைப்புகளையும் ஒருங்கே கையாள வேண்டியுள்ளது. அந்தத் தகவலாளர் இந்தச் சூழலை “அரசியல் கட்சிகளுக்குள் நடக்கும் ஒரு போராட்டம்” என்று விபரித்தார். மேலும், கட்சி அமைப்புகளில் “ஆண்களின் குழு” மனப்பான்மையே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகிறது என்றும், அங்கு ஆண் தலைவர்களே செல்வாக்கையும் வளங்களையும் பெறுவதற்கான வழியைத் தீர்மானிக்கும் “தொடர்புகள், இணைப்புகள், ஆணையாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள்” போன்ற அத்தியாவசிய வலையமைப்புகளைக் கட்டுப்படுத்துகிறார்கள் என்றும் அவர் விளக்கினார்.[68]

பெண்களுக்கு வளங்களை அணுகுவதில் உள்ள சமத்துவமின்மை, அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டையும் தாண்டி, அரசியல் வாழ்க்கையைத் தக்கவைக்கும் தொழில்முறை மேம்பாட்டு வாய்ப்புகளையும் பாதித்தது. கண்டியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், ஜப்பானில் நடந்த மேயர் மாநாட்டிற்குத் தான் அழைக்கப்பட்டதை விபரித்தார். ஆனால், செலவுகளை ஏற்றுக் கொண்ட தனது சர்வதேச சகாக்களைப் போலல்லாமல், அவர் அந்தப் பயணத்திற்குத் தானே நிதியளிக்க வேண்டியிருந்தது. இதற்கு மாறாக, அந்த மாநாட்டில் கலந்துகொண்ட அவரது சபையின் ஆண் தலைவர், கட்டுமானத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதன் மூலம் பெறப்பட்ட முறைசாரா தரகுப் பணம் வழியான நிதியைச் சார்ந்திருந்தார். நிறுவன ஊழலும், முறைசாரா நிதி வலையமைப்புகளுக்கான அணுகலும், பெண்களுக்கு பெரும்பாலும் எட்டாத வாய்ப்புகளை உருவாக்கி, ஆண்களுக்கு எவ்வாறு திட்டமிட்டு சாதகமாக அமைகின்றன என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.[69]

பெண்ணிய நிறுவனமயமாக்கத்தின் கண்ணோட்டத்தில் நோக்கும் போது கட்சி அமைப்புகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிய இரண்டிலும் உள்ள முறைசாரா நெறிமுறைகள், வெளிப்படையாக சொல்லப்படாத அடுக்கமைவுகள் மற்றும் பாலின அடிப்படையிலான அதிகாரக் கட்டமைப்புகள் ஆகியவை எவ்வாறு பாலின அடிப்படையிலான படிநிலைகளைத் தீவிரமாகச் செயற்படுத்துகின்றன என்பதை இந்த சம்பவங்கள் விளக்குகின்றன. மேலும்

67 புத்தளம் 036, புத்தளம் மாவட்டம், 28 நவம்பர் 2023.

68 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

69 கண்டி 027, கண்டி மாவட்டம், 28 பெப்ரவரி 2024

அவை ஆணாதிக்கத்தைப் பாதுகாத்து உண்மையான செல்வாக்கையும் அதிகாரத்தையும் பெறுவதற்கான பெண்களின் வாய்ப்பைக் கட்டுப்படுத்துகின்றன (Chappell and Waylen 2013). பதவியைப் பெற்ற பிறகும் பெண்கள் பெரும்பாலும் "பாலின அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே" (Bjarnegård and Kenny 2016) இருக்கிறார்கள். அதாவது அவர்கள் முறையான பதவிகளில் இருந்தாலும் முடிவெடுப்பதிலும் வளங்களைப் பெறுவதிலும் ஓரங்கட்டப்பட்டவர்களாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டாலும், ஒதுக்கப்பட்டவர்களாகவுமே இருக்கிறார்கள். இந்த முறைசாரா நெறிமுறைகளும் புறக்கணிக்கும் நடைமுறைகளும் எதிர்க்கப்படும் வரை பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மாற்றத்தை ஏற்படுத்தாமல் அடையாளமாகவே/குறியீடாகவே இருக்கும் (Kanold 2020; Zetterberg 2009).

## 5.3 குடும்பம் மற்றும் சமூகத்திற்குள் அரசியல் பேச்சுவார்த்தை

அரசியல் கட்சிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அப்பால், பெண்கள் வாழ்ந்த பரந்த சமூகச் சூழலாலும் அவர்களின் அரசியல் பங்களிப்பு வடிவமைக்கப்பட்டது. இலங்கையில், பாலினப் பாத்திரங்களையும் எதிர்பார்ப்புகளையும் ஒழுங்குபடுத்துவதில் குடும்பமும் சமூகமும் தொடர்ந்து மைய வகிபாகத்தை கொண்டிருக்கின்றன. இட ஒதுக்கீடு பெண்களின் அரசியல் பதவிகளுக்கான முறையான அணுகலை விரிவுபடுத்திய போதிலும், அவர்களின் பங்களிப்பு, அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குள் இருந்த எதிர்பார்ப்புகளுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. அங்கு ஆணாதிக்க நெறிகளே பெண்களுக்கான பொருத்தமான பாத்திரங்களைத் தொடர்ந்து வரையறுத்தன. முறையான அரசியல் அமைப்புகளை சமாளிப்பதுடன் இணைந்து பெண்கள் இந்த எதிர்பார்ப்புகளையும் கையாள வேண்டியிருந்தது. இதனால் பரவலாக ஆண்களின் ஆதிக்கத்தில் உள்ளதாகக் கருதப்படும் ஒரு அரசியல் தளத்தில் தங்கள் இருப்பை அவர்கள் அடிக்கடி நியாயப்படுத்த வேண்டியிருந்தது. எனவே, அரசியலில் நுழைவது பெண்களை சமூகத்தால் விதிக்கப்பட்ட பாலின வகிபாகங்களைக் கடந்து செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கியது. இது அவர்களைக் கடுமையான கண்காணிப்பு, எதிர்ப்பு மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு உள்ளாக்கியது. இந்த அழுத்தங்கள் பொது மற்றும் தனிப்பட்ட இரு தளங்களிலும் செயல்பட்டன: சமூகங்களுக்குள், பெண்களின் அரசியல் பங்கேற்பு அடிக்கடி கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அதே சமயம், குடும்பத்திற்குள் அவர்கள் பாரம்பரியமான வீட்டு மற்றும் பராமரிப்புப் பொறுப்புகளைத் தொடர்ந்து நிறைவேற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டனர்.

பின்வரும் பகுதிகள் இந்த இயக்கவியல் குறித்து ஆய்வு செய்கின்றன. முதலாவது பெண்கள் சமூகங்களுக்குள் எதிர்கொள்ளும் எதிர்ப்பு மற்றும் எதிர்பார்ப்புகளின் வடிவங்கள். இரண்டாவதாக அரசியல் வாழ்க்கையை குடும்பப் பொறுப்புகளுடன் சமநிலைப்படுத்துவதில் பெண்கள் எதிர்கொள்ளும் பதற்றங்கள்.

### 5.3.1 சமூக எதிர்பார்ப்புகளையும் கண்காணிப்புகளையும் கையாளுதல்

பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கான எதிர்ப்பு இட ஒதுக்கீடு அமுல்படுத்தப்படுவதற்கு முன்பே தெளிவாகத் தெரிந்தது. இட ஒதுக்கீடு தொடர்பான பாராளுமன்ற விவாதங்கள் பெரும்பாலும் எதிர்ப்புப் போக்கால் நிரம்பியிருந்தன. பாராளுமன்ற உறுப்பினர்கள் அதன் அவசியத்தை வெளிப்படையாகக் கேள்விக்குள்ளாக்கினர் (Kodikara 2023). இந்தப் பின்னணியில் வேட்புமனுத் தாக்கல் செயல்முறையின் போதும் அதற்குப் பின்னரும் சமூக மட்டத்தில் பெண்களின் அரசியல் பிரவேசம் சந்தேகத்துடனும் கேலியுடனும் எதிர்கொள்ளப்பட்டமை ஆச்சரியமான விடயமொன்றல்ல. உதாரணமாக Kodikara (2023) அவர்கள் முஸ்லிம் மதகுருவான நியாஸ் மௌலவி, முஸ்லிம் பெண் வேட்பாளர்களுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்களை தொடுக்கும் ஒரு காணொளியை சமூக ஊடகங்களில் பரப்பியதை ஆவணப்படுத்துகிறார். பரவலாகப் பகிரப்பட்ட மற்றொரு காணொளியில் ஒருவர் தனது பசுவைக் காணவில்லை என்று கூற மற்றொருவர் 25% இட ஒதுக்கீடு காரணமாக அந்தப் பசு வேட்புமனு தாக்கல் செய்யச் சென்றிருக்க வேண்டும் என்று பதிலளிக்கிறார். இது பெண்களின் அரசியல் பங்குபற்றல் எந்த விதங்களில் இழிவாக்கப்பட்டு அதன் சட்டப்பூர்வத் தன்மை மறுக்கப்பட்டது என்பதைப் பிரதிபலிக்கிறது.

இத்தகைய மனப்பான்மைகள் இணையத்தளங்கள் அல்லது தொலைதூர பார்வையாளர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக பெண்களின் சொந்த சமூகங்களுக்குள்ளும் காணப்பட்டன. அங்கு எதிர்ப்பு பெரும்பாலும் கலாச்சார மற்றும் மத நெறிமுறைகளில் வேரூன்றியிருந்தது. உதாரணமாக அரசியல் பதவியேற்ற பின் ஒரு உறுப்பினர், சபைத் தலைவர் இறுதியில் தங்கள் பங்களிப்புகளை அங்கீகரித்த போதிலும் மற்ற ஆண் உறுப்பினர்கள் அவர்களின் பாலின அடிப்படையில் அவர்களைத் தொடர்ந்தும் புறக்கணித்ததாகக் குறிப்பிட்டார்.[70]

சபை மண்டபங்களுக்குள் காணப்பட்ட இத்தகைய மனப்பான்மைகள் அவர்களின் தொகுதிகளிலும் பிரதிபலித்தன. அங்கு பெண்கள் தங்கள் அரசியல் பணிகளில் தொடர்ந்து எதிர்ப்பையும் புறக்கணிப்பையும் எதிர்கொண்டனர். பல உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் உள்ள பெரியவர்கள் அரசியலில் பெண்களின் பங்குபற்றலை எவ்வாறு எதிர்த்தார்கள் என்பதை விபரித்தனர். ஒரு உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்:

“பெண்களிடமிருந்தே ஆதரவு இல்லாததால் இந்த சவால் மேலும் தீவிரமடைந்தது, ஏனெனில் பலர் பெண்கள் அரசியலில் நுழைவதை எதிர்த்தனர்.”[71]

70 மட்டக்களப்பு 016, மட்டக்களப்பு மாவட்டம், 15 நவம்பர் 2023.

71 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

தேர்தலின் போது தனது பகுதியில் 2,000 - 3,000 பெண் வாக்காளர்கள் இருந்தபோதிலும் ஒரு பெண் வேட்பாளர் வெறும் 300 வாக்குகளை மட்டுமே பெற்றதாக அவர் விபரித்தார்.[72] பெண்கள் ஏனைய பெண்களுக்கு வாக்களிக்காத இந்த நிகழ்வானது முக்கிய தகவலாளர்களுடனான நேர்காணல்களின் போதும் குறிப்பிடப்பட்டது. முக்கியத் தகவலாளர் E அரசியல் என்பது பெண்களுக்கு ஒரு விரும்பத்தகாத களம்[73] என்ற பொதுமக்களின் கருத்துடன் இதைத் தொடர்புபடுத்திய அதே வேளை முக்கியத் தகவலாளர் A பெண்கள் இயல்பாகவே குறைந்த திறன் கொண்டவர்கள் என்ற பொதுவான நம்பிக்கையே இதற்குக் காரணம் என்று கூறினார்.[74]

இந்தக் குறிப்புகள் சமூக மட்டத்திலான மனப்பான்மைகள் எவ்வாறு பாலின அடிப்படையிலான அடுக்கமைவுகளை மீண்டும் உருவாக்குகின்றன என்பதை விளக்குகின்றன. இந்த இயக்கவியலை உள்ளார்ந்த பெண் வெறுப்பு என்ற கருத்தின் மூலம் புரிந்துகொள்ள முடியும்.

உள்ளார்ந்த பெண் வெறுப்பு என்பது பெண்கள் ஆண்களுக்கு முன்னுரிமையளித்து பெண்களை ஓரங்கட்டும் ஆணாதிக்க நெறிமுறைகளைப் உள்வாங்கி அவற்றைத் தாமே மீண்டும் உருவாக்கும்போது ஏற்படுகிறது. இதன் மூலம் அவர்கள் தங்களின் சொந்த அடக்குமுறையை திரும்பவும் வலுப்படுத்துகிறார்கள் (Findlay and Piggott 2005). இதன் விளைவாக, இந்த இயக்கவியல் பெண்களின் வளங்கள், தலைமைப் பதவிகள் மற்றும் முடிவெடுக்கும் இடங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துகிறது (Evteeva, Burges and Gelabert 2024).

தற்போதுள்ள ஆய்வுகளிலிருந்து உள்ளார்ந்த பெண் வெறுப்பு என்பது ஒரு தனி நபர் குறைபாடு அல்ல மாறாக பாலின அடிப்படையிலான நிறுவனங்களுக்குள் வாழ்வதாலும் அவற்றைக் கையாள்வதாலும் உருவாகும் ஒரு கட்டமைப்பு ரீதியான விளைவு என்பது தெளிவாகிறது. Evteeva, Burges and Gelabert (2024) வலியுறுத்துவது போல, பெண்களால் ஆணாதிக்க நெறிமுறைகள் மீண்டும் உருவாக்கப்படுவது நிறுவன சமூகமயமாக்கலின் அதிகாரத்தைப் பிரதிபலிக்கிறது. இதில், அந்த அமைப்பால் பாதிக்கப்பட்டவர்களே கூட அதை நிலைநிறுத்திப் பாதுகாக்கவும் செய்கின்றார்கள். இந்தக் கண்ணோட்டத்தின் மூலம் பெண் அரசியல்வாதிகள் மீதான பெண்களின் அவநம்பிக்கையும், ஆண் ஆதிக்கம் செலுத்தும் நெறிகளுக்கு இணங்கிப்போகும் அவர்களின் போக்கும் நிறுவனங்களுக்குள் “பாலின ஆட்சியை” வலுப்படுத்தும் ஒரு பரந்த செயன்முறையின் பகுதியாகக் கருதப்படலாம் (Lovenduski 2011).

72 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

73 மேல் மாகாணத்தைச் சேர்ந்த பாலின மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவதில் நிபுணத்துவம் பெற்ற ஆய்வு ஆலோசகர், 28 அக்டோபர் 2023 (இணையவழி நேர்காணல்)

74 மேல் மாகாண கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாலின நிபுணர் மற்றும் அரசியல்வாதி, 06 நவம்பர் 2023.

முஸ்லிம் உறுப்பினர்களைப் பொறுத்தவரை இந்தச் சவால்களானது மத மற்றும் கலாச்சார எதிர்பார்ப்புகளுடன் ஒன்றிணைந்து, ஓரங்கட்டப்படுதலின் கூடுதல் அடுக்கமைவுகளை உருவாக்கின. பலர் தங்களின் அரசியல் பிரவேசம் குறித்து குறிப்பிடும் போது ஒரு பெண்ணின் இடம் வீடுதான் அவள் தனது கணவரையும் குடும்பத்தையும் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய மதத் தலைவர்களிடமிருந்து வதந்திகள் மற்றும் அப்பட்டமான எதிர்ப்புகளை சந்தித்ததாக குறிப்பிட்டார்.[75] ஆனாலும் காலப்போக்கில் சில சமூகங்கள் அவர்களின் தலைமைத்துவத்தின் பயன்களை உணர்ந்து அவர்களை ஏற்றுக்கொள்ளத் தொடங்கின. தென் மாகாணத்தைச் சேர்ந்த மற்றொரு முஸ்லிம் உறுப்பினர் இதே போன்ற ஒரு அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். மதத் தலைவர்கள் “அரசியல் என்பது பெண்களுக்கு ஏற்ற இடமல்ல” என்று கூறி, அவர் அரசியலில் ஈடுபடுவதை எதிர்த்தபோதிலும் அவரது இருப்பு தங்களுக்கு பயனளிக்கும் என்று நம்பியதால் முழு சமூகமே அவரை ஆதரித்தது என்று அவர் குறிப்பிட்டார்.[76] இந்தக் குறிப்புகள் கலாச்சார மற்றும் மத நெறிமுறைகளுடன் இணையும்போது பாலினப் பாகுபாடு எவ்வாறு தீவிரமடைகிறது என்பதைக் காட்டி பலதுறை இணைக்கப்பட்ட அணுகுமுறையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன (Kenny 2007).

தேர்தல் இயக்கவியலைத் தாண்டி, சமூக மட்டத்தில் காணப்படும் எதிர்ப்பும் உறுப்பினர்கள் தங்கள் அன்றாடப் பணிகளை எவ்வாறு மேற்கொண்டனர் என்பதை வடிவமைத்தது. பல கிராமங்களில் குடும்ப வன்முறை, போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சிறுவயது கர்ப்பம் போன்ற பிரச்சினைகளுக்கான உதவிக்காக பெண் சமூக உறுப்பினர்கள் தங்களை அணுகியதாக பெண்கள் தெரிவித்தனர். அரச அதிகாரிகளிடமிருந்து நேரடியாக உதவி பெற முடியாத அல்லது விரும்பாத பெண்கள், பெண் பிரதிநிதிகளை அணுகுவதையே மிகவும் வசதியாக உணர்ந்ததாக ஒரு உறுப்பினர் விளக்கினார். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிசெய்ய, சபை உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வார்கள்.

என்றாலும் சில ஆண்கள் இந்த தொடர்புகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசியல் செயற்பாட்டாளர்களுடன் ஈடுபடுவதற்குப் பதிலாக தங்கள் மனைவிகள் “வீட்டிலேயே இருந்து, சமைத்து, துணி துவைக்க வேண்டும்” என்று வலியுறுத்தியதாகவும் இந்த உறுப்பினர் குறிப்பிட்டார்.[77] இந்த எதிர்ப்புகள் பெண்களின் பொதுத்தள அதிகாரத்தைப் பற்றிய விரிவான கலாச்சார அச்சங்களையும் ஆண்களின் மேற்பார்வைக்கு வெளியே உருவாகும் பாலின அடிப்படையிலான ஆதரவு வலையமைப்புகளையும் வெளிப்படுத்துகின்றன.

75 கேகாலை 041, கேகாலை மாவட்டம், 13 மே 2024.

76 காலி 024, காலி மாவட்டம், 13 மார்ச் 2024.

77 காலி 023, காலி மாவட்டம், 17 ஜனவரி 2024.

இந்த அனுமானங்களை சவாலுக்கு உட்படுத்துவது தங்களது அரசியல் பங்கின் அங்கமாக அமைந்துள்ளதாக அந்த உறுப்பினர் வலியுறுத்தினார். மேலும் “நாங்கள் வீதிகளை அமைக்கவும் அல்லது விளக்குகளைச் சரிசெய்யவும் மட்டும் சபைக்குள் நுழையவில்லை, மாறாக கிராமத்தில் உள்ள பிரச்சினைகளைக் கண்டறியவும் பெண்களுக்கு ஆதரவளிக்கவும் அவர்களைப் பிரதேச செயலகத்துடன் இணைக்கவும் நுழைந்தோம்” என்றும் குறிப்பிட்டார்.[78] மொத்தத்தில் ஒழுக்கநெறி கண்காணிப்பிலிருந்து அவர்களின் சமூகத் தொடர்புகளைக் கண்காணிப்பது வரை இந்தப் பெண்கள் எதிர்கொண்ட ஒட்டுமொத்த எதிர்ப்பு, கலாச்சார நெறிமுறைகள் பெண் உறுப்பினர்களின் அரசியல் சட்டபூர்வத்தன்மை மற்றும் செயற்திறனை மட்டுமல்லாமல் மற்ற பெண்கள் தங்கள் சமூகங்களுக்குள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தும் திறனையும் எவ்வாறு கட்டுப்படுத்துகின்றன என்பதை நிரூபிக்கிறது.

தங்கள் சமூகங்களுக்குள் பெண்களின் தொடர்புகளை வடிவமைத்த தார்மீகக் கண்காணிப்பானது, அவர்கள் பொதுவெளியில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளும் விதத்திலும் நீடித்தது. நேர்காணல் செய்யப்பட்ட பல பெண்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்குள் நுழைந்த பிறகு “தொழில்முறை”யாகத் தோன்றுவதற்காகத் தங்கள் தோற்றத்தை எவ்வாறு கவனமாக நிர்வகித்தார்கள் என்பதைப் பற்றி விரிவாகப் பேசினர் அவர்களில் பலர் வெள்ளை அல்லது வெளிர் நிறப் புடவைகளை அணியத் தேர்ந்தெடுத்தனர். ஒரு மன்ற உறுப்பினர், அவர்கள் “விகாரைக்குச் செல்வது போல”[79] உடை அணிவதாக விளக்கினார். இது, கண்ணியமும் பொது அங்கீகாரமும் ஒரு குறிப்பிட்ட வகையான பெண்மை சார்ந்த தோற்றத்துடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தன என்பதைச் சுட்டிக்காட்டியது.

இது ஒரு வகையான சுய-கட்டுப்பாடாகத் தோன்றினாலும், அரசியலில் பெண்களுக்கான பொருத்தமான நடத்தை எது என்பதை வரையறுக்கும் பரந்த, முறைசாரா பாலின நெறிமுறைகளால் இத்தகைய நடைமுறைகள் வடிவமைக்கப்படுகின்றன என்று நிறுவனவாதப் பெண்ணியம் குறிப்பிடுகிறது. பெண்கள் தங்கள் தோற்றத்தை ஒழுங்குபடுத்துவது என்பது தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமல்ல, மரியாதைக்குரிய மற்றும் சட்டப்பூர்வமான பொதுப் பிரதிநிதிகளாகக் கருதப்படுவதற்கு பெண் அரசியல்வாதிகள் எப்படித் தோற்றமளிக்க வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றிய எதிர்பார்ப்புகளுக்கு இணங்கவும் அமைகிறது. பல பெண்களுக்கு, அரசியல் அங்கீகாரம் என்பது உறுப்பினர்களாக தங்கள் கடமைகளைச் செய்யும் திறனுடன் மட்டுமல்லாமல், கலாச்சார ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்மை, அடக்கம் மற்றும் கண்ணியம் ஆகிய கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனுடனும் பிணைக்கப்பட்டிருந்தது என்பதை நேர்காணல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

78 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

79 கண்டி 028, கண்டி மாவட்டம், 25 அக்டோபர் 2023

இது நேர்காணல்களில் தெளிவாகத் தெரிந்தது. இரத்தினபுரியைச் சேர்ந்த ஒரு உறுப்பினர், ஒரு "நடிகை"[80] போலத் தோற்றமளிப்பதை விட, ஒரு தொழில்முறைத் தோற்றத்தைப் பராமரிக்கவே விரும்புவதாக விளக்கினார். உறுப்பினர்களை நடிகைகளுடன் ஒப்பிட்டு, கண்ணியம் மற்றும் கவர்ச்சிக்கு இடையேயான பரந்த சமூக வேறுபாடுகளை அவர் சுட்டிக்காட்டினார். அரசியலில் உள்ள பெண்கள் ஒரு குறிப்பிட்ட வகையான அடக்கமான பெண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். மேலும், முறையாக ஆடை அணிவது பொது ஊழியர்களாகத் தங்களின் பங்கை பிரதிபலிப்பதாகவும், "தேவையற்ற குடும்ப மோதல்களை" தவிர்க்க உதவுவதாகவும் அவர் வாதிட்டார். இது, பெண்களின் அரசியல் பங்களிப்பு தொடர்ந்து குடும்பம் மற்றும் சமூகத்தின் எதிர்பார்ப்புகளின் கண்ணோட்டத்தில் மதிப்பிடப்படுவதைக் குறிக்கிறது.

இந்தக் கண்டுபிடிப்புகளை, பெண்களின் கண்ணியம் குறித்த பரந்த தெற்காசியக் கட்டமைப்புகளுக்குள்ளும் புரிந்துகொள்ள முடியும். பெண்களின் கண்ணியம் என்பது பெரும்பாலும் அடக்கம், நற்பண்பு மற்றும் ஒழுக்கம் ஆகிய இலட்சியங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. புடவை போன்ற பாரம்பரிய உடைகள் இந்தக் குணங்களின் வெளிப்படையான அடையாளமாக விளங்குகின்றன (Jayawardena 2002, De Alwis 1994). ஒரு பெண் அரசியல்வாதி தன்னை எவ்வாறு வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்து விவாதிக்கும்போது, பெண்கள் புடவையைத் தவிர வேறு எந்த உடை வடிவங்களையும் அரிதாகவே கருத்தில் கொண்டதால், இது நேர்காணல்களில் தெளிவாகத் தெரிந்தது. Obeyesekere (1984/1987) "lajja-baya" (வெட்கம்-பயம்) என்று விபரிக்கும் ஒரு செயல்முறையின் மூலமாகவும் இந்தக் கண்டுபிடிப்புகளை விளக்கலாம். இது, சமூகத் தீர்ப்பு மற்றும் அதிருப்தியை எதிர்பார்த்து, இலங்கையர்கள் தங்கள் நடத்தையை ஒழுங்குபடுத்தப் பழக்கப்படுத்தப்படும் ஒரு செயல்முறையாகும். இது ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் பொருந்தும் என்றாலும், பொது வாழ்வில் நுழையும் பெண்கள் பெரும்பாலும் தீவிரமான கண்காணிப்புக்கும் ஆய்விற்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்றும், இதனால் நற்பெயர் பற்றிய கவலைகள் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகின்றன என்றும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்த விளக்கம், நடைமுறையில் உள்ள பாலின அடிப்படையிலான பொருத்தமான நடத்தைக்கான தர்க்கங்களுக்கு இணங்கத் தவறுபவர்கள் பெரும்பாலும் நெறிபிறழ்ந்தவர்களாகக் கருதப்பட்டு, கேலிக்கும் சமூகத் தடைக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற Chappell and Waylen's (2013) வாதத்துடன் ஒத்துப் போகிறது. இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, அடக்கமான மற்றும் மரியாதைக்குரிய உடைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை, வெறும் தனிப்பட்ட விருப்பத்தின் விடயமாக மட்டும் பார்க்காமல், பெண்கள் விமர்சனங்களைத் தவிர்ப்பதற்கும், அரசியல் மற்றும் சமூகச் சூழல்களில் தங்கள் நம்பகத்தன்மையை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் பயன்படுத்தும் ஒரு உத்தியாகப் புரிந்துகொள்ளலாம்.

80 இரத்தினபுரி 040, இரத்தினபுரி மாவட்டம், 31 அக்டோபர் 2023

முக்கியமாக, இந்தக் கவலை தனிப்பட்ட நற்பெயரைப் பற்றியது மட்டுமல்ல. பெண்களைப் பொறுத்தவரை, நற்பெயரால் ஏற்படும் பாதிப்பு பெரும்பாலும் தனிநபரைத் தாண்டி, குடும்பத்தின் கௌரவம் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றைப் பாதிக்கிறது என்று அறிஞர்கள் வாதிட்டுள்ளனர் (De Alwis 2002; de Silva 2005; Hewamanne 2008). நேர்காணல் செய்யப்பட்ட பெண்களில் சிலர், தங்கள் தோற்றத்தை குடும்ப மோதல்களைத் தவிர்ப்பதோடு தொடர்புபடுத்தியதற்கான காரணத்தை இது விளக்கக்கூடும். பொதுவெளியில் அவர்களின் நடத்தையும் தோற்றமும் தனிப்பட்ட அரசியல்வாதிகளாக மட்டுமல்லாமல், தங்கள் குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் பிரதிநிதிகளாகவும் மதிப்பிடப்படுகின்றன என்ற ஒரு விழிப்புணர்வை அவர்களின் கருத்துக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

சுவாரஸ்யமாக, புடவை அணிவதில் மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை, மாறாக வெள்ளை அல்லது வெளிர் நிறப் புடவைகளை அணிவதற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பெண்கள் மீண்டும் மீண்டும் வெள்ளை ஆடையைக் குறிப்பிட்டது, கண்ணியம் என்பது பாரம்பரியப் பெண்மையுடன் மட்டுமல்லாமல், அடக்கம், கட்டுப்பாடு மற்றும் தார்மீக அதிகாரத்துடனும் தொடர்புடையது என்பதைக் காட்டுகிறது. வெள்ளை ஆடை, குறிப்பாக இலங்கைச் சூழலில், பெரும்பாலும் தூய்மை, கண்ணியம் மற்றும் மத அனுசரிப்புடன் தொடர்புபடுத்தப்படுகிறது. எனவே, பல பெண்கள், பொதுப் பிரதிநிதிகளாகத் தங்களின் சட்டப்பூர்வத் தன்மையை வலுப்படுத்திக்கொண்டு, பிறர் மீதான விமர்சனங்களைக் குறைக்கும் வகையிலான ஒரு ஆடைப் பாணியை ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது.

இந்த எதிர்பார்ப்புகள் தனிப்பட்ட விருப்பங்களுக்கு அப்பாற்பட்டு, நிறுவன நடைமுறைகளிலும் வேரூன்றியதாகத் தோன்றின. மன்ற உறுப்பினர்களின் ஆடை நிறத்தைக் கட்டுப்படுத்த மன்றத்திற்கு முறையான விதிமுறைகள் எதுவும் இல்லை என்றாலும், பதுளையில் உள்ள ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் தலைவர் ஆண்டுதோறும்[81] பெண் மன்ற உறுப்பினர்களுக்கு வெள்ளைப் புடவைகளை விநியோகிப்பதாக ஒரு மன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். முறையான விதி எதுவும் இல்லாததும், இந்த நடைமுறை இருப்பதும், முறைசாரா பாலின அடிப்படையிலான எதிர்பார்ப்புகள் அரசியல் களங்களில் எவ்வாறு நிறுவனமயமாக்கப்பட்டு மீண்டும் உருவாக்கப்படுகின்றன என்பதை விளக்குகின்றன. பாலின ஒதுக்கீடு போன்ற வழிமுறைகள் மூலம் அரசியல் பங்கேற்பிற்கான முறையான தடைகள் களையப்பட்ட பின்னரும் கூட, தோற்றம் மற்றும் கண்ணியம் தொடர்பான எழுதப்படாத விதிகளை பெண்கள் எவ்வாறு தொடர்ந்து எதிர்கொள்கிறார்கள் என்பதை இத்தகைய எடுத்துக்காட்டுகள் காட்டுகின்றன.

81 பதுளை 015, பதுளை மாவட்டம், 08 டிசம்பர் 2023

### 5.3.2 குடும்பப் பொறுப்புகளையும் அரசியல் வாழ்க்கையையும் சமநிலையில் பேணுதல்

நேர்காணல்களில் தொடர்ந்து வெளிப்பட்ட ஒரு முக்கிய கருப்பொருள்களில் ஒன்றாக குடும்பப் பொறுப்புகளையும் அரசியல் வாழ்க்கையையும் சமநிலைப்படுத்துவதில் நிலவும் சவால் இருந்தது. சில பெண்களுக்கு அவர்களின் அரசியல் ஈடுபாட்டை சாத்தியமாக்கும் முறைசாரா ஆதரவு வலையமைப்புகள் இருந்தபோதிலும் சமையல், சுத்தம் செய்தல் மற்றும் குழந்தைப் பராமரிப்பு போன்ற வீட்டு வேலைகளின் சுமை பெரும்பாலும் அவர்களின் மீதே விழுந்தது. இந்த இரட்டைப் பணிச்சுமையின் காரணமாக பராமரிப்பாளர்கள் என்ற அவர்களின் முதன்மைப் பங்கிற்கு இடையில் அரசியல் பொறுப்புகளையும் ஒழுங்குபடுத்த வேண்டிய நிலையிருந்தது. ஒரு உறுப்பினர் தனது அரசியல் பங்கை விட ஒரு தாயாகத் தனது கடமைகளுக்கு எவ்வாறு முன்னுரிமை அளிக்கப்பட்டது என்பதை விபரித்து இதைத் தெளிவாக விளக்கினார்:

“எனது முக்கிய கவனம் வீட்டுப் பொறுப்புகளிலே இருந்தது. நான் மாதத்திற்கு ஒருமுறை மட்டுமே செயற்குழு கூட்டங்களுக்காக சபைக்குச் சென்றேன்... வீட்டில், நான் பெரும்பாலும் என் குழந்தைகளைக் கவனித்துக் கொண்டேன், என் அம்மா சமையல் வேலைகள் அனைத்தையும் கவனித்துக் கொண்டார். எனது குழந்தைக்கு மூன்று மாதங்கள் ஆனபோது நான் சபைக்குச் சென்று தேவையான ஆவணங்களில் கையெழுத்திட்டு சுமார் 15 நிமிடங்களுக்குள் வீட்டிற்குத் திரும்பி என் குழந்தைக்கு பாலூட்டுவேன். இந்த நடைமுறையை நான் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்தேன். பின்னர் கூட்டங்கள் முடியும் வரை நான் சபையிலேயே இருக்க ஆரம்பித்தேன்.”[82]

இந்தத் தனிப்பட்ட அனுபவங்கள் இலங்கையில் நிலவும் விரிவான பாலின அடிப்படையிலான சமூக நெறிமுறைகளைப் பிரதிபலிக்கின்றன. இந் நெறிமுறைகளின் படி பெண்கள் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் வீட்டு வேலைகளுக்குப் முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அதே வேளை ஆண்கள் முதன்மை வருமானம் ஈட்டுபவர்களாக நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் கலாச்சார ரீதியாக எதிர்பார்க்கப்படுகிறது. உணவு தயாரிப்பது முதல் பாடசாலை வேலைகளை நிர்வகிப்பது, நோயாளிகளைக் கவனித்துக்கொள்வது, மற்றும் வீட்டு வேலைகளைச் செய்வது வரை பெண்களின் ஊதியம் பெறாத இந்தப் பராமரிப்புப் பணிகள் கண்ணுக்குத் தெரியாதவையாக இருந்தாலும் இன்றியமையாதவையாக இருக்கின்றன. இந்தப் பொறுப்புகள் பெரும்பாலும் உழைப்பாகக் கருதப்படாமல், அன்பு, கடமை அல்லது கலாச்சார எதிர்பார்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த கடமைகளாகவே பார்க்கப்படுகின்றன. இது ஒரு பெண்ணாக இருப்பதன் அர்த்தத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது (Kottegoda 2023).

82 காலி 024, காலி மாவட்டம், 13 மார்ச் 2024.

இந்தப் பாலின அடிப்படையிலான உழைப்புப் பிரிவினையை ஊக்குவிக்கும் சமூக எதிர்பார்ப்புகள் ஒரு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அமர்வொன்றில் தெளிவாக வெளிப்பட்டன. அங்கு ஒரு பெண் அரசியல்வாதி இரவு நேர அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் பங்கேற்க அழைக்கப்பட்டபோது அவரிடமும் மற்ற பெண்களிடமும், கலந்துகொள்வதற்கு முன்பு "உங்கள் குழந்தைகளை உறங்க வைத்துவிட்டீர்களா" என்று அடிக்கடி கேட்கப்பட்டதாகப் பகிர்ந்துகொண்டார்.[83] அவர் சுட்டிக்காட்டியபடி இது ஒரு ஆண் அரசியல்வாதியிடம் ஒருபோதும் கேட்கப்படாத ஒரு கேள்வியாகும். அறையில் இருந்த மற்றவர்களும் இதை ஒப்புக்கொண்டதோடு இத்தகைய கருத்துக்கள் முறையான அரசியல் தளங்களில் கூட, பெண்கள் இன்னும் அவர்களின் குடும்பப் பங்குகளின் கண்ணோட்டத்திலேயே பார்க்கப்படுகிறார்கள் என்பதை வெளிப்படுத்துவதாகச் சுட்டிக்காட்டினர். இந்தக் கருத்துக்கள் வெளிப்படையாகப் பாதிப்பில்லாதவையாகத் தோன்றினாலும் குழந்தைகளைப் பராமரிப்பது ஒரு பெண்ணின் கடமை என்பதையும் பொதுத் துறையில் அவளது இருப்பு அவளது தனிப்பட்ட பொறுப்புகளின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட வேண்டியதாக அமைக்கப்படுகிறது.

இந்த பாலின அடிப்படையிலான எதிர்பார்ப்புகள் பல சபை உறுப்பினர்கள் தங்கள் அன்றாட நடைமுறைகளை அணுகும் விதத்தை வடிவமைத்தன. நேர்காணல் செய்யப்பட்ட பலர், மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு அல்லது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்பு உணவு தயாரிப்பது, குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்புவது, வீட்டை ஒழுங்கமைப்பது போன்ற அனைத்து வீட்டுப் பொறுப்புகளையும் நிறைவேற்றியதாக விபரித்தனர். ஒரு குறிப்பிட்ட நிகழ்வில், பதுளையைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி மன்றக் கூட்டங்களுக்குத் தனது கைக்குழந்தையை அழைத்து வந்ததையும் கூட்ட நடவடிக்கைகளின் போது குழந்தையைப் பராமரிப்பதற்காக தனது தாயின் உதவியை நம்பியிருந்ததையும் பகிர்ந்துகொண்டார்.[84] இந்த முடிவு அவரது அர்ப்பணிப்பையும் வேலை செய்கிற தாய்மார்களுக்கான கட்டமைப்பு ஆதரவின் பற்றாக்குறையையும் ஒரே நேரத்தில் பிரதிபலித்தது.

நேர்காணல்கள் முழுவதும் பல பெண்கள் தாங்கள் அரசியல் களத்தில் நுழைந்தபோது தங்கள் கணவர்கள் மற்றும் உறவினர்களிடமிருந்து பெற்ற ஊக்கத்தை ஏற்றுக் கொண்டனர். என்றாலும் கூர்ந்து ஆய்வு செய்த போது நடைமுறை உதவிகள் பரவலாக வேறுபட்டிருந்தன என்பது தெரியவந்தது. ஆண் கணவர்களிடமிருந்து கிடைத்த ஆதரவு பெரும்பாலும் அடையாளபூர்வமாகவோ அல்லது ஒழுக்கரீதியாகவோ இருந்தது, அதேசமயம் குழந்தை பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகளுக்கான பெரும்பாலான நடைமுறை ஆதரவு பொதுவாகப் பெண் உறவினர்களிடமிருந்தே கிடைத்தது. பெரும்பாலும் தாய்மார்களும், மாமியார்களும், சகோதரிகளும்தான் வீட்டுப் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ள முன்வந்தனர். இதன்மூலம்,

83 பெண் அரசியல்வாதிகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிப்பட்டறை ஒன்றின்போது ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு, கொழும்பு, 13 ஜூன் 2024.

84 பதுளை 013, பதுளை மாவட்டம், 14 ஜனவரி 2024.

இந்தப் பெண்கள் கூட்டங்களில் கலந்துகொள்ளவும், பிரச்சாரங்களில் ஈடுபடவும் மற்றும் அரசியல் நோக்கங்களுக்காகப் பயணம் செய்யவும் முடிந்தது.

ஒரு பிரதிநிதி குறிப்பிட்டதாவது:

“எனது மாமியார் எனக்கு மிகவும் ஆதரவாக இருந்தார். நாங்கள் இருவரும் வீட்டு வேலைகளைச் சமமாகப் பகிர்ந்து கொண்டோம். அவரின் உதவியால் நான் வீட்டுப் பொறுப்புகளில் குறைவாகவே ஈடுபட்டேன். எனினும், அதனுடன் தொடர்புடைய செலவுகள் அனைத்தையும் நான் முழுமையாக ஏற்றுக் கொண்டேன், மேலும் வீடு, குழந்தைகள் மற்றும் கணவரையும் கவனித்துக் கொண்டேன். பொதுவாக கூட்டங்கள் மதியம் 1:30 அல்லது 2:00 மணிக்கு முடிந்துவிடும், அதன் பிறகு நான் வீட்டிற்கு திரும்பி வீட்டு வேலைகளைச் செய்தேன்.”[85]

எனினும் குடும்ப “ஆதரவு” பற்றிய இந்தக் குறிப்புகள் பெரும்பாலும் நுட்பமான ஆனால் குறிப்பிடத்தக்க கட்டுப்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருந்தன. ஒரு உறுப்பினர் தனக்கு குடும்பத்திடமிருந்து ஆதரவு கிடைத்தபோதிலும் தனது அரசியல் வாழ்க்கையை ஒரு பதவிக்காலத்திற்கு (நான்கு ஆண்டுகள்) மட்டுப்படுத்துமாறு தனது சகோதரர் அறிவுறுத்தியதாகவும் அந்த ஆலோசனையைத் தான் ஏற்றுக்கொண்டதாகவும் விளக்கினார். மேலும் அவர் அரசியல் நிகழ்வுகளுக்கு ஒருபோதும் தனியாகப் பயணம் செய்யவில்லை என்றும் அனைத்துக் கூட்டங்களுக்கும் கடமைகளுக்கும் தனது கணவர் அல்லது சகோதரியுடன் மட்டுமே சென்றதாகவும் குறிப்பிட்டார்.[86] இத்தகைய நிலைமைகள் குடும்ப ஆதரவு பற்றிய விபரிப்புகளைச் சிக்கலாக்குவதோடு பெண்களின் அரசியல் பங்குபற்றல் பெரும்பாலும் ஆண் உறவினர்களால் நிபந்தனைக்குட்பட்டதாகவும், கண்காணிக்கப்படுவதாகவும், கட்டுப்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டுகின்றன.

கணவர்களின் அடையாளவாத ஆதரவு குறித்த இந்த நடைமுறை ஆண்களின் கட்டுப்பாட்டு அதிகார நடவடிக்கைகளுடன் ஒப்பிடும்போது மேலும் சிக்கலானதாகிறது. ஒரு நேர்காணலில் பங்கேற்றவர் சில கணவர்கள் தங்கள் மனைவிகள் அரசியலில் பங்கேற்கலாமா வேண்டாமா என்பதைத் தீர்மானிப்பதாகவும் பல பெண்கள் தங்கள் கணவர்களின் ஒப்புதல் இல்லாத காரணத்தினால் பயிற்சித் திட்டங்களில் கலந்துகொள்ள மறுப்பதாகவும் குறிப்பிட்டார்.[87]குடும்பங்கள் வெளிப்படையாக ஆதரவாக தங்களைக் காட்டிக்கொண்டாலும் கூட ஆண் ஆதிக்கவாதிகளின் அனுமதி பெண்களின் அரசியல் பங்குபற்றலின் அளவை எவ்வாறு தொடர்ந்து வடிவமைக்கிறது என்பதை இந்த எடுத்துக்காட்டுகள் விளக்குகின்றன.

85 மன்னார் 031, மன்னார் மாவட்டம், 07 ஜூன் 2024.

86 காலி 024, காலி மாவட்டம், 13 மார்ச் 2024.

87 காலி 023, காலி மாவட்டம், 17 ஜனவரி 2024.

மொத்தத்தில் இந்த அனுபவங்கள் குடும்ப மற்றும் அரசியல் கட்டமைப்புகள் இரண்டிலும் ஆணாதிக்க நெறிமுறைகள் எவ்வாறு நிறுவப்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இது அரசியல் மற்றும் குடும்பப் பொறுப்புகளுக்கு இடையில் சமநிலையை ஒரு சமத்துவமற்ற அமைப்பிற்குள் ஏற்படுத்திக்கொள்ள பெண்களைக் கட்டாயப்படுத்துகிறது. கணவர்கள் பெரும்பாலும் வாய்மொழி ஊக்கத்தையோ அல்லது “அனுமதியையோ” வழங்கினாலும் மிகச் சிலரே நடைமுறையில் வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொண்டனர், இதனால் பெரும்பாலும் பெண் உறவினர்களே அந்தச் சுமையை ஏற்க வேண்டியிருந்தது. இதன் விளைவாக, Hochschild and Machung (2012) “இரண்டாம் வேலைச் சுழற்சி” என்று விபரிக்கும் நிலை ஏற்படுகிறது. இதில் பெண்கள் முறையான அரசியல் பணிகளுக்குப் பிறகு ஊதியம் பெறாத வீட்டு வேலைகளை மேற்கொள்கின்றனர், இதனால் நீடித்த “நேரப் பற்றாக்குறை” (Ranatunga and Dunusinghe 2021) உருவாக்குகிறது. இவ்வாறு அரசியல் பங்குபற்றல் என்பது நிறுவன ரீதியான சீர்திருத்தத்தால் அல்லாது மாறாக அவர்களின் குடும்பங்களுக்குள் உள்ள மற்ற பெண்களின் ஊதியம் பெறாத அல்லது அங்கீகரிக்கப்படாத உழைப்பால் சாத்தியமாகிறது.

இந்த பாலின அடிப்படையிலான எதிர்பார்ப்புகள் கலாச்சார ரீதியாக வலுப்படுத்தப்படுவது மட்டுமல்லாமல், அரசியல் நிறுவனங்களுக்குள்ளேயே கட்டமைப்பு ரீதியாகப் பதிந்துள்ளன. முக்கியத் தகவலாளர் A குறிப்பிட்டது போல இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகள் பெரும்பாலும் “இயல்பாகவே உள்ளார்ந்த தேசியவாத, ஆணாதிக்க மற்றும் பெண்ணியல் எதிர்ப்புத் தன்மை கொண்டவையாக” இருக்கின்றன.[88] உதாரணமாக, குழந்தைகளை கூட்டங்களுக்கு அழைத்து வர அனுமதிப்பதன் மூலம் பெண்களின் யதார்த்தங்களுக்கு இடமளிப்பதற்குப் பதிலாக கட்சிகள் பொதுவாகப் பெண்கள் தங்கள் சொந்தப் பராமரிப்புத் தீர்வுகளைக் கண்டறிய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. இது பராமரிப்பு என்பது ஒரு பெண்ணின் தனிப்பட்ட பொறுப்பு என்றும் சமூக அல்லது நிறுவன பொறுப்பு அல்ல என்ற கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

இந்தக் கட்டமைப்பானது ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளைப் பகிரவோ அல்லது நிர்வகிக்கவோ முடியாத சூழ்நிலையில் பெண்கள் பெரும்பாலும் ஊதியம் பெறும் உழைப்பிலிருந்து முற்றிலுமாக விலக்கப்படுகின்றனர் என்பதை பிரதிபலிக்கிறது. இந்த நிலை “பொருளாதார ரீதியாகச் செயலற்றவர்கள்” என்று குறிப்பிடப்படுகிறது. எனினும் இந்தப் பெண்கள் வீட்டில் முழு நாட்கள் வேலை செய்துகொண்டிருக்கலாம் (Kottegoda 2023). அரசியல் வாழ்விலும் இதே போன்ற நிலையே காணப்படுகின்றது.. பெண்கள் எந்தவிதப் முறைப்பாடும் இன்றி கட்டமைப்பு ரீதியான ஆதரவுமின்றி மற்றும் வீட்டை யார் நிர்வகிக்க வேண்டும் என்பது குறித்த ஆணாதிக்க கருதுகோள்களை சவாலுக்குட்படுத்தாமலும் பங்கேற்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். அவர்களின் பங்குபற்றலானது சம வாய்ப்பின் அடிப்படையில்லாது மறைக்கப்பட்ட செலவுகளை சமாளித்து தாங்கும் அவர்களின் திறனைச்

88 மேல் மாகாணத்தைச் சேர்ந்த பாலின நிபுணர் மற்றும் அரசியல்வாதி, கொழும்பு மாவட்டம்

சார்ந்தே அமைகிறது. இது அவர்களின் அரசியல் பங்குபற்றல் ஒருபோதும் அவர்களின் குடும்பப் பொறுப்புகளைப் பாதிக்கக்கூடாது என்ற கருத்தை வலுப்படுத்துகிறது.

முக்கியத் தகவலாளவர் A கலாச்சார மாற்றம் என்பது ஒரு படிப்படியான செயன்முறை என்றாலும் பொருளாதார மறுசீரமைப்பின் மூலம் அதைத் தூண்ட முடியும் என்று வாதிட்டார். முக்கியத் தகவலாளர் சுட்டிக்காட்டியபடி உண்மையான முன்னேற்றம் தனிப்பட்ட தியாகத்தை மட்டுமே சார்ந்திருக்க முடியாது. பெண்கள் சுமக்கும் சமமற்ற சுமையைக் குறைக்கவும், பொது வாழ்வில் மேலும் சமமான பங்கேற்பை அனுமதிக்கவும் அரச தலையீட்டின் அவசரத் தேவையை அவர் வலியுறுத்தினார்.[89] இதற்குள் மலிவு விலைக் குழந்தைப் பராமரிப்பு முதியோர் பராமரிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றில் அரசின் முதலீடு போன்ற கட்டமைப்பு ரீதியான நடவடிக்கைகள் அடங்கும். இத்தகைய மாற்றம் இல்லாமல் அரசியலில் பெண்களின் பங்குபற்றல் நிலையற்றதாகவும் நிபந்தனைக்குட்பட்டதாகவும் மேலும் அவர்களின் வீடுகளையும் மறைமுகமாக அவர்களின் பொதுப் பொறுப்புகளையும் தாங்கி நிற்கும் கண்ணுக்குப் புலப்படாத உழைப்பால் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் காணப்படும்.

இந்த ஆய்வானது இட ஒதுக்கீட்டின் அறிமுகம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இருந்தாலும் உள்ளூர் அரசியல் நிறுவனங்களின் ஆழமான பாலினப் பாகுபாட்டுத் தன்மையை மாற்றுவதற்கு அது மட்டும் போதுமானதாக இல்லை என்பதைத் தெளிவாக விளக்குகிறது. பல பெண்களுக்கு அரசியல் பதவியில் நுழைவது என்பது அவர்கள் கடக்க வேண்டிய முதல் தடையே ஆகும். தேர்தலில் வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர்கள் தங்கள் அதிகாரத்தைக் குறைத்து முடிவெடுப்பதில் அவர்களின் பங்களிப்பைக் கட்டுப்படுத்தும் மேலும் பல பாகுபாடுகள், புறக்கணிப்புகள், நிதி நெருக்கடிகள் மற்றும் நிறுவன ரீதியான எதிர்ப்புகளை எதிர்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறார்கள். இந்தப் போக்குகள் முறையான பிரதிநிதித்துவத்திற்கும் உண்மையான அரசியல் அதிகாரமளித்தலுக்கும் இடையிலான இடைவெளியைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

89 முன்னர் குறிப்பிட்ட அதே ஆதாரம்

# அத்தியாயம் 6

# தடைகளைக் கடந்து செல்வதும் எதிர்ப்புக்களை எதிர்கொள்வதும்

2018ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பாலின ஒதுக்கீட்டு முறையானது, பெண்கள் அரசியலுக்குள் நுழைவதற்கு வழிவகுக்கும் வகையில் அதாவது இதற்கு முன் பெரும்பாலும் உயர்ந்த சமூகப் பின்னணி மற்றும் சலுகை பெற்ற பின்னணியில் இருந்து வரும் பெண்களைத் தவிர மற்றவர்களுக்கு எட்டாத ஒன்றாக இருந்த ஒரு தளத்தில் அதன் மூலம் அவர்கள் அரசியலுக்குள் வரவேற்கப்படுவதாக உணர வைக்கும் என்று கருதப்பட்டது. ஆனாலும் முன்னைய அத்தியாயத்தில் விளக்கப்பட்டபடி இந்த ஒதுக்கீட்டின் மூலம் பெண்கள் அரசியலில் நுழைவதென்பது எளிதானதாக இருக்கவில்லை. பெண்கள் வேட்பாளர் நியமனங்களைப் பெறவும் திறம்பட தேர்தல் பிரச்சாரம் செய்யவும் இறுதியில் பதவியில் நீடிக்கவும் போராட வேண்டியிருந்தது. ஒரு வரவேற்கத்தக்க அரசியல் சூழலில் நுழைவதற்குப் பதிலாக அவர்கள் பெரும்பாலும் ஒரு விரோதமான (எதிர்ப்பான) சூழலையே எதிர்கொண்டனர். அங்கு தங்களது அரசியல் கட்சிகளிடமிருந்தும் தங்களுக்கு இடமளிக்க வேண்டிய உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்தும் அவர்களுக்கு மிகக் குறைந்தளவிலான ஆதரவே கிடைத்தது. இந்தச் சவால்கள் இருந்தபோதிலும் இந்தத் தடைகளுக்கு முன்னால் பெண்கள் செயற்பாடற்றவர்களாக இருக்கவில்லை என்பதை நேர்காணல்கள் வெளிப்படுத்தின. நடத்தப்பட்ட நேர்காணல்களின் போது தங்களை வரவேற்க வேண்டிய அதே அமைப்பை எதிர்கொள்ள பல பெண்கள் வெவ்வேறு வழிமுறைகளையும் யுக்திகளையும் கையாண்டது தெளிவாகத் தெரிந்தது. இந்த அனுபவங்களை ஆய்வு செய்வதானது நிறுவன ரீதியான தடைகளைக் கடந்து செல்லவும், எதிர்ப்புக்களை எதிர்கொள்ளவும், இறுதியில் தங்களைப் புறக்கணிக்க/விலக்க முயன்ற உள்ளூர் அரசியலில் தங்கள் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ளவும் அவர்கள் கையாண்ட உத்திகளை எடுத்துக்காட்டுகிறது.

## 6.1 புறக்கணிப்பை எதிர்க்க அறிவை வளர்த்தல்

பல பெண்கள் உள்ளூராட்சிமன்றக் கூட்டங்களில் புறக்கணிக்கப்படுவது மற்றும் பேசவிடாமல் தடுக்கப்படுவது போன்ற சவால்களை எதிர்கொள்ள நிர்வாக நடைமுறைகள் மற்றும் மன்ற விதிமுறைகள் குறித்த அறிவை செயன்முறைக்காக பெற்றுக்கொண்டனர். ஒரு பெண் மன்ற உறுப்பினர் மன்றக் கூட்டங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கும் தொடர்புடைய விதிமுறைகள் மற்றும் சட்டங்களை நன்கு தெரிந்துகொள்வதற்கும் தனது உரைகள் சட்ட நடைமுறைகளுடன் ஒத்துப்போவதை உறுதி செய்வதற்கும் ஒரு மாதத்திற்கும் மேலாக காலம் செலவிட்டு ஆய்வு செய்ததாக குறிப்பிட்டார்.

அவ்வாறு செய்வதன் மூலம் ஆண் உறுப்பினர்கள் தனது பங்களிப்புகளை எதிர்க்கவோ அல்லது நிராகரிக்கவோ உள்ள வாய்ப்புகளைக் குறைக்க அவர் முயன்றார்.[90]

இதே போன்ற அனுபவங்களை மற்றொரு மன்ற உறுப்பினரும் பகிர்ந்து கொண்டார். மன்றக் கலந்துரையாடல்களில் அவர் தகவலறிந்த கேள்விகளை/அறிவார்ந்த கேள்விகளை கேட்பதற்கும் மேலும் தன்னம்பிக்கையுடன் பங்கேற்பதற்கும் உள்ளூராட்சி மன்றச் சட்டங்களையும் நடைமுறை விதிகளையும் எவ்வாறு ஆய்வு செய்தார் என்பதை விபரித்தார்.[91] இந்த முன் ஆயத்தமானது பெண்களின் திறமை அடிக்கடி கேள்விக்குள்ளாக்கப்படுவதாக அவர்கள் உணர்ந்த ஒரு சூழலில் பெரும்பாலும் அவசியமாக இருந்தது.

கத்தியவாறு இடையூறு செய்யப்படுவதையோ அல்லது பேசும் போது இடையில் குறுக்கிடப்படுவதையோ தவிர்க்க பல பெண்கள் மன்றக் கூட்டங்களில் தாங்கள் முன்வைக்க உத்தேசித்துள்ள முன்மொழிவுகள் தொடர்பான தெளிவான புரிதலுடனும் விரிவான குறிப்புகளுடனும் முழுமையாகத் தயாராகி நுழைவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். இத்தகைய ஆயத்தம் தங்கள் கருத்துக்களை மேலும் திறம்படப் பாதுகாக்கவும், அவர்களின் பங்கேற்பைக் குலைக்கும் முயற்சிகளை எதிர்க்கவும் அவர்களுக்கு உதவியது. ஒரு மன்ற உறுப்பினர் தான் முன்மொழிவுகளை முன்வைக்கும்போது ஆண் உறுப்பினர்கள் தான் பேசும் போது குறுக்கிடுவதைத் தடுப்பதற்காக “தயவுசெய்து வாயை மூடிக்கொள்ளுங்கள். இது என்னுடைய நேரம்,” என்று கூறி தனது பேசும் நேரத்தின் மீது கட்டுப்பாட்டை நிலைநாட்டக் கற்றுக்கொண்டதை விபரித்தார்.[92]

இந்த உத்திகள் உள்ளூர் அரசியல் நிறுவனங்களுக்குள் ஆழமாக பதிந்துள்ள பாலின அடிப்படையிலான நெறிமுறைகளை பெண்கள் எவ்வாறு முனைப்புடன் கையாளுகின்றனர் என்பதை விளக்குகின்றன. பெண்ணிய நிறுவனவாதிகள் வாதிடுவது போல நிறுவனங்கள் நிலையானதும் மற்றும் ஒரே மாதிரியானவையும் அல்ல, மாறாக அரசியல் செயற்பாட்டாளர்களால் மறுவடிவமமைக்கக்கூடிய ஆற்றல்மிகு அமைப்புகளாகும் (Chappel 2006, 224). இத்தகைய நடவடிக்கைளின் மூலம் செயற்பாட்டாளர்கள் தற்போதைய நிலையை சவாலாக்கும் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தி இந்த நிறுவனங்களின் பாலின அடிப்படையிலான தன்மையை மாற்றியமைக்க முடியும் (Beckwith 2005, 132–3).

90 கொழும்பு 019, கொழும்பு மாவட்டம், 22 நவம்பர் 2023.

91 மன்னார் 029, மன்னார் மாவட்டம், 07 ஜுன் 2024.

92 கண்டி 028, கண்டி மாவட்டம், 25 அக்டோபர் 2023.

## 6.2 முறைசாரா எதிர்ப்பு மற்றும் கட்சி கடந்த ஒற்றுமை

பெண் அரசியல்வாதிகளிடம் நடத்தப்பட்ட நேர்காணல்களின் போது அவர்கள் தங்கள் கட்சிகளுக்குள் போதிய ஆதரவைப் பெறவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. எனினும் இத்தகைய முறையான ஆதரவு இல்லாத நிலையில் இந்த நிறுவன ரீதியான இடைவெளிகளைக் குறைப்பதற்காக பெண்கள் எவ்வாறு முறைசாரா/உத்தியோகபூர்வமற்ற ஒற்றுமை வலைப்பின்னல்களை உருவாக்கினார்கள் என்பதைக் கவனிப்பது சுவாரஸ்யமாக இருந்தது. பல மன்றங்களில் பெண் உறுப்பினர்கள் கட்சி எல்லைகளைக் கடந்து தகவல்களையும் ஆலோசனைகளையும் பரிமாறிக்கொண்டு முறைசாரா ஆதரவு அமைப்புகளை உருவாக்கினர். ஒரு உறுப்பினர் இதை பின்வருமாறு விளக்கினார்:

“மன்றத்தில் உள்ள பெண் உறுப்பினர்கள் மன்றத்தில் நடைபெற்ற விவாதங்கள் மற்றும் முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பது உட்பட மன்றத்தின் நிகழ்வுகள் குறித்த விபரங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டனர்.”[93]

இரத்தினபுரியைச் சேர்ந்த மற்றொரு பிரதிநிதியும் இந்தக் கருத்தை பிரதிபலித்து தனது சொந்தக் கட்சியைச் சேர்ந்த ஆண் சக உறுப்பினர்களை விட மற்ற கட்சிகளைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் பெரும்பாலும் அதிக உதவியும் ஆதரவும் வழங்கியதாகக் கூறினார்.

“சிங்கள உறுப்பினர்களிடையே ஒரே ஒரு தமிழ் பெண் உறுப்பினராக நான் இருந்தபோதிலும் எந்த விதமான பாகுபாட்டையும் சந்திக்கவில்லை, அனைவரிடமிருந்தும் ஆதரவைப் பெற்றேன்.[94]

சில சந்தர்ப்பங்களில் இத்தகைய ஒற்றுமை வெளிப்படையானதும் கூட்டாக வெளிப்படும் வடிவத்தையும் எடுத்தது. உதாரணமாக பதுளை உள்ளூராட்சி மன்றத்தில், மூத்த ஆண் அரசியல்வாதிகளால் பகிரங்கமாக விமர்சிக்கப்பட்ட அல்லது கண்டிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாக பெண் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து நின்றனர். மேலும் அத்தகைய நடத்தைக்கு தங்கள் எதிர்ப்பினை அடையாளமாகக் காட்டுவதற்கு கருப்புப் பட்டைகளையும் அணிந்திருந்தனர்.[95] இத்தகைய கூட்டு எதிர்ப்புச் செயல்கள் பெண்கள் பரஸ்பர ஆதரவின் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் அடுக்கமைவு மற்றும் பாலின அடிப்படையிலான கலாச்சாரத்தை எவ்வாறு எதிர்க்க முயன்றனர் என்பதை சுட்டிக்காட்டின.

பெண்கள் தாங்கள் எதிர்கொண்ட எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் குறிப்பாக பாரம்பரியமாக ஆண்களின் ஆதிக்கப் பகுதிகளாக கருதப்படும் இடங்களிலும் கூட மன்றச்

93 கண்டி 026, கண்டி மாவட்டம், 28 பெப்ரவரி 2024.

94 இரத்தினபுரி 038, இரத்தினபுரி மாவட்டம், 22 மார்ச் 202

95 பதுளை 013, பதுளை மாவட்டம், 14 ஜனவரி 2024.

செயன்முறைகளுக்குள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர். பெண்களுக்கு அரசியல் அறிவோ அல்லது தொழில்நுட்ப நிபுணத்துவமோ இல்லை என்ற பொதுவான தவறான கருத்தை எதிர்த்து வரவுசெலவுத் திட்ட விடயங்களில் தாங்கள் எவ்வாறு முனைப்புடன் பங்குபற்றினர் என்பதைப் பல மன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். உதாரணமாக அம்பலங்கொடையில் மன்ற வரவுசெலவுத் திட்டத்தை ஆய்வு செய்வதில் பெண் மன்ற உறுப்பினர்கள் முக்கிய பங்கு வகித்தனர். அதாவது நடைமுறை சார்ந்த முறைகேடுகளைக் கண்டறிந்த பிறகு முன்மொழியப்பட்ட வரவுசெலவுத் திட்டம் இறுதியில் நிராகரிக்கப்படுவதற்கும் அவர்கள் காரணமாக இருந்தனர். ஒரு உறுப்பினர் விளக்கியபடி பெண் உறுப்பினர்கள் வரவுசெலவுத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு கணக்காய்வு அறிக்கைகளையும் நிதி ஆவணங்களையும் பரிசீலிக்க வற்புறுத்தியதால் கணக்காய்வு அறிக்கைகள் முதல் ஆண்டிற்கு மட்டுமே தயாரிக்கப்பட்டு இரண்டாம் ஆண்டிற்கு தயாரிக்கப்படவில்லை என்பதை அவர்கள் கண்டறிந்து வரவுசெலவுத் திட்டத்தை நிராகரித்தனர்.[96]

தனிப்பட்ட மன்றங்களைத் தாண்டி பெண்கள் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களிலும் பரந்த ஆதரவு வலையமைப்புகளை உருவாக்கினர். உதாரணமாக மன்னாரில் பெண் மன்ற உறுப்பினர்கள் 'கிரிசிலிஸ்' (Chrysalis) அமைப்பின் ஆதரவுடன் மாவட்ட உள்ளூராட்சி மன்ற மகளிர் உறுப்பினர்கள் ஒன்றியத்தை நிறுவினர். இந்தத் தளமானது பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் பின்னணிகளைச் சேர்ந்த 21 பெண் மன்ற உறுப்பினர்களை ஒன்றிணைத்தது. இதன்மூலம் அவர்கள் சாதி, மதம் மற்றும் கட்சி சார்புகள் அடிப்படையிலான பிரிவினைகள் இல்லாமல் தொடர்ச்சியாக சந்திக்கவும் பொதுவான சவால்களைப் பற்றி விவாதிக்கவும் முடிந்தது. பதவியை விட்டு விலகிய பின்னரும் சில உறுப்பினர்கள் இந்த வலையமைப்புகளில் தொடர்ந்து முனைப்புடன்/தீவிரமாகச் செயற்பட்டு வந்தனர்.[97]

மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் பெண் உறுப்பினர்களிடையே தகவல் தொடர்பைப் பேணுவதற்கும் நிர்வாகத் தகவல்களை பகிர்வதற்கும் முக்கியமான புதுப்பித்த தகவல்களை பகிர்வதற்கும் வட்ஸ்அப் மற்றும் /பேஸ்புக் (முகநூல்) குழுக்கள் எவ்வாறு பொதுவாகப் பயன்படுத்தப்பட்டன என்பதையும் மன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்தினர். இந்தத் தளங்கள் நிறுவன ரீதியான எல்லைகளைக் கடந்து அறிவைப் பரிமாறிக்கொள்வதற்கும் ஒற்றுமையைப் பேணுவதற்கும் பெண்களுக்கு ஒரு மாற்று மற்றும் முறைசாரா வழியாக செயற்பட்டன.[98] [99]

எனினும் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நட்பு மற்றும் ஒற்றுமை குறித்த இந்த சம்பவங்கள் பல பெண்கள் தங்கள் சொந்தக் கட்சிகளுக்குள் எதிர்கொண்ட அனுபவங்களுக்கு முற்றிலும் முரணாக இருந்தன. பெண்களிடையே முறைசாரா ஒத்துழைப்பானது ஒற்றுமை மற்றும் பரஸ்பர

96 காலி 023, காலி மாவட்டம், 17 ஜனவரி 2024.
97 மன்னார் 029, மன்னார் மாவட்டம், 07 ஜூன் 2024.
98 கொழும்பு 019, கொழும்பு மாவட்டம், 22 நவம்பர் 2023.
99 மன்னார் 031, மன்னார் மாவட்டம், 07 ஜூன் 2024.

ஆதரவு உணர்வை வளர்த்தபோதிலும் கட்சியின் உள்ளக அரசியல் கலாச்சாரம் பெரும்பாலும் கடுமையான போட்டித்தன்மையுடனும் புறக்கணிக்கும் தன்மையுடனும் இருந்தது. பல பெண்கள் கட்சிகளுக்குள் கிடைத்த ஆதரவை விட கட்சிகளுக்கு அப்பால் அதிக ஆதரவைப் பெற்றனர். என்றாலும் மற்ற கட்சிகளின் உறுப்பினர்களுடன் தொடர்புகொள்ள மேற்கொண்ட முயற்சிகள் பெரும்பாலும் சந்தேகத்துடனோ அல்லது விரோதத்துடனோ எதிர்கொள்ளப்பட்டன. உதாரணமாக ஒரு பெண் உறுப்பினர் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் பேசியதற்காக மட்டுமே ஆண் சக உறுப்பினர்களால் விசுவாசமின்மைக் குற்றச்சாட்டுக்கு (துரோகம்) உள்ளானதோடு பின்னர் அவர் கட்சித் தலைமையால் பகிரங்கமாகக் கண்டிக்கப்பட்டார். அவரது கட்சி எப்போதாவது, அவரை வீட்டிற்கு அழைத்துச் செல்ல ஒருவரை நியமிப்பது அல்லது அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது சென்று பார்ப்பது போன்ற அடையாளப்பூர்வமான உதவிகளைச் செய்தபோதிலும் அந்தச் செயல்களில் உண்மைத்தன்மை இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

“ஆதரவு போதுமானதாக இல்லை. அது போதுமானதாக இருந்திருந்தால் அந்த ஆண்டுகளில் நாங்கள் இன்னும் பலவற்றை செய்திருக்க முடியும். எங்களுக்கு போதுமான ஆதரவு இருந்திருந்தால், மக்களிடையே வலுவான நம்பிக்கையைப் பெற்றிருப்போம்.”[100]

பெண்ணிய நிறுவனவாதிகள் “தொடர்ந்து நிகழும் புறக்கணிப்புச் செயன்முறைகள்” (Lovenduski 2005) என்று விபரிக்கும் கூற்றுகளுடன் இந்தக் கூற்றுகள் ஒத்துப்போகின்றன. அரசியல் கட்சிகள் வெளிப்படையாகப் பாலின சமத்துவத்தை ஆதரித்தாலும் ஆண்களின் ஆதிக்கத்தில் உள்ள அவற்றின் உள்ளார்ந்த கலாச்சாரங்கள் பெண்களுக்கு தகவல், வளங்கள் மற்றும் தலைமைத்துவ வாய்ப்புகளை வழங்காமல் தடுத்து அதன் மூலம் அவர்களை “வெளியாட்கள்” (Bjarnegård and Kenny 2016) என நிலைநிறுத்துகின்றன.

முக்கியத் தகவலாளர் A உடனான நேர்காணலின் படி கட்சிகளுக்குள் பெண்கள் பெரும்பாலும் அணிதிரட்டுபவர்கள், பராமரிப்பாளர்கள் அல்லது தேர்தல் பிரச்சார ஒருங்கிணைப்பாளர்கள் போன்ற கீழ்நிலைப் பணிகளில் மட்டுமே நியமிக்கப்படுவதாகவும் அதே நேரத்தில் தீர்மானம் எடுக்கும் இடங்கள் ஆண்களின் ஆதிக்கத்திலேயே இருப்பதையும் உறுதிப்படுத்தியது. முக்கியத் தகவலாளர் A கூறியது போல கட்சிகள் “பெண்களின் வாக்குகளையும் அவர்களின் காட்சிப்படுத்தலையுமே விரும்புகின்றன, ஆனால் தலைமைத்துவத்தில் அவர்களின் இருப்பை அல்ல.”[101]

100 கண்டி 026, கண்டி மாவட்டம், 28 பெப்ரவரி 2024.

101 மேல் மாகாணத்தைச் சேர்ந்த பாலினச் சிறப்பு நிபுணர் மற்றும் அரசியல்வாதி, கொழும்பு மாவட்டம், 06 நவம்பர் 2023.

# அத்தியாயம் 7

## முடிவுரை

பாலின சமத்துவத்தின் பல்வேறு பரிமாணங்களில், குறிப்பாகப் பெண் கல்வியறிவு மற்றும் சமூக மட்டத்தில் பெண்களின் பங்கேற்பு ஆகியவற்றில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருந்தபோதிலும், இந்த முன்னேற்றங்கள் முறைசார் அரசியல் நிறுவனங்களுக்குள் அதிகரித்த பிரதிநிதித்துவமாக உருமாறவில்லை. சமூக அடிப்படையிலான அமைப்புகளில் (CBOs) செயல்படும் உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் பெண்களே ஆவர். மேலும் நாட்டின் பெரும்பாலான கிராமங்களில் பெண்கள் சங்கங்களும் செயற்பட்டு வருகின்றன. இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்ந்து குறைவாகவே உள்ளது. இது, சமூக வாழ்வில் பெண்களின் பங்களிப்பிற்கும், முறையான அரசியல் முடிவெடுக்கும் செயல்முறைகளில் அவர்கள் உள்ளடக்கப்படுவதற்கும் இடையே நிலவும் நீண்டகாலத் தொடர்பின்மையை எடுத்துக்காட்டுகிறது.

1960 இல் உலகின் முதல் பெண் பிரதமர் தேர்ந்தெடுக்கப்பட்டதும் மற்றும் 1994 இல் நாட்டின் நீண்டகாலம் பதவி வகித்த பெண் ஜனாதிபதியின் நியமனம் உள்ளிட்ட அடையாளபூர்வமான முக்கிய விடயங்களை இலங்கை அடிக்கடி நினைவு கூர்வதால் இந்த முரண்பாடு மேலும் வலுப்பெறுகிறது. ஆனால் இத்தகைய புகழ்பெற்ற எடுத்துக்காட்டுகள் இருந்தபோதிலும் மக்கள் தொகையில் பெண்களே பெரும்பான்மையாக இருந்தும் குறிப்பாக உள்ளூராட்சி மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிகளில் பெண்களின் பிரதிநிதித்துவம் கணிசமாகக் குறைவாகவே உள்ளது.

இந்த பின்னணியில்தான் 2016 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி மட்டத்தில் 25 சதவீத இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட்டு 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பெண்களின் அரசியல் பங்குபற்றலை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்டு இது அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் இந்த ஒதுக்கீட்டின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் வாழ்வியல் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு அது உண்மையான அதிகாரமளித்தலுக்கு வழிவகுத்ததா அல்லது பெரும்பாலும் அடையாளப் பூர்வமாகவே இருந்ததா என்பதை இவ்வாய்வு ஆராய்ந்தது.

அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சமூக மற்றும் கலாச்சாரச் சூழல்கள் என அனைத்திலும் பெண்கள் தொடர்ந்தும் நீடித்த மற்றும் ஆழமான பாலின அடிப்படையிலான தடைகளை எதிர்கொள்கின்றனர் என்றும் இது அவர்களை திறன் மிக்க அரசியல்வாதிகளாக செயல்படும் திறனை கட்டுப்படுத்துகிறது என்றும் ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. கட்சிகளின் கட்டுப்பாட்டு ஆதிக்கம், நிறுவன ஆதரவின்மை மற்றும்

ஆண் கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பு ஆகியவை பெண்களின் பங்குபற்றலை கணிசமாகக் கட்டுப்படுத்தின. அதே நேரம் ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளின் சமமற்ற சுமை அவர்களின் ஈடுபாட்டை மேலும் மட்டுப்படுத்தியது. இவ்வாறான சூழ்நிலைகள் இட ஒதுக்கீட்டு முறையின் மூலம் அரசியலுக்குள் நுழைவது மட்டுமே பெண்களுக்கு உட்சேர்க்கை, செல்வாக்கு மற்றும் அதிகாரத்தை தானாக வழங்குவதில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றன.

ஒட்டுமொத்தமாக, பெண்களின் அரசியல் பங்கேற்பு ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட மூன்று நிறுவனக் களங்களில் வடிவமைக்கப்பட்டது என்பதை இந்தக் கண்டுபிடிப்புகள் நிரூபிக்கின்றன. பெயரளவிலான வேட்பாளர் தேர்வு, வாய்ப்புகளுக்கான சமமற்ற அணுகல் மற்றும் வரையறுக்கப்பட்ட நிறுவன ஆதரவு ஆகியவற்றின் மூலம் அரசியல் கட்சிகள் வாயில்காப்பாளர்களாகத் தொடர்ந்து செயல்பட்டன. உள்ளூராட்சி மன்றங்களுக்குள், வளங்களுக்கான சமமற்ற அணுகல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறையிலிருந்து முறைசாரா விலக்கல் ஆகியவை தேர்தலுக்குப் பிறகு பெண்களின் உண்மையான பங்கேற்பைக் கட்டுப்படுத்தின. முறையான அரசியல் நிறுவனங்களுக்கு அப்பால், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குள் நிலவும் பாலின அடிப்படையிலான எதிர்பார்ப்புகள், ஊதியம் பெறாத பராமரிப்புப் பொறுப்புகள், சமூகக் கண்காணிப்பு மற்றும் பெண்களின் பொது வகிபாகங்களைச் சுற்றியுள்ள பாரம்பரிய நெறிமுறைகள் ஆகியவற்றின் மூலம் பெண்களின் அரசியல் ஈடுபாட்டைத் தொடர்ந்து ஒழுங்குபடுத்தின. ஒட்டுமொத்தமாக, பெண்களின் அரசியல் பங்கேற்பு ஒரு தனி நிறுவனத்தால் அல்ல, மாறாக அரசியல், நிறுவன மற்றும் சமூகத் தளங்களில் செயற்படும் பல முறையான மற்றும் முறைசாரா நிறுவனங்களின் இடைவினையால் வடிவமைக்கப்பட்டது என்பதை இந்தக் கண்டுபிடிப்புகள் நிரூபிக்கின்றன.

பெண்ணிய நிறுவனமயமாக்க கண்ணோட்டத்தில் பார்க்கும்போது வெளிப்படையாக பாலினச் சார்பற்றதாகத் தோன்றும் நிறுவனங்கள் கூட ஆதரவு வலையமைப்புகள், பாலின முன் மதிப்பீடுகள், மற்றும் கட்சி அடுக்கமைவுகள் உள்ளிட்ட முறைசாரா நெறிமுறைகளால் எவ்வாறு ஆதரிக்கப்படுகின்றன என்பதை இந்தக் கண்டுபிடிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த நெறிமுறைகள் தொடர்ந்தும் பெண்களின் அதிகார அணுகலை கட்டுப்படுத்துகின்றன. எனவே பெண்களின் எண்ணிக்கையிலான பிரதிநிதித்துவத்தை மட்டும் அதிகரிப்பது ஆழமாக வேரூன்றிய நிறுவன நடைமுறைகளை மாற்ற போதுமானதாக இல்லை என்பதையும் இது பரந்த கட்டமைப்பு சார் மாற்றம் இல்லாத நிலையில் முறையான சீர்திருத்தங்களின் வரம்புகள் குறித்த முக்கியமான கேள்விகளை எழுப்புகிறது என்பதையும் இவ்வாய்வு சுட்டிக்காட்டுகின்றது.

அதன்படி இட ஒதுக்கீடானது உள்ளூராட்சி மன்றத்தில் பெண்களின் எண்ணிக்கையிலான பிரதிநிதித்துவத்தை அதிகரித்திருந்தாலும் அது இன்னும் அவர்களுக்கு அர்த்தமுள்ள உண்மையான அரசியல் அதிகாரமளிப்பாக மாறவில்லை. பெண்கள் தொடர்ந்தும் “இட

ஒதுக்கீட்டுப் பெண்கள்" அல்லது "பின் மந்திரினி" எனப் பெயரிடப்பட்டு மேலும் அரசியல் மற்றும் சமூக அமைப்புகள் இரண்டிலும் அவர்கள் அங்கீகாரம்/சட்டபூர்வத்தன்மை அற்றவர்களாகவே பெரும்பாலும் கருதப்படுகிறார்கள்.

எனினும் இதனை இட ஒதுக்கீட்டின் தோல்வியாகப் கருதக் கூடாது. மாறாக இது நிறுவன மாற்றத்தின் நீண்ட மற்றும் சிக்கலான செயல்முறையின் பிரதிபலிப்பாகவே கருதப்பட வேண்டும். பெண்ணிய ஆய்வுகள் குறிப்பிடுவது போல இத்தகைய மாற்றம் காலப்போக்கில படிப்படியாக நிகழ்கின்றன. இந்த வகையில் இட ஒதுக்கீடுகள் இரண்டு கட்டங்களாகச் செயற்படுகின்றன எனக் கருதலாம். முதலாவது பெண்களின் எண்ணிக்கையிலான பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டது. இரண்டாவது உண்மையான பங்குபற்றலை சாத்தியமாக்குவதற்காக நிறுவன நெறிமுறைகளையும் நடைமுறைகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டது. முதல் கட்டம் கணிசமான முன்னேற்றத்தை அடைந்திருந்தாலும் இரண்டாவது கட்டம் இன்னும் தொடர்ந்து சர்ச்சைக்குரியதாகவும் உள்ளது என்பதை இலங்கை அனுபவம் சுட்டிக்காட்டுகிறது.

ஒதுக்கீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, பெண்களின் அரசியல் பங்கேற்பை வடிவமைப்பதில் முறையான நிறுவன சீர்திருத்தங்களும் முறைசாரா நிறுவன நடைமுறைகளும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்புகொள்கின்றன என்பதை விளக்குவதன் மூலம், இந்த ஆய்வு அந்தப் புரிதலுக்குப் பங்களிக்கின்றது. அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி மன்றங்கள், மற்றும் குடும்ப, சமூகச் சூழல்களில் பெண்களின் வாழ்வியல் அனுபவங்களை ஆராய்வதன் மூலம், முறைசாரா ஆணாதிக்க நெறிகள் உள்ளடக்க ரீதியான அரசியல் பங்கேற்பைத் தொடர்ந்து கட்டுப்படுத்தும் வழிமுறைகளை விளக்குவதற்காக, இந்த ஆய்வு, விளக்கப் பிரதிநிதித்துவம் தொடர்பான கேள்விகளுக்கு அப்பால் தற்போதைய ஆய்வுகளை விரிவுபடுத்துகின்றது.

ஆனாலும் இந்த ஆய்வில் சில வரையறைகள் உள்ளன. இதன் ஆய்வுப் பரப்பு ஒப்பீட்டளவில் ஒரு சிறிய மாதிரியுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் இது நீண்டகால அரசியல் பயணங்கள் அல்லது காலப்போக்கில் நிகழும் நிறுவன மாற்றங்களையோ முழுமையாக ஆய்வு செய்யவில்லை. எனவே எதிர்கால ஆய்வுகள் பெண்களின் அரசியல் வாழ்க்கையை காலப்போக்கில் தொடர்ந்தும் கண்காணிக்கும் நீள்நோக்கு அணுகுமுறைகள் மூலமும் மற்றும் கட்சித் தலைமை மற்றும் ஆண் உறுப்பினர்களின் கண்ணோட்டங்களை உள்ளடக்கிய ஒப்பீட்டுப் பகுப்பாய்வுகள் மூலமும் பயனடையலாம். இந்த ஆய்வு, பெண்களின் அனுபவங்களில், குறிப்பாக இனம் மற்றும் மதம் சார்ந்த முக்கிய வேறுபாடுகள் இருப்பதையும் சுட்டிக்காட்டியது. சில குழுக்கள் சமூக மட்டத்தில் கடுமையான எதிர்ப்புகளை எதிர்கொள்கின்றன. எனவே, இனம், மதம் மற்றும் பிற ஒன்றோடொன்று தொடர்புடைய அடையாளங்கள் பெண்களின் அரசியல் அனுபவங்களை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதை எதிர்கால ஆய்வுகள் ஆராய வேண்டும். இது, அரசியல் நிறுவனங்களுக்குள் நிலவும் பலதரப்பட்ட சமத்துவமின்மைகளைப்

பற்றிய ஆழமான புரிதலுக்குப் பங்களித்து, இறுதியில் அனைவரையும் உள்ளடக்கிய கொள்கை வடிவமைப்பு மற்றும் செயலாக்கத்திற்கு வழிவகுக்கும்.

முடிவாகக் கூறுவதென்றால், அரசியலில் இருந்து பெண்கள் வரலாற்று ரீதியாக விலக்கப்பட்டதை/புறக்கணிக்கப்பட்டதனை சரிசெய்வதற்கு பாலின ஒதுக்கீடுகள் ஒரு அவசியமான வழிமுறையாக இருந்தாலும் அவை ஒரு நீண்ட கால மாற்றச் செயன்முறையின் முதல் படியை மட்டுமே குறிப்பதனால் அவை மட்டும் போதுமானவை அல்ல. அர்த்தமுள்ள நிறுவன மாற்றத்திற்கு முறையான விதிமுறைகள் மற்றும் முறைசாரா அதிகாரக் கட்டமைப்புகள் ஆகிய இரண்டையும் கையாளும் தொடர்ச்சியான மற்றும் பல்மட்ட சீர்திருத்தங்கள் தேவைப்படுகிறது. இறுதியாக பெண்களின் அரசியல் பங்குபற்றல் ஒரு சலுகையாகவோ அல்லது தற்காலிக முயற்சியாகவோ கருதப்படாமல் ஒரு ஜனநாயகததின் அடிப்படைத் தேவையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். மேலும் பெண்கள் அரசியல் பதவிகளில் நுழைவது மட்டுமல்லாமல் அர்த்தமுள்ள வகையிலும் சமமான முறையிலும் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடிய வகையில் அரசியல் நிறுவனங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

# அத்தியாயம் 8

# பரிந்துரைகள்

இந்த ஆய்வினூடாக பெண் உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல என்பது தெளிவாகியது. அதாவது வெவ்வேறு தொகுதிகள், மாவட்டங்கள் மற்றும் மாகாணங்கள் முழுவதும் இந்த அனுபவங்கள் ஒரே மாதிரியாக காணப்படுவது ஆழமான கட்டமைப்பு சார் சமத்துவமின்மைகள் நிலவுகின்றன என்பதையும் அவற்றை சமாளிக்க திட்டமிட்ட மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் அவசியமானவை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. இந்த சவால்கள் நிறுவன ரீதியான மற்றும் சமூக, அரசியல் இயக்கவியலில் வேரூன்றியுள்ளன. மேலும் அவை அரசியல் கட்சிகளுக்குள் பாலின அடிப்படையிலான புறக்கணிப்பு முதல் உள்ளூராட்சி மன்றங்களுக்குள் தொடர்ச்சியான ஓரங்கட்டப்படுதல் வரை விரிவடைந்துள்ளன.

மேலும் பெண்கள் தங்கள் சொந்தக் குடும்பங்களுக்குள் எதிர்கொள்ளும் அழுத்தங்களினால் இவை தீவிரமடைகின்றன. மேலும் சமூக மட்டத்திலும் ஆதரவும் ஊக்குவிப்பும் கிடைக்க வேண்டிய சூழல்களிலும் கூட பாலின கட்டமைப்புகளைத் தாண்டி செயற்பட்டதற்காக பலர் வெளிப்படையான மற்றும் மறைமுகமான எதிர்ப்புக்களை எதிர்கொண்டனர். எனவே இந்தத் தடைகளை ஒரே இரவில் சரிசெய்ய முடியாது. மாறாக அரசியல் முறைமையின் வெவ்வேறு மட்டங்களில் செயற்படும் பலதரப்பட்ட தரப்பினரின் ஒருங்கிணைந்த மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கை தேவைப்படுகிறது.

ஆகவே பின்வரும் பரிந்துரைகள் இத்தகைய தலையீடுகள் அவசியமான பகுதிகளை கோடிட்டுக் காட்டுவதுடன் மேலும் அவற்றைச் செயற்படுத்துவதற்குப் பொறுப்பான தரப்பினராக அரசாங்கம், அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி மன்றங்கள், தேர்தல் ஆணைக்குழு மற்றும் சிவில் சமூக அமைப்புகளை அடையாளம் காட்டுகின்றன. இந்த நிறுவன ரீதியான தலையீடுகளுடன் கல்வி முறை மற்றும் சமூகம் ஆகிய இரண்டிலும் பாலின அடிப்படையிலான மனப்பான்மைகள் மற்றும் நெறிமுறைகளில் மாற்றங்கள் தேவை என்பதை உணர்வது முக்கியம்.

## 8.1 அரசாங்கத்திற்கான பரிந்துரைகள்

### 8.1.1 தற்போதுள்ள ஒதுக்கீட்டு முறைமையை மேம்படுத்துதல்

ஒதுக்கீட்டு முறை குறித்து பல விமர்சனங்கள் குறிப்பாக அதன் செயற்றிறன் குறித்த கேள்விகள் எழுந்துள்ள போதிலும் இந்த நிலையில் அந்த முறைமையை கைவிடுவது நடைமுறைக்கு பொருத்தமானதோ அல்லது விரும்பத்தக்கதோ அல்ல. தத்துவ ரீதியாக பொது

மற்றும் அரசியல் வாழ்வில் இருந்து பெண்கள் வரலாற்று ரீதியாக புறக்கணிக்கப்பட்டதை சரிசெய்வதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தற்காலிக நடவடிக்கையாகவே ஒதுக்கீடு கருதப்படுகிறது. இது பெண்கள் சமத்துவ நிலையில் அரசியலில் பங்குபற்றக்கூடிய ஒரு செயற்கையான ஆனால் அவசியமான நுழைவுப் புள்ளியை உருவாக்குகிறது. எனினும் இலங்கைச் சூழலில் அத்தகைய அணுகுமுறை முன்கூட்டியதாக இருக்கலாம் என்று இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. தங்களின் அரசியல் பங்குபற்றலைக் கட்டுப்படுத்தும் கட்டமைப்பு மற்றும் நிறுவன ரீதியான தடைகள் தொடர்ந்தும் நிலவுவதால் ஒதுக்கீட்டு முறைமை ஒரு நிரந்தர நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்று நேர்காணல் செய்யப்பட்ட பல பெண்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்த நிலைப்பாடு ஒப்பீட்டு ஆய்வுச் சூழல்களில் நடைபெறும் விரிவான விவாதங்களை பிரதிபலிக்கின்றது. குறிப்பாக இங்கு நேர்மறை நடவடிக்கைகள் எவ்வளவு காலம் நீடிக்க வேண்டும் என்பது தொடர்பான பொருத்தமான காலவரையறை இன்னும் விவாதத்திற்குரியதாவே உள்ளது. உதாரணமாக கென்யா போன்ற நாடுகளில் 20 ஆண்டு (sunset clause) காலவரையறை நிறைவு விதியை அறிமுகப்படுத்துவதற்கான முன்மொழிவுகள், குறுகிய காலக்கெடுவானது நிறுவன ரீதியான மாற்றங்கள் மெதுவாக நடைபெறும் உண்மையை கருத்தில் கொள்ளத் தவறுகிறது என்ற அடிப்படையில் விமர்சனங்களைச் சந்தித்துள்ளன (Obiria 2025). இந்தக் கருத்தாய்வுகளின் அடிப்படையில் ஒதுக்கீட்டு முறைமையை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குட்பட்ட தற்காலிக நடவடிக்கையாக கருதுவதற்குப் பதிலாக அதன் செயற்றிறனை மதிப்பீடு செய்யும் வகையில் இடைப்பட்ட மறு ஆய்வுகளுடன் அதனைத் தொடரப் பரிந்துரைக்கப்படுகிறது. இருப்பினும் இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் நிரூபிப்பது போல, பெண்கள் தொடர்ந்து எதிர்கொள்ளும் கட்டமைப்பு மற்றும் நிறுவன ரீதியான தடைகளைக் கையாள எண்ணிக்கையளவிலான சேர்க்கை மட்டும் போதுமானதாக இல்லை.

அதற்கிணங்க பல ஆபிரிக்க நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் “zebra list” முறையை அறிமுகப்படுத்துவது போன்ற துணை நடவடிக்கைகளின் தேவை உள்ளது. இது பாலின சமத்துவ நிலையை உறுதி செய்வதற்கும், கட்சிப் பட்டியல்களின் கீழ்மட்டத்தில் பெண்கள் திரட்டப்படுவதைத் தவிர்த்து வெற்றிபெறக்கூடிய நிலைகளில் அவர்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பை அதிகரிப்பதற்கும் ஆண், பெண் வேட்பாளர்கள் மாறி மாறி (M, F, M, F) வரிசைப்படுத்தப்படும் ஒரு வேட்பாளர் பட்டியலாகும் (Gouws and Madesen 2024). இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தல் முறையானது வழக்கமான மூடிய பட்டியல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் செயற்படவில்லை என்றாலும் “zebra list” என்ற அடிப்படைக் கொள்கையை இந்தத் துணை நடவடிக்கைகளில் ஒன்றாக அர்த்தமுள்ள வகையில் மாற்றி பயன்படுத்த முடியும். குறிப்பாக அரசியல் கட்சிகள் தங்களின் மேலதிக உறுப்பினர்கள் பட்டியலை மாறி மாறி வரும் பாலின வரிசைமுறையில் (ஆண், பெண், ஆண், பெண்) கட்டமைக்க வேண்டும். இதன் மூலம் பெண்கள் திட்டமிட்டு கீழ்நிலை அல்லது அடையாள/

குறியீட்டு பதவிகளுக்குத் தள்ளப்படாமல் இருப்பது உறுதி செய்யப்படும். இத்தகைய ஒரு செயன்முறையானது கட்சியின் தன்னிச்சையான முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி ஒதுக்கீட்டு அமுலாக்கத்தில் வெளிப்படைத் தன்மையை வலுப்படுத்துவதுடன் குறைந்தபட்ச சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே பெண்களை நியமிக்கும் நடைமுறையையும் குறைக்கும்.

கொடிகாரா (Kodikara) (2023) குறிப்பிட்டபடி மேலும் உண்மையான பங்குபற்றலை உறுதி செய்யக்கூடிய ஒரு முக்கியத் திரளை (மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய போதுமான எண்ணிக்கை) அடைவதற்காக ஒதுக்கீடு குறைந்தபட்சம் 30 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். முக்கிய தகவலாளர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கப்படும் பெண்களின் விகிதத்தை 10 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர். இது பெண்கள் தங்களது வாக்கு அடிப்படையில் ஆதரவு வட்டங்களை உருவாக்கி அதன் மூலம் இடங்களைப் பெறவும் மேலும் “ஒதுக்கீட்டுப் பெண்கள்” அல்லது “பின் மந்திரினி” என்று பெயரிடப்படுவதால் ஏற்படும் களங்கத்தை எதிர்கொள்ளவும் ஒரு சமத்துவமான பாதையை வழங்கும் என்று அவர்கள் வாதிட்டனர்.

மேலும் ஒதுக்கீட்டு இலக்குகளை (உதாரணமாக முன்மொழியப்பட்ட 50% போன்றவை) நிர்ணயிக்கும்போது இந்த அமைப்பு “சிங்களப் பெண்கள்” என்ற ஒரே பிரிவிற்குள் மட்டும் கவனம் செலுத்துவது மட்டுப்படுத்தாமல் பல்வேறுபட்ட மற்றும் வரலாற்று ரீதியாக ஓரங்கட்டப்பட்ட குழுக்களிடையே அர்த்தமுள்ள பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய வேண்டும். ஒதுக்கீட்டு அமைப்பிற்குள் பல்வகைப்பட்ட அளவுகோல்களை ஒருங்கிணைப்பதன் மூலம் உதாரணமாக மாற்றுத்திறனாளிப் பெண்கள், மலையகத் தமிழ்ப் பெண்கள் அல்லது பிற சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்குப் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்குவது போன்றவை வாய்ப்புகளை மேலும் உள்ளடக்கியதும் மற்றும் சமத்துவமானதுமான முறையில் பகிர்வை உறுதி செய்யும்.

### 8.1.2 அரச நிதியுதவி பெறும் சமூகப் பராமரிப்பு முறைமை

ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளின் சமமற்ற பங்கீடு, பெண்களின் அரசியல் பங்கேற்புக்கு ஒரு குறிப்பிடத்தக்க கட்டமைப்புத் தடையாக எவ்வாறு நீடிக்கிறது என்பதை இந்த ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. சிலர் இரு பொறுப்புகளையும் தனித்தனியாக நிர்வகிக்க முயன்றாலும், மற்றவர்களோ பெண் உறவினர்கள் வழங்கும் ஊதியம் பெறாத ஆதரவை பெரிதும் சார்ந்திருந்தனர். இது, ஒட்டுமொத்த பராமரிப்புச் சுமையைக் குறைப்பதற்குப் பதிலாக, பராமரிப்புப் பொறுப்புகளை ஒரு பெண்ணிடமிருந்து மற்றொரு பெண்ணுக்குத் திறம்பட மாற்றியது. பராமரிப்புப் பொறுப்பை பெண்களால் மட்டும் தனித்தனியாகவோ அல்லது அரசியல் கட்சிகளால் மட்டும் கையாள முடியாது என்பதால், இந்தக் கட்டமைப்புச்

சமநிலையின்மையைச் சரிசெய்ய, சமூகப் பாதுகாப்பில் அதிக முதலீடு செய்வதன் மூலமும், எளிதில் அணுகக்கூடிய, குறைந்த கட்டணங்களுடனான குழந்தை மற்றும் முதியோர் பராமரிப்புச் சேவைகளை வழங்குவதன் மூலமும் தொடர்ச்சியான அரசாங்கத் தலையீடு தேவைப்படுகின்றது.

இத்தகைய சேவைகளை நடைமுறைப்படுத்துவது ஊதியம் பெறாத பராமரிப்புப் பணிகளால் பெண்களுக்கு ஏற்படும் பாலின அடிப்படையிலான சுமையை கணிசமாகக் குறைத்து பெண்கள் அரசியல் வாழ்வில் அர்த்தமுள்ள வகையில் ஈடுபடுவதற்கு அதிக நேரத்தையும் ஆற்றலையும் வழங்கும். இதில் அரச நிதியுதவி பெறும் குழந்தைகள் பராமரிப்பு மையங்கள், பாடசாலைகளுக்குள் விரிவுபடுத்தப்பட்ட குழந்தை பராமரிப்புச் சேவைகள் மற்றும் சமூகம் சார்ந்த முதியோர் பராமரிப்புத் திட்டங்கள் ஆகியவை அடங்கும். அரசியலில் உள்ள பெண்களுக்கு ஆதரவளிப்பதுடன் இந்தச் சேவைகள் மற்ற பெண்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கி பரந்த சமூக-பொருளாதார மேம்பாட்டிற்குப் பங்களிக்கும்.

## 8.2 அரசியல் கட்சிகளுக்கான பரிந்துரைகள்

### 8.2.1 வெளிப்படையான மற்றும் தகுதி அடிப்படையிலான வேட்பாளர் நியமன செயன்முறைகளை நிறுவுதல்

பெண் அரசியல்வாதிகள் பதவிக்கு வருவதற்கு முன்பும் பின்பும் எதிர்கொள்ளும் சவால்களின் மையத்தில் அரசியல் கட்சிகளின் முடிவெடுக்கும் நடைமுறைகள் முக்கிய பங்காற்றுகின்றன. குறிப்பாக வேட்பாளர் நியமன செயன்முறையிலிருந்து தொடங்கி கட்சிகள் வேட்பாளர் தேர்வுக்காக ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் சமமாக பொருந்தக்கூடிய வகையில் தெளிவான, வெளிப்படையான மற்றும் தகுதி அடிப்படையிலான அளவுகோல்களை நிறுவ வேண்டும். அத்தகைய அளவுகோல்கள் தனிப்பட்ட விசுவாசம் அல்லது குடும்ப உறவுகளை விட திறன்கள், அனுபவம் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். இதன் மூலம் ஆண் அரசியல்வாதிகளின் பெண் உறவினர்களையோ அல்லது எளிதில் கட்டுப்படுத்தக்கூடியவர்கள் என்று கருதப்படும் பெண்களையோ வேட்பாளராக நியமிப்பதன் மூலம் ஒதுக்கீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வழக்கமான நடைமுறையைத் தடுக்கும். மாறாக, அனைத்துக் கட்சிகளும் பின்பற்ற வேண்டிய தரப்படுத்தப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் வேட்பாளர் நியமனங்கள் அமைவதை இது உறுதி செய்யும். அரசியல் கட்சிகள் தாங்கள் நியமிக்கும் நபர்கள் தொடர்பிலும் பொறுப்புக் கூற வேண்டியது அவசியமாகும். குறிப்பாக அந்த நியமனங்கள் புறக்கணிக்கும் அல்லது பெயரளவிலான நடைமுறைகளை மீண்டும் உருவாக்கும் பட்சத்தில் இது அவசியமாகும்.

### 8.2.2 கட்சியின் உள்ளார்ந்த அதிகாரக் கட்டமைப்புகளை சீர்திருத்துதல்

வேட்பாளர் பரிந்துரைகளுக்கு அப்பால் கட்சிகள் தங்களின் உட்கட்டமைப்பு அதிகாரக் கட்டமைப்புகளையும் சீர்திருத்த வேண்டும். மேலும் அதிகமான பெண்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவும், அரசியலில் தொடர்ந்து முனைப்புடன் செயற்படவும் ஊக்குவிப்பதற்காக, அரசியல் கட்சிகள் தங்களின் ஆணாதிக்கம் மற்றும் ஆணாதிக்கக் கலாச்சாரங்களை முனைப்புடன் தகர்க்க வேண்டும். இதற்கு கட்சித் தலைமை அமைப்புகளில் உள்ள உயர்மட்ட முடிவெடுக்கும் பதவிகளில் குறைந்தது 50 சதவீதத்தையாவது பெண்கள் வகிப்பதை உறுதிசெய்யும் உறுதியான நடவடிக்கைகள் உட்பட கட்சிப் படிநிலைகளுக்குள் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. பெண்கள் இந்த மட்டங்களில் இடம்பெறாதவரை வேட்புமனுக்கள், வளங்கள் மற்றும் கட்சியின் முன்னுரிமைகள் தொடர்பான தீர்மானங்கள், பெண்களின் நலன்களையும் கண்ணோட்டங்களையும் தொடர்ந்து புறக்கணிக்கும் நிலை நீடிக்கும்.

### 8.2.3 தொடர்ச்சியான பயிற்சி மற்றும் நிறுவன ஆதரவை வழங்குதல்

பெண்கள் அரசியல் பதவிகளை ஏற்றுக்கொண்ட பின் தேர்தலில் வெற்றி பெறுவதை பெண்களின் உட்சேர்க்கையின் இறுதி இலக்காகக் கருதாமல் அவர்களின் அர்த்தமுள்ள உண்மையான பங்களிப்பை ஆதரிப்பது கட்சிகளின் பொறுப்பாகும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் பாலின வேறுபாடின்றி குறிப்பாக முதல் முறையாக தெரிவாகும் பிரதிநிதிகளுக்கும் தொடர்ச்சியான மற்றும் கட்டமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் கட்டாயமாக்கப்பட வேண்டும். பயிற்சியை எப்போதாவது அல்லது வருடாந்த அமர்வுகளாக மட்டுப்படுத்துவதற்குப் பதிலாக கட்சிகள் அவர்கள் பதவியேற்பதற்கு முன்பு அறிமுகப் பயிற்சித் திட்டங்களை வழங்க வேண்டும். அதனைத் தொடர்ந்து மன்ற நடைமுறைகள், கொள்கை உருவாக்கம் மற்றும் நிர்வாக ஆளுமை ஆகியவற்றில் தொடர்ச்சியான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளிக்க வேண்டும். இத்தகைய நடவடிக்கைகள் பெண்கள் வெளிப்புற நபர்களின் ஆதரவை சார்ந்திருக்கும் நிலையை குறைத்து முறையான நிறுவனங்களுக்குள் திறமையான அரசியல் செயற்பாட்டாளர்களாக செயற்படும் அவர்களின் திறனை வலுப்படுத்தும்.

### 8.2.4 தேர்தல் பிரச்சார நிதிக்கு சமமான அணுகலை உறுதிப்படுத்தல்

கட்சி அமைப்புகளுக்குள் பெண்களுக்கு தேர்தல் பிரச்சார நிதிக்கான சமமற்ற அணுகல் பெண்கள் எதிர் கொள்ளும் மற்றொரு குறிப்பிடத்தக்க தடையாக உள்ளது. தேர்தல் பிரச்சார நிதி தொடர்பான ஒழுங்கு விதிகள் இருந்தபோதிலும் ஆண் அரசியல்வாதிகளுக்கு எளிதில் கிடைக்கும் வணிக வலையமைப்புகள் மற்றும் தனியார் நன்கொடையாளர்களிடமிருந்து

